REGISTERED AS NEWSPAPER

# உதயன்

சுடர் :36
கதிர் : 017

கார்த்திகை 28
வள்ளுவர் ஆண்டு 2051

13 டிசெம்பர் 2020
ஞாயிற்றுக்கிழமை

விலை 40 ரூபா
பக்கங்கள் 24+16

செய்தி: 021 493
விளம்பரம்: 021 49



# உடுவில் முழுவதும் முடக்கம்



28 கிராம அலுவலர்கள் பிரிவில் தொற்றாளர்கள் இருக்கும் சாத்தியம்

உடுவிலை ஊடறுக்கும் வீதிகள் ஊடாக பயணிக்கலாம்

பிரதேச செயலர் பிரிவில் உள்நுழைய வெளியேற தடை

04

உண்மையைக் கூறுங்கள்;
பி.சி.ஆர். பரிசோதனை செய்யுங்கள்;

## கொத்தணிக்கு இடமளியாதீர்!

யாழ். குடாநாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ 13
'யாழ். குடாநாட்டில் புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உண்மைகளைக் கூற வேண் 04

## தொற்றாளர் அதிகம்? முடிவு இன்று தெரியும்

யாழ்ப்பாணம், டிசெ. 13
மருதனார்மடம் கொத்தணியின் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகம் எனவும் இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் இன்று வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளில் 104 மாதிரிகள் இன்று மீளவும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. 04

# மருதனார்மடம் சந்தை மற்றொரு கொத்தணியாக மாறும் அபாயம்!!

நேற்றைய சோதனையில் 6 பேருக்கு உறுதி

104பேருக்கு மீளவும் இன்று சோதனை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13
மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை, அக்கரைப்பற்று பொதுச் சந்தை ஆகியவை போன்று மருதனார்மடம் பொதுச் சந்தையும் மற்றொரு கொரோனாக் கொத்தணியாக மாறும் பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 04

## 22ஆம் திகதி முதல் நாடு முடக்கப்படுமா?

*இராணுவத் தளபதி விளக்கம்*

கொழும்பு, டிசெ. 13
நத்தார் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், மக்களின் செயற்பாடுகள் மூலமாக புதிய கொத்தணியொன்று உருவாகும் பட்சத்தில் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று தெரிவித்தார். 04

வவுனியாவில் தொற்று

## சாளம்பைக் கிராமம் தற்காலிக முடக்கம்

வவுனியா, டிசெ. 13
வவுனியா புதிய சாளம்பைக்குளம் கிராமம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் தற்காலிக 04

## சஞ்சீவி

உள்ளே...

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

தசாப்தகால வரலாற்றில்
தங்கக் கடனுக்கான மிகக் குறைந்த வட்டி
8%
இச்சலுகை உங்கள் அருகிலிருக்கும் சம்பத் வங்கிக் கிளையின் சம்பத் ரண்திரிய தங்கக் கடன் இடமிருந்து மட்டுமே.
சம்பத்
ரண்திரிய
தங்கக் கடன் சேவை
அவசரத்திற்கு உதவும் அயலவன்
தற்போது தங்க பவுண் ஒன்றிற்கு ரூ. 68,000 /-
0112 30 30 50 www.sampath.lk

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இயற்கையும் இலங்கையும்

வீட்டுக்குருவி இனம் இலங்கையில் மிக வேகமாக அழிவு, யானைகள் அழிக்கப்படும் பட்டியலில் இலங்கை முதலிடம், 39 தேசிய அடர்ந்த காடுகள் இலங்கையில் அழிவுக்கு உட்படும் நிலை என ஒரே நாளில் மூன்று விதமான பத்திரிகைச் செய்திகள் இவை. ஆனால் இவை அனைத்தும் சொல்லும் தகவல் என்னமோ ஒன்றுதான். இயற்கைக்கும் இலங்கைக்கும் இடையில் பெரும் விரிசல் ஏற்பட ஆரம்பித்து பல காலம். தற்போது அந்த விரிசல் மேலும் வலுப்பெற்றுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி.

வீட்டுக் குருவிகள். எவருக்கும் எந்தத் தொல்லையும் இல்லாமல் அற்புதமாகப் பறந்து திரிந்த அழகிகள். வீட்டுக் கூரைகளில் அவை கூடுகட்டி வாழ்ந்தால் அந்த வீட்டுக்கு வசந்தம் வரும் என்பது அக்கால ஐதீகம். ஆனால் நவீன பயிர்ச்செய்கை முறையும், அதீத இரசாயனங்களும் அந்தக் குருவிகளை விரல்விட்டு எண்ணும் அளவுக்கு இன்று கொண்டுவந்து விட்டுள்ளன, கொன்று தள்ளியுள்ளது. இன்னும் ஒரு தசாப்தத்தின் பின்னர் இந்தக் குருவிகளைக் காண்பதே பேரதிசயமாக இருக்கும்.

வாழிட மோதல்களால் யானைகள் அழிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலாவதாகப் பெயரிடப்பட்டுள்ளது. சுற்றுலாவிகளை அதிகம் ஈர்க்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது. இலங்கையில் இருப்பது ஒன்றும் இத்தாலியக் கட்டடக்கலை அல்ல. இங்குள்ள யானைகளும் இயற்கையும்தான் சுற்றுலாவிகளை இங்கு இழுத்து வருகின்றன. யானைகளின் ஒளிப்படங்கள் இல்லாமல் சுற்றுலாவிகளை ஈர்த்த விளம்பரங்களை எப்போதாவது கண்டிருக்கிறீர்களா?. உண்மையில் அரிதிலும் அரிதான விடயம் இது. அவ்வளவுக்கு யானைகளும் இலங்கையின் சுற்றலாத்துறையும் பின்னிப் பிணைந்தவை. ஆனால், இன்று நாம் செய்துகொண்டிருப்பது என்ன?. தம்மை அறியாமல் எம் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டிருந்த ஓர் உயிரினத்தை அழித்தொழித்துக் கொண்டிருக்கின்றோம். எவ்வளவு துரோகமான காரியம் இது.

அதுபோல்தான் இலங்கையில் காடுகள் அழிக்கப்படும் விவகாரமும். 39 தேசியக் காடுகள் அழிவடையும் நிலையில் இருக்கின்றன. உண்மையில் எம் தலையில் நாமே மண்போடும் செய்தி இது. புவி வெப்பமயமாதலைத் தவிர்க்க வேண்டும் அதற்கு உலக நாடுகள் காடுகளைப் பராமரிக்க வேண்டும் என்று பிரான்ஸின் பரிஸ் நகரில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை போன்ற தீவு நாடுகளை நீரில் மூழ்கிவிடாமல் அவற்றின் இருப்பை உறுதிசெய்வதுதான் இந்த ஒப்பந்தத்தின் ஒரே நோக்கம். ஒரு தீவு நாட்டில் வாழ்பவர்கள் என்ற வகையில் அந்த ஒப்பந்தத்துக்கு உயிர்ப்பைக் கொடுக்க வேண்டியவர்கள் நாம்தான். ஏனெனில் அந்த ஒப்பந்தமே இலங்கையின் இருப்பு. ஆனால் நடப்பது என்ன?. எமது தலையாய கடமைக்கு முரணாக நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். தவறான முன்னுதாரணத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கையும் இயற்கையும் இரண்டறக் கலந்தவை. ஒன்றில்லாமல் இன்னொன்று இல்லை. நாம் அழித்துக் கொண்டிருப்பது இயற்கையை அல்ல இலங்கையை! எம்மை!

# பண்டிகைக் காலத்தில் வெளியில் நடமாடாதீர்

## பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்து



கொழும்பு,டிசெ.13

பொதுமக்கள் பண்டிகைகளை தமது குடும்பத்தாருடன் வீடுகளிலேயே கொண்டாட வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த மாதம் பண்டிகைக் காலம் என்ற போதிலும் வழமையைப் போன்று அதனைக் கொண்டா முடியாது. கோவிட் அச்சுறுத்தலைக் கவனத்தில் கொண்டு பண்டிகைக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் போதும், கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்யும் போதும் தனிமைப் படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

வைரஸ் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாததால், பொதுமக்கள் அனைவரும் அவரவர் இல்லங்களிலேயே சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து பண்டிகைகளைக் கொண்டாடுவது பாதுகாப்பானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## அரச ஊழியர்களுக்கு முழுமையான சம்பளம்

### ஆச்சரியப்பட வேண்டும் என்கிறார் பந்துல



கொழும்பு,டிசெ.13

கொரோனா வைரஸ் காரணமாக, மிகவும் சிரமமான காலத்தைக் கடந்து வரும் நிலையிலும், அரச ஊழியர்களுக்கு அரசு முழுமையான சம்பளத்தை வழங்குவது தொடர்பில் ஆச்சரியப்பட வேண்டும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப் படவில்லை என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக நாடுகளில் கோடிக்கணக்கானவர்கள் தாம் செய்த தொழில்களை இழந்துள்ளனர். தொழில் திணைக்களம் மற்றும் தொழில் அமைச்சரின் தலையீடு காரணமாக தனியார் துறை ஊழியர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் அரைவாசி வழங்கப்படுகிறது.

தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம். வெளிநாடுகளுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வது நின்று போயுள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக மிகவும் சிரமமான காலத்தில் நாம் இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (க-இ)

## யானையின் சடலம் மீட்பு

வவுனியா,டிசெ.13

வவுனியா - ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் காட்டு யானை சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள உழுந்துக் காணி ஒன்றில் யானையின் சடலம் இருப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் தெரிவித்தனர்.

குறித்த சடலம் துர்நாற்றம் வீசுவதால் சில நாள்களுக்கு முன்னரே யானை இறந்திருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ப-110)



## இலங்கை முஸ்லிம்களுக்கு சவூதியில் மூளைச் சலவை?

### ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.13

சவூதி அரேபியாவுக்குச் செல்லும் இலங்கை முஸ்லிம்கள் அங்குள்ள மதபோதகர்களால் மூளைச்சலவை செய்யப்படுகின்றனர் என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபிய போதகர் ஒருவர் இலங்கை முஸ்லிம் ஒருவருக்கு போதிக்கும் வீடியோ தொடர்பிலே அந்த ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட வீடியோவில் சவூதி அரேபிய மதகுரு இஸ்லாமை கைவிடுதல், கொலை செய்தல் போன்ற விடயங்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். குறிப்பிட்ட உரை இலங்கை முஸ்லிம்களுக்கு தமிழில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான உரைகளை தீவிரவாத போக்குடையவர்களைத் தூண்டுவதற்கு பயன்படுத்தலாம் என்றும் ஆணைக்குழு சந்தேகம் வெளியிட்டுள்ளது. (ஐ-இ)

## கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் கைது

வவுனியா,டிசெ.13

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 வயது இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 250 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-18)




Illustrated by
Shumaila Musafer

OfERR (CEYLON)
UNDP

## மருதனார்மடம்...

மருதனார்மடத்தில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கண்டறியப்பட்ட தொற்றாளரின் உறவினர்கள் 6பேருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சிலருக்கு தொற்று இருக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது. இதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியும் தெரிவித்துள்ளார்.

மருதனார்மடம் பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவரும், மருதனார்மடம் சந்தியில் முச்சக்கர வண்டிச் சாரதியாகவும் பணிபுரியும் ஒருவருக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் நேற்றுமுன்தினம் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய உறவினர்கள் 14 பேர் மற்றும் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகள் 384 பேருக்கு நேற்று பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் தொற்றாளரின் 38வயதுடைய மனைவி, 12 வயதுடைய மகள், 3 மற்றும் 6 வயதுடைய மகன்கள், 63 வயது மாமியார், 25 வயதுடைய மைத்துனருக்கும் நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேலும் 104 பேரின் மாதிரிகள் நாளை மீளவும் பெறப்படவுள்ளன. அத்துடன் நேற்றுப் பெறப்பட்ட மாதிரிகளில் 114 மாதிரிகள் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்து வரும் நாள்களில் மேலும் பலருக்கு பரிசோதனைகள் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இவர்களில் சிலருக்கு தொற்று இருக்கலாம் என்று எதிர்வு கூறப்பட்டாலும் எதிர்வரும் நாள்களில் பரிசோதனை முடிவுகள் வெளியாகும் போது மாத்திரம் தொற்று எண்ணிக்கை பற்றி உறுதிபட கூற முடியும் என்று மருத்துவர் சத்தியமூர்த்தி பதிவிட்டுள்ளார்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும் என்று எதிர்வு கூறப்படுதல், மருதனார்மடம் பொதுச் சந்தை மற்றொரு கொத்தணியாக மாறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## உடுவில்...

யாழ்ப்பாணம், டிசெ. 13

உடுவில் பிரதேச செயலர் பிரிவு முழுவதும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மறுஅறிவித்தல் வரையில் முடக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

30 கிராம அலுவர் பிரிவுகளையும் 149 கிராமங்களையும் கொண்ட உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 17 ஆயிரத்து 293 குடும்பங்களைச் சேர்ந்த 53 ஆயிரத்து 8 பேர் வசிக்கின்றனர். இதில் 28 கிராம அலுவலர் பிரிவுகளில் தொற்றாளர்கள் இருக்கலாம் என்று நம்பப்படும் நிலையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவு முடக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இன்று தொடக்கம் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகளைப் பொறுத்து ஒவ்வொரு கிராமம் கிராமமாக முடக்கத்திலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உடுவில் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் பிரதான வீதிகள் ஊடாக மக்கள் பயணிக்க முடியும் எனவும், உடுவில் பிரதேச செயலர் பிரிவினுள் உள்நுழையவோ அல்லது வெளிச் செல்லவோ எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ,5)

## கொத்தணிக்கு...

டும். அதேவேளை, அவர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர் பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும். அதைவிடுத்து மினுவாங்கொட மற்றும் பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப் போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப் போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என யாழ். குடாநாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்' இவ்வாறு கோரியுள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

யாழ். மருதனார்மடத்தில் திடீரென கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனாவை ஒழிக்கும் நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள். இந்தநிலையில், பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடும் பகுதியிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றார்கள் என்ற தகவல் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலும் வெளியில் இருந்துதான் கொரோனா வைரஸ் தொற்றியிருக்கக் கூடும். தொற்றாளர்கள் தாம் சென்று வந்த இடங்கள் தொடர்பில் உண்மைகளைக் கூற வேண்டும். வர்த்தகர்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் நடக்க வேண்டும். அவர்கள் வெளியிடங்களில் வர்த்தக ரீதியில் தொடர்புகளை வைத்திருப்பவர்கள். அவர்கள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனையைச் செய்ய வேண்டும்.

அதேவேளை, புதிய தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும். இந்த விடயத்தில் யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும்; சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் கடமைகளுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மினுவாங்கொட, பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப் போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப் போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்" என்றார். (ம-22)

## தொற்றாளர் அதிகம்...

இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்படும் மாதிரிகளில் அநேகமானவை தொற்று உறுதி செய்யப்பட்டே கடந்த காலங்களில் முடிவுகள் வெளிவந்துள்ளன.

மேலும் அநுராதபுரத்துக்கு 114 மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் முடிவுகளும் இன்றைய தினமே வெளிவரும்.

மருதனார்மடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளில் 283 மாதிரிகள் மாத்திரமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதில் 171 பேருக்கு தொற்று இல்லை என்ற முடிவு கிடைத்துள்ளது. 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2 பேரின் மாதிரிகள் போதவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 104 பேரிடம் மாதிரிகள் மீளவும் பெறப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ஒ,5)

## 22ஆம் திகதி....

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பண்டிகைக் காலத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுமா, தனிமைப்படுத்தல் இடம்பெறுமா என மக்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு வினவுகின்றனர். நாட்டை முடக்குமாறு சிலர் ஆலோசனை வழங்குகின்றனர். அவ்வாறு செய்யவேண்டாம் என மேலும் சிலர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனினும், டிசெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை பிறப்பிப்பதற்கோ, தனிமைப்படுத்தல்களை செய்வதற்கோ இன்று காலைவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

டிசெம்பர் 22 என்ற காலப்பகுதிக்கு இன்னும் 10 நாள்கள்வரை இருக்கின்றன. எனவே, மக்களின் செயற்பாடுகள் மூலமாக புதியதொரு கொத்தணியோ அல்லது கொழும்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தாலோ வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கநேரிடும்.' என்றார். (த44)

## சாளம்பைக்...

மாக முடக்கப்பட்டது. அந்தக் கிராமத்துக்குச் செல்லும் மூன்று வீதிகளிலும் இரும்புக் கேடரால் வீதித் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்திலிருந்து எவருமே வெளியேறமுடியாது. அவ்வாறே எவரும் உட்செல்லவும் முடியாது. வீட்டில் உள்ளவர்கள்கூட வெளியேற முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தகநிலையங்கள் மூடப்பட்டுள்ளன.


புதிய சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய தாயும் அவரது 5 வயதுடைய மகளும் கொழும்பிலிருந்து வந்து தமது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா பெருந்தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

எனினும், முற்பகல் வீதித்தடை ஏற்படுத்தி முடக்கப்படுவதற்கு முன்னரே பலர் தொழில் நிமித்தமும் வேறு தேவை கருதியும் கிராமத்தைவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அது பற்றிய அடுத்தகட்ட நடவடிக்கை ஆராயப்படுகின்றது. (ம-த110,18)

# நடு வீதியில் தீக்குளிப்பேன்!

### அம்பிட்டிய தேரர்



மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பில் வாழ்வதையிட்டு வெட்கமடைகின்றேன். நகரின் பிரதான வீதியில் வெகுவிரைவில் தீக்குளிப்பேன் என்று அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

காணொலி ஒன்றில் அவர் மேலும் தெரிவிப்பதாவது:

மங்களகம பொலிஸ் நிலையத்திலேயே அதிகளவான வழக்குகள் எனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. திசாநாயக்க என்ற அதிகாரியே கூடுதலான வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார். ஒரு சம்பவத்தை நான்காகப் பிரித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பன்குடாவெளி விகாரையை மீளக்கையளிக்க முடியாது என்று செங்கலடி பிரதேச செயலர் எனக்குக் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கேட்கின்றேன். மட்டக்களப்பில் பௌத்த மதத்தைப் பாதுகாக்குமாறு கேட்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-தஇ)

# கொரோனா பானத்தை கைதிகளில் பரிசோதிக்கின்றது இலங்கை அரசு

கொழும்பு, டிசெ. 13

கேகாலை மருத்துவரால் கண்டுபிடிக்கப்பட்டு, அரசு உத்தியோகபூர்வமாக அனுமதியளிக்காத கொரோனா பானத்தை கைதிகளுக்கு வழங்கி பரிசோதனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார என்பவர் அந்தப் பானத்தைத் தயாரித்திருந்தார். சிறைக் கைதிகளில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியவர்களுக்கு அதை வழங்கி பரிசோதிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

இதற்கு கொரோனா ஒழிப்பு படையணியும் இணங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது. இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்த 21 பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்தப் பானம் வழங்கப்பட்டது என்றும் அவர்களில் 14 பேர் குணமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-தஇ)

# கல்வியை பாதுகாக்கக் கோரி கொழும்பில் கவனவீர்ப்பு



கொழும்பு, டிசெ. 13
மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்கக்கோரி, கல்வி அமைச்சுக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

"மாணவர்களின் கல்விப் பாதிப்புக்கு உடன் தீர்வைப் பெற்றுக்கொடு!, அனைத்து மாணவர்களுக்கும் இணைய வழிக் கல்வியை இலவசமாக பெற்றுக் கொடு!, மாணவர்களின் கல்விக்கான இலத்திரனியல் ஊடகத்தின் சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்!" போன்ற காரணங்களை முன்வைத்து அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப-159)

## மாணவர்களுக்கான திருக்குறள் தேர்வு

கிளிநொச்சி,டிசெ.13
கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்படும் மாணவர்களுக்கான திருக்குறள் எழுத்துத் தேர்வு இம்முறையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான வேண்டுகைகளை இதுவரை அனுப்பாத பாடசாலைகள் விரைவாக அனுப்பிவைக்குமாறு தமிழ்ச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த 27 வருடங்களாக தரம் 2 தொடக்கம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்தத் தேர்வை தமிழ்ச் சங்கம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)




## உயிருடன் பிடிபட்டது முதலை

தென்மராட்சி, டிசெ.13
வெள்ளத்துடன் கிராமத்துக்குள் புகுந்த முதலை ஒன்று, கிராம மக்களால் பிடிக்கப்பட்ட சம்பவம் தென்மராட்சி, ஜே/345 கிராம அலுவலர் பிரிவில் மந்துவில் கிழக்கு காரைக் காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை நாய் குரைத்தபோது வீட்டு உரிமையாளர் 'லைற்' அடித்து பார்த்துள்ளார். வீட்டு முற்றத்தில் முதலை இருப்பதைக் கண்ட உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் பிடித்து நைலோன் கயிற்றால் இறுகக் கட்டினார். அது தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த முதலையை கிராமத்தில் இருந்து மீட்டுச் சென்றனர். (ப-159)







## வேலைவாய்ப்பு

உங்கள் குடும்ப வருமானத்தினை உயர்த்திட
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தினை வளமாக்கிட
உங்கள் சொந்த வியாபாரத்தினை வளர்த்திட
விரும்பும் இல்லத்தரசியா நீங்கள்!
அவ்வாறாயின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



தொடர்பு : 076 285 5601

## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 12 . 1964 — இறப்பு 10 . 12 . 2020

### சோமசுந்தரம் கேதீஸ்வரன்

9/7, அன்னசத்திரலேன் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கேதீஸ்வரன் 10.12.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சின்னமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மீனலோஜினியின் அன்புக் கணவரும், கோபிநாத், தர்மினியின் அன்புத் தந்தையும், மாலினிதேவி, சந்திரமோகன், மாங்களேஸ்வரன், சிறிதரன், கமலேஸ்வரன், கௌசலாதேவி, சிவறஞ்சினி, ஜெயகௌரி மற்றும் காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன், கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

**இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 909 0367 — தகவல்: குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 . 11 . 1934 — உதிர்வு 24 . 11 . 2019


### அமரர் தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்

திதி: சதுர்த்தசி

நீங்காத நினைவு தந்து நீண்ட
தூரம் சென்றீர்கள் ஐயா!
ஆண்டொன்று வரும்போதும்
ஓயவில்லை உங்கள் நினைவலைகள்
அன்பான மலர் முகமும்
அழகான முல்லைச் சிரிப்பும்
அகலவில்லை எம் நினைவில்...
ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.
குடும்பத்தினர்

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவும்



மண்ணுலகில் 04 . 04 . 1950 — இறைவனடியில் 13 . 11 . 2020

### அமரர் கிருஷ்ணபிள்ளை இராஜநாயகம்

(காந்தி – ஊரெழு கிழக்கு)

கடந்த 13.11.2020 இல் காலமாகிய எங்கள் குடும்பத் தலைவர் கிருஷ்ணபிள்ளை இராஜநாயகம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து அவரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மேலும் நேரில் வந்தோருக்கும் மற்றும் தொடர்பாடல் மூலமாக தங்கள் அனுதாபங்களையும் உணர்வினையும் வெளிப்படுத்தி நின்ற உள்ளூர் புலம்பெயர் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

▶ தற்போது நிலவும் Covil -19 (கொரோனா) சூழ்நிலை காரணமாக அமரரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் தனிப்பட்ட விதத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமையையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 03 . 1952 — மறைவு 11 . 12 . 2020

### அந்தோனி மரியம்மா

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி மரியம்மா 11.12.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோர்ச் - றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், அந்தோனி அவர்களின் அன்பு பாரியாரும், நீக்கிளாஸ் (இந்தியா), தேவதசகாயம் (கனடா), டேவிட் (டென்மார்க்), பிரான்சிஸ் (சுவிஸ்), லூர்த்தம்மா, டானியேல் (கொலன்ற்), அந்தோனி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அருள்ராஜா (போதகர்), அருள்பிரகாசம் (பிரான்ஸ்), ஜேந்தினி, ஞானசேகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற றஜினி ஆகியோரின் அன்புத் தாயும், மேரிறக்சினி, ஜெயந்தினி, செறின் ஆகியோரின் அன்பு மாமியும், ஜோன்வெஸ்லி சலோமியா, மாலின் காலேப், எப்சிபா, சுலக்‌ஷனா, ஒமேகா, பிறைசி, நிம்ரோன், ஏசியோன், யாசோன், ஜெசியேல், அக்‌ஷான், ஜோய்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 93/5, டேவிட் றோட், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள்ராஜா
077 600 0542

பிரிவில்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

## இந்திய மீனவர்கள் விவகாரம்: 22, 30 ஆம் திகதிகளில் பேச்சு

கொழும்பு, டிசெ. 13

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான துறைசார் பேச்சுக்கள் எதிர்வரும் 22ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள், இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை வலைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

மீனவர்கள் எல்லை தாண்டும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. எனினும், காத்திரமான பலன் கிடைக்கவில்லை. இந்த நிலையில், 2016 மற்றும் 2018 ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற இரண்டு நாடுகளுக்கிடையிலான பேச்சுக்களை மீளஆரம்பித்து, நிரந்தரத் தீர்வுகாண இணக்கம் காணப்பட்டுள்ளன. (த-இ)

## முஸ்லிம்களும் குரல்கொடுங்கள்
### மனோ வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 13

அரசியல் கைதிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பாக, முஸ்லிம் அரசியல் தலைமைகள் குரல்கொடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பிலும், தடுப்புக்காவலில் உள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசி வருகின்றனர். அதற்கு இணையாக முஸ்லிம் அரசியல் தலைமைகளும், தமிழர்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். என்று குறிப்பிட்டுள்ளார்.

(ம, த,இ)

# ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அரசு இடமளிக்க வேண்டும்

## டிலான் பெரேரா எம்.பி. கோரிக்கை

கொழும்பு,டிசெ.13

முஸ்லிம் மக்களின் உடல்களை சுகாதார பரிந்துரைகளுக்கு அமைய அடக்கம் செய்ய இடமளிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிதியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் துயரத்தை நான் உணர்கின்றேன். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வடக்கில் பௌத்த பிக்கு ஒருவரை தகனம் செய்ய முடியாமல் போன சந்தர்ப்பத்தில் உணர்ந்த வேதனையை தற்போது முஸ்லிம் தாய்மார்களும், தந்தைமார்களும் உணர்கின்றனர் - என்றார். (ஐ-இ)





நம்பிக்கையான இடம்
**வாங்குவதற்கு**

- 2 வருடங்கள் அல்லது 30,000 கிமீ AMW இன் உத்தரவாதம்
- [illegible] தொழில்நுட்பச் சான்றிதழ்
- நம்பிக்கையான மைல் அளவும் நம்பிக்கையான பெயர்பெற்ற சேவைகளும்
- நம்பிக்கையான உதிரிப்பாகங்களை வாங்கவும், விற்பனைக்குப் பின்னுள்ள சேவைகளுக்கும் AMW ஐ நாடுங்கள்

நம்பிக்கையான இடம்
**வாங்குவதற்கு**

- 24 மணி பாதுகாப்பான உடனடி கட்டணச் செலுத்தல்
- உங்கள் பழைய வாகனத்துக்கு மிகக் கூடிய பெறுமதி
- வாகன குத்தகை/கடன் செலுத்துவதற்கான முழுமையான உதவிகள்
- இலகுவாக விற்பதற்கு வாகனமுள்ள இடத்திற்கு வந்து பெறுமதி எடுத்தல்

நம்பிக்கையான இடம்
**பழைய வாகனத்தை புதிய ஒன்றுக்கு மாற்றுவதற்கான**

- உங்கள் வாகனப் பெறுமதியை அதிகரிக்கத் தரமான நம்பிக்கையான பாவித்த வாகனத்துக்கு மாற்றல்
- உங்கள் பொருளாதார நிலைக்கேற்ப குறைந்த பெறுமதியுள்ள நம்பிக்கையான வாகனத்துக்கு மாற்றல்

AMW bringing the world to you
அஸ்ஸோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவெட்) லிமிடெட்
[illegible] கொழும்பு 08
0117 580 000
www.automall.lk



# தைரியமானவர்களுக்கு

தைரியமானவர்களுக்கான ஓர் இல்லமாக அலியான்ஸ் விளங்குகிறது – நீங்கள் வளர்ச்சியடைவதற்கான ஓர் இடமாகவும், எங்கள் உலகளாவிய தலைமைத்துவ நிலையை தீவிரமாக வளர்ப்பதற்கான இடமாகவும் அலியான்ஸ் விளங்குகின்றது. உண்மையிலேயே மக்களை கவனிப்பதன் மூலம், சக ஊழியர்களுக்கு ஒத்துழைக்கும், நடைமுறைகளைத் தழுவி, தொழில்துறைக்கு சவால் விடுக்குமளவுக்கு துணிந்த ஓர் கலாச்சாரத்தை நாங்கள் வளர்க்கிறோம்.

வியாபாரத்தை மாற்றுவதற்கும், அளவிடக்கூடிய தாக்கத்தை அடைவதற்கும், வலுவான உறவுகளை வளர்ப்பதிலும் நீங்கள் கைதேர்ந்தவரா? ஆம் என்றால், இது உங்களுக்கான வீடு.

**கிளை முகாமையாளர்** - (நெல்லியடி, சாவகச்சேரி, கல்முனை, திருநெல்வேலி)

**பணி**

அந்தந்த கிளை, நிர்வாக குழுக்கள் மற்றும் நிர்வாக அம்சங்களின் நிதி மற்றும் நிதி சாராத முடிவுகளை வழங்க செயல்பாட்டுத் தலைமையை வழங்குதல். அணிகளை வளர்ப்பதற்கும், அதிக உற்பத்தி செய்யும் விற்பனை சக்தியை உருவாக்குதல் மற்றும் சிறந்த நபர்களுக்கு தலைமைத்துவ திறன்களை வழங்குதல். பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் விற்பனை அணியுடன் தொடர்புடைய வணிக செயல்பாட்டுத் தலைவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும்.

**பணிக்கான நிபந்தனைகள்**

- சிறந்த கல்வி மற்றும் கல்வி பின்னணி.
- காப்பீடு அல்லது நிதி ரீதியான தொழிற்துறைகளில் விற்பனை பிரிவில் குறைந்தது 5 வருட அனுபவம் (நிர்வாக மட்டத்தில் 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டிருத்தல் தனித்துவமான நன்மையாக கருதப்படும்.)
- சிறந்த முகாமைத்துவ திறன் (குழுக்களை உருவாக்குவதிலும் நிர்வகிப்பதிலும் முன் அனுபவம் அவசியமாகும்.).
- சிறந்த வணிக முகாமைத்துவ திறன்களுடன் வலுவான தலைமைத்துவம், ஊக்கமளிக்கும் தன்மை மற்றும் தொடர்பாடல் திறன்களை கொண்டிருக்க வேண்டும்.

பொருத்தமான விண்ணப்பதாரர்கள், மேம்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மற்றும் கவர்ச்சிகரமான ஊதிய தொகுப்புகளுடன் வெகுமதி அளிக்கும் வாழ்க்கையை எதிர்பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை (CV) 2020 டிசம்பர் 27 அல்லது அதற்கு முன்னதாக careers-life@allianz.lk க்கு அனுப்பி வைக்கவும். மின்னஞ்சலின் விடய (Subject) பகுதியில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

அலியான்ஸ் நிறுவனம் வேலைவாய்ப்பு வழங்கும் விடயத்தில் சமத்துவத்தை பேணுவதாக உறுதியளித்துள்ளது. ஆகவே இனம் அல்லது குலம், வயது, தேசியம், மதம், அங்கீனம், பாலியல் நோக்குநிலை அல்லது வாழ்க்கை தத்துவம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. ஆட்சேர்ப்பு பணியில் முழுமையாக பங்கேற்க அல்லது பாத்திரத்தின் தேவைகளை நிறைவேற்ற உங்களுக்கு ஏதேனும் நியாயமான மாற்றங்கள் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள் கருத்துக்களை எங்களுக்கு தெரிவிக்கவும்.

**அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட்**

Allianz

## மணமகள் தேவை

1979-02-07 இல் பிறந்த 5'6" உயர முடைய சைவ சமய கௌரவ குடும்பம், மிருகசீரிடம் 2ம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்த மான மணமகள் தேவை.

தொடர்பு: 077 330 1798

## காணி விற்பனைக்கு

இருபாலை கிழக்கு C.C. பாட சாலை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். (தரகர் தேவை இல்லை)

076 640 0974
077 805 1655

# 32,000 தாண்டியது தொற்றாளர் தொகை

*நேற்று மாத்திரம் 760 பேர் அடையாளம்*

கொழும்பு, டிசெ. 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 32 ஆயி ரத்தைக் கடந்துள்ளது. நேற்றும் 760 பேருக்கு கொரோனாத் தொற்று உறு திப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொடை, பேலிய கொட, சிறைச்சாலை கொத் தணிகள்) இதுவரையில் 28 ஆயிரத்து 379 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றா ளர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 135ஆக அதிக ரித்துள்ளது. இவர்களில் 23 ஆயிரத்து 304 பேர் குண மடைந்துள்ளனர். 8 ஆயி ரத்து 682 பேர் வைத்தியசா லைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம22)

## *2021ஆம் ஆண்டிலிருந்து* பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகமாகும்!

கொழும்பு, டிசெ. 13

உற்பத்திச் செலவு அதிகரிப்புக் கார ணமாக அடுத்த வருடம் தொடக்கம் பேக்கரி உற்பத்திகளின் விலையை அதிகரிக்க எதிர்பார்த்துள்அளோம் என கில இலங்கை பேக்கரி உரி மையாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

இறக்குமதி வெண்ணெய்க்கு (மாஜரின்) இதுவரை காணப்பட்ட 200 ரூபா வரியை அரசு 600 ரூபாவாக அதிகரித்துள் ளதால்தான் இந்த விலை அதிகரிப்பு என்றும் தெரி விக்கப்பட்டுள் ளது. (ம.த.இ)

# கொரோனாச் சாவு: 149ஆக அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரி ழந்தோரின் எண்ணிக்கை 149ஆக அதிகரித்துள்ளது.

இறுதியாக இருவர் கொரோ னாத் தொற்றால் உயிரிழந் துள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர் தன நேற்றிரவு அறிவித் துள்ளார். கொழும்பு 15ஐச் சேர்ந்த 55 வயதான ஆண் ஒருவர் வெலிசறை வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டிருந்த நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்று உறு திப்படுத்தப்பட்டது.

குறித்த நபர் முல்லேரியா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப் பட்ட நிலையில் சிகிச்சை பல னின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். கொரோ னாத் தொற்றுடன் ஏற்பட்ட நியூமோனியா நிலைமையே அவரின் உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, கம்பஹா மாவட்டம், இம்புல்கொட பகு தியைச் சேர்ந்த 66 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள் ளார். அவர் ராகமை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் கடந்த 10ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

நீரிழிவு மற்றும் நியூமோ னியா ஆகிய நோய்களுடன் கொரோனாத் தொற்று ஏற்பட் டமையே இந்த மரணத்துக் கான காரணம் என்று அறி விக்கப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 136 பேர் உயி ரிழந்துள்ளனர். மொத்தச் சாவு எண்ணிக்கை 149ஆக உயர்ந்துள்ளது. (ம-22)

# கொரோனாவால் 60 வயதைக் கடந்த 92 பேர் உயிரிழப்பு!!

கொழும்பு, டிசெ. 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் 3ஆவது அலையில் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை 134 பேர் உயிரிழந்துள் ளனர். அவர்களில் 91 பேர் 60 வயதைக் கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத் தால் 10-30 வயதுக்கு இடைப் பட்ட மூவரும், 31-40 வய துக்கு இடைப்பட்ட நால்வரும், 41-50 வயதுக்கு இடைப்பட்ட 13 பேரும், 51-60 வயதுக்கு இடைப்பட்ட 23 பேரும், 61 -70 வயதுக்கு இடைப்பட்ட 28 பேரும், 74 வயதுக்கு மேற்பட்ட 64 பேரும் இதுவரை உயிரிழந்துள்ளனர். (மத-44)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 02 | 10 |
| 10 | 12 |
| 1946 | 2020 |



### சின்னகுட்டி இரட்ணம் (பட்டு)

கொல்லங்கலட்டி கல்லுப்பிடுங்கியை பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னகுட்டி இரட்ணம் (பட்டு) 10.12.2020 வியாழக்கிழமை நோர்வேயில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2020 திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

கொல்லங்கலட்டி,
கல்லுப்பிடுங்கி.

தகவல்: பெறாமகன்கள்
ச.சிவபாலகிருஸ்ணன்
077 615 4025 (றாஜன்)
ச.சிவபாஸ்கரன் (நோர்வே-சிவம்)

## மரண அறிவித்தல்



### நடராஜா பாக்கியம்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பாக்கியம் நேற்று (12.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சீனியர் சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திர போஸ் (சுபாஸ்), சுபாஜினி (கனடா), வினோதினி (ஜேர்மன்), ஜெயா (பிரான்ஸ்), ஜெயச்சந்திரன் (சந்திரன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோயாதேவி (சறோ), ராஜசேகரன் (கனடா), சந்திரமோகன் (ஜேர்மனி), ராஜசேகரன் (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நல்லம்மா, காலஞ்சென்றவர்களான தவமணி, வவி மற்றும் தவயோகராஜா, சிசிலியா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத் துனியும், தர்சுதன், கசோலினா, ஜனனி, தருணி, கௌசிக் ஆகியோரின் பேர்த்தியும், சாரு சுகானா வின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டிதர் மாணிக்கத் தியாகராசா வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்



### திருமதி சுதாகரன் ஜனனி.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதாகரன் ஜனனி நேற்று (12.12.2020) காலமானார்.

அன்னார் சுதாகரனின் அன்பு மனைவியும் தர்சிகா, நிவேதித்தியனின் அன்புத் தாயாரும் ஈஸ்வரதாஸ், சிவகலா தம்பதியரின் பாசமிகு மகளும், மகாதேவன் மருக்கொழுந்து தம்பதியரின் இளைய மருமகளும்,ஜெயந்தன், ஜெனித்திரா, ஜெனார்த்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், டினோகா (யசோ), றமேஸ் மகிளினி, கிருபாகரன், சுமதி, ஜெயந்தி, வசந்தி ஆகியோரின் மைத்துனியும், சுந்தரவடிவு, குணலிங்கம், பவானந்தன், ஸ்ரீகந்தராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2020) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கு.பிரகாஸ் : 076 103 7060
ம.சுதாகரன் : 077 478 7826

தகவல்:
குடும்பத்தினர்.

## அரையிறுதி

லங்கா பிறீமியர் லீக் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமா கின்றன. இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதி யில் கொழும்பு மற்றும் காலி அணிகள் மோதவுள் ளன. இரவு 7.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமா கின்றது (ம)

# ஒன்றாகப் பயணிப்போம் வாருங்கள்

## தமிழ் தேசியக் கட்சிகளுக்கு செல்வம் எம்.பி அழைப்பு

மட்டக்களப்பு, டிசெ.13

அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு குடையின் கீழ் பயணிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

மற்றவர்களை ஒற்றுமைப்படுத்தி விட்டு தங்களது தனித்துவத்தைப் பேணவேண்டும் என்று நினைத்தால் அதில் வெற்றி பெறமுடியாது. தற்போது வடகிழக்கில் தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் எட்டுக் கட்சிகள் ஒன்றிணைந்துள்ள நிலையில் அவர்கள் அனைவரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இணைப்பதா அல்லது வேறு ஒரு குடையின் கீழ் இணைப்பதா என்பது குறித்து சிந்தித்து வருகின்றனர் - என்றார். (ப)



### சிறுவர் மேம்பாட்டு மையம் திறப்பு

கிளிநொச்சி,டிசெ.13

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் புன்னகை பூமி சிறுவர் மேம்பாட்டு மையம் ஒன்று நேற்று திறக்கப்பட்டது.

இந்த சிறுவர் மேம்பாட்டு மையத்தின் ஊடாக சிறுவர் மேம்பாடு, இயற்கை பாதுகாப்பு, குடும்ப வலுவூட்டல் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டார். (ஐ-6)

# கிளி.உருத்திரபுரத்திலும் முளைக்குமா விகாரை?

யாழ்ப்பாணம், டிசெ.13

உருத்திரபுரம் சிவன்கோவிலின் ஆய்வின் நிறைவில் அங்கு விகாரை அமைக்கப்படுமா? என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள சோழர் காலத்து சிவன் கோவிலான உருத்திர புரீஸ்வரர் ஆலயத்தின் காணிக்குள் உள்ள பகுதி கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தொல்லியல் திணைக்களம் மரபுரிமை சார்ந்த பிரதேசம் என அடையாளப்படுத்தி அதைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

அங்கு அகழ்வாராச்சியை மேற்கொள்வதற்காக புத்தசாசன அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டு வரும் ஜனவரி மாதம் அகழ்வாராச்சி மேற்கொள்ளப்படவுள்ளது. ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அங்கு ஏதாவது பௌத்த வரலாற்று எச்சங்கள் காணப்படுமாயின் அந்த இடத்தில் புதிய விகாரை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ப-214)

# வயல் பகுதியில் கைக்குண்டு மீட்பு

மருதங்கேணி,டிசெ.13

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட சங்கத்தார் வயல் பகுதியில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த காணியில் கைக்குண்டு இருப்பதை அவதானித்த இளைஞர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் குண்டை மீட்டுள்ளனர். (ஐ-160)

# ரயில்வே திணைக்களத்தில் 8,000 தொழில் வெற்றிடங்கள்

கொழும்பு,டிசெ.13

ரயில்வே திணைக்கள சேவையில் 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் பதவிக்கு மாத்திரம் 366 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று ரயில்வே நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

ரயில் சேவையில் காணப்படும் குறைபாடுகளுக்குத் தீர்வு காண, ரயில்வே திணைக்களம் உரிய நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கவில்லை. ரயில்வே திணைக்களத்தில் தற்போது 23 ஆயிரம் பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் 8 ஆயிரம் சேவை பிரிவுகளுக்கு இன்னும் வெற்றிடம் நிலவுகிறது (க-இ)

# காணி அபகரிப்பு பற்றி உறுப்பினர்கள் ஆராய்வு

வவுனியா, டிசெ. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் அபகரிக்கப்படுகின்ற தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையாலும், தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய, சட்டவிரோத தொழில்களாலும் எமது மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான ப.சத்தியலிங்கம் மற்றும் முன்னாள் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் இதுபற்றிக் கலந்துரையாடியுள்ளனர்.

மகாவலி (எல்) வலய காணி அபகரிப்பு, கேப்பாப்பிலவு காணி அபகரிப்பு மற்றும் கோத்தபய கடற்படை முகாமுக்கென அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் 617 ஏக்கர் காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் பேசப்பட்டன. (த-246)

# சேவையில் ஈடுபட்ட அன்றே பழுதானது நெடுந்தாரகை

## பதில் சேவையில் குமுதினி

யாழ்ப்பாணம், டிசெ. 13

நெடுந்தீவுக்கான அரச பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்ட நிலையில் நெடுந்தாரகை பயணிகள் படகின் போக்குவரத்துச் சேவை கடந்த 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எனினும் சேவையை ஆரம்பித்த அன்றைய தினமே நெடுந்தாரகை பழுதானதால் பதில் படகுச் சேவையாக குமுதினி ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தாரகை படகை, சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான எரிபொருளை வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் குறித்த படகுச் சேவை ஆரம்பமானது. எனினும் இயந்திக் கோளாறு காரணமாக சேவையை ஆரம்பித்த அன்றைய தினமே நெடுந்தாரகையின் சேவை நிறுத்தப்பட்டது. நெடுந்தீவிலிருந்து வரும்போது நெடுந்தாரகை பழுதானது என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது 3 சேவைகளில் குமுதினி ஈடுபட்டுள்ளது. (ப)

# கொரோனா அச்சம்: பயணிகள் மீது சோதனை

சாவகச்சேரி டிசெ.13

வெளி மாவட்டங்களில் இருந்து பேருந்துகளில் வருவோர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இறக்கப்பட்டு, சுகாதார நடைமுறையுடன் பயணிப்பதை உறுதிப்படுத்திய பின்னரே பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்றது. சுகாதாரப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து அந்தச் சோதனைகளை மேற்கொண்டனர். (ப-9)

### பதவி விலகுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, டிசெ. 13

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் பொதுச் செயலாளர் பட்டலி சம்பிக்க ரணவக்க தனது பதவியை இராஜினாமா செய்கின்றேன் என்று அறிவித்துள்ளார். புதிய அரசியல் மற்றும் சமூக சக்தியைக் கட்டியெழுப்பும் பொருட்டு பதவி விலகியுள்ளேன் என்று சம்பிக்க குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# வெள்ள நிவாரணம் கோரி படையெடுக்கும் மக்கள்

## தென்மராட்சியில் சம்பவம்

சாவகச்சேரி,டிசெ.13

தென்மராட்சியில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பலர் தமக்கு நிவாரணம் கோரி பிரதேச செயலகத்துக்கு படை எடுத்துள்ளனர்.

பிரதேசத்தின் 60 கிராம அலுவலர். பிரிவுகளில் உள்ள அனைத்து மக்களும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராம மட்ட அலுவலர்கள் தமக்குத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நிவாரணம் பெற்றுக் கொடுக்கின்றனர் என்றும் தமக்கும் நிவாரணம் வேண்டும் என்றும் அந்த மக்கள் பிரதேச செயலகத்துக்குப் படையெடுத்துள்ளனர். (ப-9)



வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் மரநடுகை வாரத்தின் முதல்நாள் நிகழ்வில் கல்வீரங்குளத்தின் கட்டகாடு பகுதியில் 350 மரக்கன்றுகள் நேற்று நடுகை செய்யப்பட்டன. (ஐ-110)

# சிறைக்குள் சர்வதேச சதித்திட்டம்; இதுதான் தேசிய பாதுகாப்பா?

## ருவன் விஜேவர்தன கேள்வி

தேசிய பாதுகாப்பைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு தனது ஆட்சியில் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்படும் சர்வதேச சதித்திட்டத்தை கட்டுப்படுத்த முடியாமலுள்ளது கேலிக்குரியது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதுள்ள அமைச்சர்கள் சிலர் நாட்டுக்கு எதிராக மஹர சிறைச்சாலைக்குள் சர்வதேச சதித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது எனக் கூறுகின்றனர். தேசிய பாதுகாப்பைப் பற்றிப் பேசும் இந்த அரசாங்கம் தமது ஆட்சியில் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்படும் சர்வதேச சதித்திட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையிலுள்ளனர். மஹர சிறைச்சாலையில் இடம்பெற்றதைப் போன்று வெலிக்கடை சிறைச்சாலையிலும் 20 க்கும் மேற்பட்டோர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு நாம் தயாராக வேண்டும் - என்றார். (ஐ)

# மரண அறிவித்தல்

## திரு.தம்பையா தியாகராசா

( பிரபல வர்த்தகர் -கஜன் சென்றர் மற்றும் முன்னாள் திலகா ஸ்ரோர்ஸ், மீனா அரிசி ஆலை வேப்பங்குளம், வவுனியா ஆகியவற்றின் உரிமையாளர்)



மலர்வு 16.06.1943 உதிர்வு 11.12.2020

யாழ் அனலைதீவை பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் டொரோண்டோ - கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தியாகராசா அவர்கள் 11.12.2020 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா மீனாட்சி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கஜேந்திரன் ( இந்திரன் ) மற்றும் சுபாஜினி, ஞானேந்திரன் (ஞானி - கனடா ) உஷாராணி ( கனடா ) ஆகியோரின் அன்புத் தந்தையும் குஷக்குமார், பகிரதி ஆகியோரின் அருமை மாமனாரும் பராசக்தி (அமெரிக்கா) காலஞ்சென்றவர்களான பூரணம், மயில்வாகனம், தனலட்சுமி மற்றும் லோகாம்பிகை ( கனடா ) வன்னியசிங்கம் ( கனடா ) மனோகராணி ( கொழும்பு ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் செல்லம்மா ( கனடா·) கருணா நிதி ( கனடா ) சிவகுமார் ( ஜேர்மனி ) சூரியகலா ( கனடா ) மங்களேஸ்வரி (கனடா ) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சகீரா, ரிஷிகன், வஷிகன், மாயா, கஜன், ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக கனடாவில் குறிப்பிட்ட நபர்களுடன் மட்டுமே இடம்பெறுவதுடன் 16.12.2020 புதன்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 9 மணிவரையும் பார்வையிட முடிவதுடன் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2020 வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 10.30 மணிவரை கனடாவில் இடம்பெறும். (மேற் குறிப்பிட்ட நேரங்களில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான நேரடி காணொலியில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் )

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் - ஞானி தியாகராசா** +4167284835 **கனடா**
**மகள் - சுதா தியாகராசா** +6475509516 **கனடா**
**மகள் - உஷா தியாகராசா** +4168759333 **கனடா**

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 10 . 1951 மறைவு 12 . 12 . 2020

## திருமதி அழகரத்தினம் சிவந்தமலர்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் தேவாலய வீதி, குளப்பிட்டி கொக்குவிலையும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் சிவந்தமலர் நேற்று (12.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அழகரத்தினத்தின் அன்பு மனைவியும், குமாரகுலசிங்கம் (சுவிஸ்), கைலாயநாதன் (சுவிஸ்), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதா (பிரான்ஸ்), சுஜதா, அனுசா, ஜெகதீபன் (செல்வா என்ரபிறைஸ்), ஜெயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சுபாகரன் (பிரான்ஸ்), பத்மவேல் (காலஞ்சென்ற) மதிஜனன், அபிராமி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்ஷன் (பிரான்ஸ்), தனுசன் (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்), சயின் (கனடா), ஜெனுனன் (கனடா), ஷானுஜா, அழகேஸ், சங்கீத், யனோஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணயளவில் அவரது இல்லத்தில் (தேவாலய வீதி, குளப்பிட்டி கொக்குவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி, குளப்பிட்டி கொக்குவில்
**ஜெகதீபன்** (இலங்கை - 075 069 8651)
**மதிஜனன்** (இலங்கை - 077 672 0527)
**ஜெகதா** (பிரான்ஸ் - 0033 769 156 778)
**ஜெயராஜ்** (பிரான்ஸ் - 0033 767 748 293)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



மண்ணுலகில் 29 . 04 . 1936 விண்ணுலகில் 10 . 12 . 2020

## திருமதி பெல்சிட்டா ராஜா டி.கொஸ்டா

Mrs. Felicita Raja De Costa

யாழ். சுண்டுக்குளி அச்சுக்கூட வீதியை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பெல்சிட்டா ராஜா டி.கொஸ்டா கடந்த 10.12.2020 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை (கிளாக்கர், புனித பத்திரியார் கல்லூரி) அன்னம்மாள் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் இராஜ டி கொஸ்டா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஆன் சாந்தி பாஸ்கரன் (Londan), லொயலா சாந்தி மோகன் (France) ஆகியோரின் அன்பு தாயும், அல்லிராஜா பாஸ்கரன் (Londan), திருமதி தயாணி மோகன் (France) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பி.எல்.பற்றிக் (மேலதிக அரசாங்க அதிபர்), காலஞ்சென்ற பி.சி. அன்டனி (கொமர்ஷல் வங்கி), காலஞ்சென்ற திருமதி ஜோசபின் றொசைறோ, திருமதி லூட்ஸ் இம்மானுவேல் (Londan), காலஞ்சென்ற ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

திங்கட்கிழமை (14.12.2020) காலை அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித கொஞ்சேசி மாதா ஆசன கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 722 4001

தகவல்:
குடும்பத்தினர்

## Pharmacist தேவை

Pharmacy License உடைய ஒருவர் எமது Pharmacy இற்கு தேவை.
கவர்ச்சியான சம்பளம் மற்றும் சலுகைகள்.

074 073 6464

## RACK விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள
**சுப்பர் மார்க்கெட்றக்**
உடனடி விற்பனைக்குண்டு.

074 079 6464

## Marketing Executive

Insurance துறையில் மூன்று வருட அனுபவம் மிக்க அலுவலகத்திலிருந்து பணியாற்றக்கூடிய பெண் ஊழியர் தேவை.

076 430 8010

## ENGLISH PERSONAL CLASSES

**ஆங்கிலம் பிரத்தியேக வகுப்பு**

அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 658 9443 யாழ்ப்பாணம்

## பாடசாலை அதிபர்களுக்கு

2021 ஆண்டுக்கான பாடப்பதிவுப் புத்தகங்கள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன தேவையான பாடசாலை அதிபர்கள் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்

**ஷாம்பவி பதிப்பகம்**
265, கஸ்தூரியார் வீதி,
(கிருபா லேணர்ஸ் முன்பாக) யாழ்ப்பாணம்.
021 222 4143, 077 618 4425

## தேவை

Show Roow or Store இற்கு
யாழ்நகரில் இடம் தேவை

076 821 9414

## உடனடி வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கிவரும் பிரபல்யமான தொழிற்சாலை ஒன்றின் சிற்றுண்டிச் சாலைக்கு சமையல் உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
உடனடியாக தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: Mr.மொகமட் சரீம்
077 7996 618

## அறைகள் வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Faculty இற்கு அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 அறைகளையும் 4 குளியலறைகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (Prefer University Female Students)
வாடகை 25,000/=

076 243 0394

## உதவி கணக்காளர் தேவை

**இடம்:** யாழ்ப்பாணம் கந்தர்மடம்
**தகைமை:**
- ★உயர்தரம் முடித்திருக்க வேண்டும்.
- ★முழுமையான or பகுதி தகைமை AAT / CMA / Diploma
- ★Ms Excel & Word தெரிந்திருத்தல் நன்று
- ★சம்பளம் பேசித்தீர்க்கலாம்

CV: yogajaffna001@gmail.com
Phone: 077 926 1129

## வேலைவாய்ப்பு

**யாழ்நகரில் இயங்கும் சுப்பர் மார்கட் ஒன்றிற்கு**

1) முகாமையாளர்
2) மேற்பார்வையாளர்
வயது 28 - 45. ஆண் மட்டும்
3) விற்பனை உதவியாளர்
வயது 20 - 32. ஆண்கள் மட்டும்
தேவைப்படுகின்றனர்
நேர்முகத்தேர்வு: 14.12.20 - 18.12.20
காலை 10 - 1 மணிவரை

தொடர்புகளுக்கு:
இல.175, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
077 477 3481

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கு வதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்து வதற்காகவும் 01.02.2021 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்காக தகைமை உடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சேவை நிபந்தனைகள்

1. இந் நியமனமானது ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.
2. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள், தொழிற்துறை திணைக்களம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கின்ற நிறுவனங்கள் முதலியவற்றால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பாக தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் இவ் வழக்குகளில் முன்னிலையாதல் வேண்டும்.
3. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ. மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.
4. சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக வாரத்தில் கூடுதலான தடவைகள் அலுவலகத்திற்கு வருகை தந்து சட்ட ஆலோசனைகளை வழங்குதல் விரும்பத்தக்கதாகும். (குறைந்த பட்சம் வாரத்தில் மூன்று தடவைகள் சமூகமளித்தல் வேண்டும்).

### அடிப்படைத் தகைமைகள்

1. உயர் நீதிமன்ற சட்டதரணியாக சத்தியப்பிரமாணம் செய்து குறைந்தது 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. உள்ளுராட்சி மன்றங்கள் தொடர்பான விடயங்களில் முன்னனுபவமுள்ளவராக இருத்தல் , விரும்பத்தக்கது.

### தெரிவு செய்யப்படும் முறை

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் முலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"முதல்வர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

### விண்ணப்ப முடிவுத்திகதி 31.12.2020

### கொடுப்பனவு விபரம்

நீதிமன்ற அமர்வு ஒன்றிற்கு ரூபா 1.250
எழுத்து மூல சமர்ப்பணம் ஒன்றிற்கு ரூபா 7.000
ஆட்சேபனை சத்தியக்கூற்று விபரக்கூற்று ஒன்றிற்கு ரூபா 7.000
வழக்குக்கான பிராது ரூபா 7.000
மறுமொழி ஒன்றிற்கு ரூபா 7.000
இக்கொடுப்பனவு தொகைகள் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**
**11.12.2020**

**முதல்வர் மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்**

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு காணியும், யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்பு காணியும், வீடும், யாழ் நாவலர் வீதியில் 2 1/2 பரப்பு காணியும் வீடும், கொக்குவில் சந்திக்கு அருகில் 2 1/2 பரப்புக் காணியும் வீடும், யாழ். திருநெல்வேலி கலாசார வீதியில் 10 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 232 535

## ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலிக்கு அருகாமையில் வீட்டில் வந்து 6 வயது பிள்ளைக்கு பாடம் கற்பிக்க கூடிய முன்பள்ளி ஆசிரியர் அல்லது A/L முடித்த பெண் ஆசிரியர் விரும்பத்தக்கது.
ஓரளவு ஆங்கிலம் பேசக்கூடியவர் நல்லது

தொடர்புகளுக்கு: 077 158 9883

## காணி விற்பனைக்கு

தென்மராட்சி வேம்பிராய் பகுதியில் கனகம் புளியடி புத்தூர் பிரதான வீதியில் இருந்து 100 m இல் 50 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 037 5429

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள Sisil குளிர் சாதனப்பெட்டி மற்றும் பெண்களுக்கான ஓடக்கூடிய நிலையில் உள்ள லூமாலா சைக்கிள் விற்பனைக்கு.

தொடர்பு: 077 400 2382

## விற்பனைக்கு

ஒரிஜினல் சணல் கிடாய் குட்டிகள், ஜெசி இன கன்னி பசுமாடு மற்றும் 3 மாத ஊர்க்கோழி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 400 2382

## விஞ்ஞான பாட வகுப்புக்கள்

பாடசாலை ஆசிரியரினால் நடாத்தப்படும்
- ★தரம் 06-11 வரையான மாணவர்களுக்கான துரித மீட்டல்
- ★2021 ஆம் ஆண்டு தரம் 06 இல் கல்வி கற்க உள்ள மாணவர்களுக்குமான
- ★Zoom மற்றும் குழு வகுப்புக்கள்

**ஆரம்பம்**
**14.12.2020- திங்கட்கிழமை**
**(எப்பிரதேசத்தவர்களும் பங்குபற்றலாம்)**

தொடர்பு - 076 347 7188

## வேலையாள்கள் தேவை

**நெல்கொள்வனவு மையத்திற்கு**
மூன்று வருட முன் அனுபவமுள்ள மூன்று வெற்றிடங்கள் தேவைப்படுகின்றது.
- ➤ கிளிநொச்சி நகரத்தை அண்மித்த ஆண்கள் விரும்பத்தக்கது.
- ➤ வயது எல்லை: 32 - 45

077 477 3749

## Jaffna வில் முதன்முதலில்

யாழ்-கொழும்பு பொதிகள் சேவைகள் வழமைபோல் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.
பொய் வதந்திகளை நம்ப வேண்டாம்.
இத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பார்சல்களை அனுப்பவும்.

தொடர்பு:
021 2222 145, 011 254 3309

## பணிநிலை வெற்றிடம்

காப்புறுதித்துறையில் 2 வருட அனுபவம் உண்டா?
1. நீங்கள் குழுத்தலைவராக பணிபுரிய விரும்புகிறீர்களா
ஆம் எனில் நிரந்தரமா? நிரந்தரம் அல்லாதது?
2. எழுதுவினைஞர் தேவை.

076 711 2102

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ். சுண்டுக்குளி, நல்லூர் ஆகிய இடங்களில் வீட்டு சமயல் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் 20,000/= - 25,000/=

தொடர்பு: 074 122 0680

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி நகரமத்தியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 239 5805

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி கிணறுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 702 3565

## வீடு விற்பனைக்குண்டு

கொக்குவில் கிழக்கு, பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

076 702 3565

## வீடு வளவு விற்பனைக்கு

மானிப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள 4 பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு

077 421 3305, 077 439 4231

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**
076 568 4346

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கபு, கொய்... மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்க... செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், ப... டொமினிக் மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறு... றம்புட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, ... அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வா... சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவே... சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகம... அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றில... மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மா... ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்...
கிளை:
K.K.S. வீதி, இணுவி...

## Jaffna வில் முதன்முதலில்

**RENT A CAR**
**Melbourne one (Pvt) Ltd**
அனைத்து வித வாகனங்களும் வாடகைக்கு உண்டு.
- ★ வேன்
- ★ கார்
- ★ BMW Car (Wedding hire)

**Swetha - 0777 345 546**
**Vikram - 0777 887 305**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ சென்ஜோண்ஸ் கல்லூரியின்
**2020 ஆம் ஆண்டிற்கான**
**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில்**
**177 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்த
**மகேந்திரராசா பிருந்தாபன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம் மேலும் அவருக்கு கற்பித்த
**அதிபர், ஆசிரியர்களுக்கும்**
நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.
பாராட்டி வாழ்த்துவோர்:
**அப்பா, அம்மா, அண்ணா, அக்கா.**





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

REGISTERED AS NEWSPAPER

# உதயன்

சுடர் :36 | கதிர் : 017
கார்த்திகை 28 வள்ளுவர் ஆண்டு
13 டிசெம்பர் 2020 ஞாயிற்றுக்கிழமை
விலை 40 ரூபா | பக்கங்கள் 24+16
செய்தி: 021 493 0000
விளம்பரம்: 021 493 1111





அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த
நகைகள்
அறுதியாக
போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில்
அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**
**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0776 445322 இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

**ஏராளமான விசேட சலுகைகள்**

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | வவுனியா | 074 0920313 |
| கல்முனை | 071 0870663 | நெல்லியடி | 074 0920357 |
| ராகலை | 071 0870703 | சங்கானை | 074 0920317 |

# Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

## STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை


# ST. JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCY

Applications are hereby invited from qualified persons to teach:

- Biology (Tamil/English Medium) - A/L
- Science (English Medium) - Grade 6-11
- Health & Physical Education (English Medium) - Grade 6-11
- English Language - Grade 6 - A/L

Please send your complete CV with contact details of two non-related referees by registered post to the address given below on or before 18th December, 2020.

Only shortlisted candidates will be called for interview.

The Principal
St. John's College,
Jaffna


# 50% அன்னை நாகா பூட் சிற்றியில்

யாழ். கிளையில்

## விசேட விலைக்கழிவு



பண்டிகைகால விஷேட விலைக்கழிவு

- Kitchen Items
- Baby Items
- Gift & Toys

up to 50% Discount

இச் சலுகை வரும் 31.12.2020 வரை

அன்னை நாகா பூட் சிற்றி

ANNAI NAGAA FOOD City

175, K.K.S.Road. Jaffna.
021 739 0192, 021 739 0194

# முதலாம் ஆண்டு நினைவு நாளும் மதிய போசன உபசாரமும்



அமரர்

## விநாயகமூர்த்தி யோகானந்தவேல் [MA]

(முன்னாள் சாய் சங்க தலைவரும், முதியோர் இல்ல நடத்துனரும்)


சிவபதமடைந்த வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், பிருந்தாவனம் ஊரிக்காடு, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விநாயகமூர்த்தி யோகானந்தவேல் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நாளை (14-12-2020) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சமய நிகழ்வு அனுட்டானங்களிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

பிருந்தாவனம்,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை
தொலைபேசி இலக்கம்.
0212265551,0778106857.

குடும்பத்தினர்.
(வல்வை முதியோர் இல்லம்)

# 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
16 . 02 . 1939



மறைவு
11 . 11 . 2020

## அமரர் கந்தையா சர்வேஸ்வரன்

(முன்னாள் வரி சேகரிப்பாளர் - சுன்னாகம் Town Council)

கடந்த 11.11.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் துயரச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கடவைப்புலம் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
077 697 2566

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 06 . 1923



இறப்பு
08 . 12 . 2020

## திருமதி நாகேஸ்வரி நகுலேசு

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். மானிப்பாய் கட்டுடையை வதிவிடமாகவும், பிரித்தானியா Cornwall ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நகுலேசு அவர்கள் 08-12-2020 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராமலிங்கம் நகுலேசு அவர்களின் அன்பு மனைவியும், பத்மினி தில்லை அவர்களின் அன்புத் தாயாரும், Dr. நாகலிங்கம் தில்லை அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 17-12-2020 வியாழக்கிழமை அன்று மு.ப 09.00 மணிமுதல் மு.ப 10.00 மணியளவில் UK Cornwall இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்மினி தில்லை - மகள்
• Phone : +441872274111

தகவல்:
குடும்பத்தினர்
89, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 13.11.2020 அன்று இறைபதமடைந்த
எமது குடுமத்தின் ஆணிவேரான

## சின்னையா தங்கமலர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை எமது வீட்டில் நடைபெறவுள்ளது. எனவே அன்றைய தினம் நடைபெறும் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுவதோடு, எமது தாயாரின் இறப்பினை கேள்வியுற்று பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரில் வந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மருதங்கேணி கிராமிய அமைப்பு, கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கம், விளையாட்டுக் கழகம், சனசமூக நிலையம் மற்றும் மாதர்சங்கம் முதலான அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சின்னையா தம்பிஐயா
மருதங்கேணி வடக்கு.
077 353 5425

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# உடல் அடக்கம் தொடர்பில் விஞ்ஞான முடிவு அவசியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.13

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவரின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்துவது அத்தியாவசியமானது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தேவையான நடைமுறைகள் தொடர்பில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அந்தச் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (வ-இ)

## விதிகளை மீறிய பஸ்களின் அனுமதி ரத்து!

கொழும்பு, டிசெ.13

சுகாதாரச் சட்டங்களை மீறிய 30க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்களை அரசாங்கம் ரத்து செய்துள்ளது என இராஜாங்க போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

## தொற்றுப் பரவும் சந்தர்ப்பம் மேல் மாகாணத்தில் அதிகம்

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகம் உள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் வைரஸ் அதிகமாக பரவினாலும் புதிய நோயாளிகள் மற்ற பகுதிகளிலும் பரவலாக அடையாளம் காணப்படுகின்றனர்.

நாட்டில் இதுவரை 30 ஆயிரத்துக் கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பண்டிகைக் காலத்தில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## 8 கர்ப்பிணிகளுக்கு கொரோனா

களுத்துறை, டிசெ.13

களுத்துறை, அட்டலுகம பிரதேசத்தில் சுமார் 80 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரப்பிட் என்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

அதில் 8 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது என பொது சுகாதார பரிசோதகர்களின் ஒன்றியத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். (வ-இ)



## விவசாய காணிக்குள் நுழைய மீளவும் தடை

மட்டக்களப்பு, டிசெ.13

குச்சவெளி விவசாய காணிகளில் பிரவேசிக்க தொல்பொருள் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு 2021 பெப்ரவரி மாதம் 3ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலை யில் நேற்று எடுக்கப்பட்டபோதே இடைக்கால தடை உத்தரவு நீடிக்கபட்டது. (வ-40)

**விற்பனைக்கு**

ஜேர்மன் செபெட் 35 நாள்கள் நிரம்பிய குட்டிகள் விற்பனைக்கு

தொடர்பு: மாலையில்

077 251 6160

**வாடகைக்கு**

கொக்குவில் கிழக்கில் Medieal Faculty இற்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 அறைகளையும் 4 குளியலறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை 25,000/=

(Prefer University Female Student)

071 040 8301

**தேவை**

குழந்தை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை.

இடம்: ஆறுகால்மடம் (யாழ்நகர எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

076 066 2768

**காணி விற்பனைக்கு**

அச்சுவேலி மேற்கு,குட்டியபுலம் வசாவிளானில் அமைந்துள்ள 86 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

077 321 1135, 076 265 6004

**IELTS CLASSES**

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் **IELTS** (Academic and General), A1 UK Exame (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

Guarnteed to 7.5 in IELTS Exame

**Online Classes**

Please contact:

Tel:077 780 3970 / 074 007 1970

**ISOFT FRIENDS**

எமது நிறுவனத்திற்கு

Senior Software Engineer (web)

Associate Software Engineer(Web / Mobile தேவை.

CV அனுப்பவேண்டிய மின் அஞ்சல் முகவரி:

info@isoftfriends.com

021 221 3200

**மீண்டும் யாழ்நகரில்**

EXPONET

உங்கள் london செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

Study in UK

JANUARY / FEBRUARY ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

EXPONET Overseas Consultants

LONDON METROPOLITAN COLLEGE

345 KASTHURIAR ROAD, JAFFNA

021 435 5114

071 415 0995

EXPONET9@gmail.com



**காணிகளும் வீடுகளுதும் விற்பனைக்கு தேவை**

Remax உலகின் முதற்தர நிறுவனத்தின் ஊடாக உங்களுக்கு காணிகளையும் வீடுகளையும் இலகுவாகவும் விரைவாகவும் விற்பனை செய்ய முடியும்.

தொடர்புகளுக்கு: 077 221 6683

தரகர் தேவையில்லை

**துரித பொதிகள் சேவை**

DHL

வெளிநாடுகளுக்கு 3-5 நாட்களில் தபால்கள் மற்றும் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.

**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd**

321, K.K.S. Road, Jaffna. 46, Adiyapatham Road, Thirunelvely.

0777554528, 021 222 7835

**வேலைவாய்ப்பு**

★நீங்கள் A/L பரீட்சையினை எழுதி விட்டீர்களா?

★உங்கள் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தை எழுதுவதற்கு நீங்கள் தயாரா?

ஆம் எனில்,

யாழ் நகரில் இயங்கி வரும் சர்வதேச நிறுவனத்தின் பிரதான கிளையுடன் இணைந்து கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.

தொடர்பு : 076 523 1730

No. 62/6, Stanly Road, Jaffna



பக்கங்கள்: 24

# சஞ்சீவி

Registered as a Newspaper

ரோட்டுப் போட முன்னமே அண்ணனுக்கு பெரிசா
போர்ட் ஒண்டு வைச்சு எழுப்பம் காட்டலுக்கு– வேட்டொன்று
வைத்து பிரதேச சபையின் ஆளுமை சொல்லி
கெத்துக் காட்டிட கொட்டம் அடங்கியதே காண்!

–கொரோனாச் சித்தர்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2051 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை (13.12.2020) சிகரம் : 26



## வடக்கை அதிர வைக்கும் உண்மைகள்

## இரவில் மட்டும் வரும் மர்மமனிதர்கள்

# விடுதிகளில் ஒளிந்திருக்கும் நரகம்

○ உளவாளி

பாலியல் தொழிலுக்காக இயங்கும் விடுதிகளுக்கிடையே ஒரு வலைப்பின்னல் தொடர்புண்டு. ஒரு விடுதிக்கு வரும் இப்படியான தொழில் செய்யும் பெண்களை தங்கள் விடுதியில் உள்ள வாடிக்கையாளருக்கு வரவழைத்துக் கொடுக்கவே இந்த வலைப்பின்னல் தொடர்பாம்.

'சர்ர்ர்ர்க்!'

பொலிஸ் ஜீப் ஒன்று சடாரென பிரேக் பிடித்து நிற்க, அதிலிருந்து 'திபுதிபு'வெனக் குதித்து ஓடிய பொலிஸார், அந்த வீட்டைக் கண்ணிமைக்கும் நேரத்தில் சுற்றி வளைத்தனர். உள்ளிருக்கும் ஈ, காக்கை கூட தப்பியோடமுடியாது. பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருமுறைக்கு இருமுறை தாங்கள் சுற்றிவளைத்தபகுதி சரியானதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின், கொஞ்சம் முன்னேறி பூட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் கதவைத் தட்டினார்.

"டொக்..டொக்..டொக்"

எந்தப் பதிலுமில்லை.

"டொக்..டொக்..டொக்..டொக்.."

இப்போது இன்னும் பலமாக கதவே இடிந்து விடுமோ என்பதுபோல அவர் தட்டினார்.

"ஓம் வாறம்"

உள்ளிருந்து ஒரு வயோதிபக்குரல். அதனைத் தொடர்ந்து ஒருசிலர் இரகசியக் குரலில் ஏதோ தங்களுக்குள் உரையாடுவது தெரிந்தது.

ஆனால் என்ன கதைக்கிறார்கள் என்பது வெளியில் இருந்தவர்களுக்கு சரிவரக் கேட்கவேயில்லை. உள்ளிருப்பவர்கள் கொஞ்சம் பரபரப்பது, அங்குமிங்குமாக அவர்கள் அவசரத்தோடு பொருட்களை நகர்த்துவதிலும்,வெளியேறக் கூடிய வழிகளைத் தேடுவதிலும் புரிந்தது. ஆனால் எல்லாக் கதவுகளும்தான் அடைபட்டு அவற்றுக்கு வெளியே பொலிஸ்காரர்கள் , காத்திருக்கிறார்களே.

சிமெந்துத் தரையில் கால்களைத் தேய்த்தபடி ஒருவர் வரும் ஓசை. தொடர்ந்து கதவு திறக்கும் சத்தம்.

கதவு திறக்கப்பட்ட மறுநொடியே -

இதற்காகத்தான் காத்திருந்தவர்கள் போல, கதவு திறந்த வயோதிபரைத் தள்ளிக் கொண்டு, பொலிஸார் வீட்டுக்குள் புகுந்தனர்.

எல்லா அறைகளையும் சல்லடை போட்டு நடந்த தேடலின் முடிவில்,சிக்கினார்கள் இரு பெண்கள். கூடவே கொஞ்சம் தடயப் பொருள்களும். சிலமணிநேர விசாரணையின் பின் கதவைத் திறந்த வயோதிபரும், அந்த இரு பெண்களும், தடயப் பொருட்களும் ஜீப்பில் ஏற்றப்பட, புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது ஜீப்.

**பணத்துக்கு பாலியல்; கருக்கலைப்பு உண்மையா?**

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முதியவரும், அந்த இரு பெண்களும் செய்த குற்றம் என்ன? எதற்காக இந்தச் சுற்றி வளைப்பு? கைப்பற்றப்பட்ட தடயப் பொருள்கள் என்ன? இப்படியெல்லாம் நிறையக் கேள்விகள் உங்களுக்குள் எழுந்திருக்கலாம். ஆனால் இந்தச் சம்பவம் நடந்த இடத்தைச் சொன்னால் சட்டெனக் கண்டுபிடித்து விடுவீர்கள்.

எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதியில் அண்மையில் விடுதியொன்று முற்றுகையிடப்பட்டு, அங்கிருந்தவர்கள் கைது செய்ய்ப்பட்ட சம்பவம் தான் இது.

அங்கு தங்கியிருந்த இரு பெண்களும் பாலியல் தொழில் செய்து வந்தனரெனவும், 72 வயதான அந்த முதியவரே அந்த விடுதியை நடத்தி வந்தாரெனவும் கூறப்படுகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளக் கதைகள்

நிலாந்தன்



**ஒரு மக்கள் கூட்டம் அதன் தாயகம் என்று கருதும் ஒரு நிலப்பரப்பில் தேசிய நோக்கு நிலையிலிருந்து அபிவிருத்திகளைத் திட்டமிடாவிட்டால் இப்படித்தான் நடக்கும். அதற்குத் தேவையான தேசிய விழிப்பை ஏற்படுத்தி தமிழ் மக்களை அதன் பங்காளிகளாக்க வேண்டும்.**

புரேவிப் புயல் கடந்த வாரம் தமிழர் தாயகத்தை ஓரளவுக்குச் சேதப்படுத்தியது. மூன்று மரணங்கள். ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்தார்கள்.சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர் கோவிலைச் சூழ்ந்து வெள்ளம் நின்றது. யாழ். நகரத்தின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியது. கோவில் வீதியில் அமைந்துள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் (விக்னேஸ்வரன், அங்கஜன் )வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. விக்னேஸ்வரனின் வாடகை வீட்டின் படிக்கட்டுக்கு வெள்ளம் ஏறியது. இவ்வாறு யாழ்ப்பாணத்தின் சில பகுதிகள் வெள்ளத்துள் மிதந்தமை குறித்து சமூக வலைத்தளங்களில், ஊடகங்களில் பரவலாக விமர்சனங்கள் எழுந்தன. நகைச்சுவை உணர்வு மிக்க சிலர் நல்லூரை வெள்ளம் சூழ்ந்திருக்கும் ஒரு படத்தில் ஒரு படகை ஓட்டி அதில் யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வழி என்று எழுதி அதைப் பதிவிட்டு ரசித்தார்கள். இது விடயத்தில் வடமாகாண வடிகாலமைப்பு தொடர்பாக ஊற்று சிந்தனை நடுவம் என்றழைக்கப்படும் ஒரு அமைப்பு துறைசார் நிபுணர்களை இணைத்து மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தது.

கொவிட்19 சூழல் கடந்த சுமார் ஓராண்டு காலமாக உலகத்தை இயல்பற்ற இயல்புக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. இயல்பின்மையே இயல்பாக மாறி வருகிறது. இவ்வாறு இயல்பற்ற இயல்புக்குள் மழைக்காலம் குறிப்பாக தாழமுக்கங்கள் இலங்கைத் தீவில்புதிய இயல்பின்மைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இவற்றுக்கு யார் பொறுப்பு? இது தொடர்பாக கீழ்கண்ட அபிப்பிராயங்கள் மற்றும் உரையாடல்கள் உள்ளன.

உரையாடல் ஒன்று ஒட்டுமொத்தத் திட்டமிடல் இல்லாத அபிவிருத்தி. ஒரு பிரதேசத்தின் புவியமைப்புத் தொடர்பாக முழுமையான ஒன்றிணைந்த ஆய்வுகள் இன்றி அல்லது பெறப்பட்ட ஆய்வு முடிவுகளை கலந்தாலோசிக்காமல் உருவாக்கப்பட்ட கட்டுமானங்கள் நீர் வழிந்தோடும் வழிகளை அடைத்துவிட்டன. இதனால் நீர் வெளிவழிய இடமில்லாத குறிப்பிட்ட சில இடங்களில் தேங்கிவிடுகிறது. இதற்கு உரிய அனுமதி பெறாமல் கட்டடங்களைக் கட்டியவர்களே பொறுப்பு அல்லது அவ்வாறான அனுமதிகளை ஏதோ ஒரு காரணத்துக்காக வழங்கிய உள்ளூராட்சி சபைகளும் இதற்குப் பொறுப்பு. இது ஓர் உரையாடல்.

இரண்டாவது உரையாடல்: மழையும் புயலும் வெள்ளப்பெருக்கும் இயல்பானவை; வழமையானவை. பருவப் பெயர்ச்சி மழை பெய்யும் காலங்களில் புயல் உருவாகும். வெள்ளம் பெருகும். இழப்புக்கள் ஏற்படும். இயற்கை அதன் போக்கில் இயங்கும்.ஆனால் இது சமூக வலைத்தளங்களின் காலம் என்பதால் எல்லாரும் எல்லாவற்றையும் பற்றி அபிப்பிராயம் கூறுவார்கள். இதனால் இயல்பான இயற்கையான ஒன்றுக்கு இருக்கக்கூடிய இயல்பான முக்கியத்து வத்தை விட அதிகரித்த முக்கியத்துவத்தைக் கொடுத்து ஒரு 'டிரெண்ட்' ஆக்கி விடுகிறார்கள். இயல்பான ஒன்று இயல்பற்றதாக உருப்பெருக்கிக் காட்டப்படுகிறது என்ற ஓர் உரையாடல்.

மூன்றாவது உரையாடல்: இயற்கை தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். வெள்ளம் பெருகி வழிந்தால்தான் பூமியின் நச்சுக்கள் கழுவப்படும். நிலத்தடி நீர் புதுப்பிக்கப்படும். எனவே மழையும் வெள்ளமும் வேண்டும். குறிப்பிடத்தக்க அளவுக்கு புயலும் வேண்டும். இயற்கை தன்னை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். ஆனால் பூகோள அளவிலான மாற்றங்களால் இயற்கை அனர்த்தங்கள் வழமைக்கு மாறாக அதிகரிக்கும் ஆபத்து உண்டு. இதில் முன்னெச்சரிக்கையாக, தற்காப்பாக இருந்தால் சரி. ஆகக்கூடிய பட்சம் முன்னேற்பாடாக இருந்து சேதத்தின் அளவையும் இழப்பின் அளவையும் குறைத்தால் சரி.

இந்த உரையாடல்களை ஆழமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. மாறாக தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். நிலம் , நீர், கடல், காற்று முதலான சுற்றுச் சூழல் எனப்படுவது தாயகத்தைக் குறிக்கும். தாயகம் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அடிப்படை மூலக்கூறுகளில் ஒன்று. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஒரு தேசியக் கடமை. ஒரு தேசிய இனம், அதன் தேசிய நோக்கு நிலையில் இருந்து தாயகச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். எனவே எதிர்காலத்தை, அபிவிருத்தியை, திட்டமிடும் பொழுது ஒரு தேசிய நோக்குநிலை இருக்க வேண்டும். தேசிய நோக்குநிலை எனப்படுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அந்த மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கும் புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் போன்றவர்களால் உருவாக்கப்படுகிறது. ஆனால் கடந்த சில தசாப்தங்களாக யாழ். நகரப் பகுதிகள் உட்பட தமிழர் தாயகத்தில் இவ்வாறு தேசிய நோக்கு நிலையிலிருந்து பெரும்பாலான விடயங்கள் திட்டமிடப்படவில்லை. முதலாவது காரணம், யுத்தம். இரண்டாவது காரணம், யுத்தத்தின் விளைவுகள்.

ஆழமாகப் பார்த்தால் யுத்தமும் ஒரு காரணம் அல்ல. யுத்தம் போராட்டத்தின் விளைவு. போராட்டம் இன ஒடுக்குமுறையின் விளைவு. எனவே இங்கு மூல காரணம் ஒடுக்குமுறைதான். இன ஒடுக்குமுறை



எனப்படுவது அல்லது இனப்படுகொலை எனப்படுவது ஒரு தேசிய இனம் ஒரு இனமாக வாழ்வதற்குரிய அடிப்படைகளை அழிப்பதுதான்.எனவே ஒரு இனத்தை ஒடுக்குபவர்கள் அபிவிருத்தியையும் ஒடுக்குமுறையின் ஒரு கருவியாகவே பயன்படுத்துவார்கள். குறிப்பாக யாழ்ப்பாணம் கடந்த 40 ஆண்டுகள் காலப்பகுதிக்குள் கிட்டத்தட்ட ஆறு தடவைகளுக்கு மேல் வெவ்வேறு தரப்புகளால் ஆளப்பட்டிருக்கிறது.1986 ஆம் ஆண்டு வரையிலும் அது அரசபடைகளின்கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. 86 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து பெருமளவுக்கு அது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அங்கிருந்து தொடங்கி இந்திய -இலங்கை உடன்படிக்கை வரையிலும் புலிகள் இயக்கமே நிர்வாகத்தைப் பெருமளவுக்கு கண்காணித்தது. அதன்பின் இந்திய - இலங்கை உடன்படிக்கை. அதிலிருந்து தொடங்கி கிட்டத் தட்ட 1989 வரையிலும் நிர்வாகம், அமைதி காக்கும் படை மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கைகளில் இருந்தது.அமைதிகாக்கும் படை வெளியேறிய பின்னிருந்து 95 ஆம் ஆண்டு வரையிலும் மறுபடியும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

96 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மறுபடியும் யாழ்ப்பாணம் அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதிலிருந்து தொடங்கி நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானம் வரையிலும் அது அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. எனினும் நிர்வாகத்தின் மீது புலிகள் இயக்கத்தின் தலையீடு ஏதோ ஒரு விகிதமளவுக்கு இருந்தது. சமாதான உடன்படிக்கையோடு அந்தத் தலையீடு மேலும் அதிகரித்தது.அதற்குப் பின் நாலாம் கட்ட ஈழப் போர். 2009 ஆம் ஆண்டு ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் யாழ்ப்பாணம் உட்பட பெரும்பாலான தமிழ்ப் பகுதிகள் அரசபடைகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. அதிலிருந்து தொடங்கி கடந்த பத்தாண்டுகளாகத்தான் யாழ்ப்பாணம் தொடர்ச்சியாக ஒரே அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது. கடந்த 40 ஆண்டுகளில் ஆறு தடவைகளுக்கு மேல் அது மாறி மாறி வெவ்வேறு தரப்புகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கிறது. இக்காலகட்டங்களில் ஒரு தரப்பின் பூரணமான கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் இருந்தது என்று கூற முடியாது. மேற்கத்திய ஊடகங்கள் வர்ணித்ததை போல பகலில் அதை ஒரு தரப்பு ஆண்டது. இரவில் மற்ற தரப்பு ஆண்டது என்ற நிலைமைதான் பெரும்பாலும் காணப்பட்டது. 1996 ஆம் ஆண்டிலிருந்துவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு ஒப்பீட்டளவில் குறைந்த போதிலும்கூட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளின் கட்டுப்பாடு என்பது அப்பொழுது பலமாக இருக்கவில்லை.எனவே தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து அல்லது குறைந்த பட்சம் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி களின் நோக்கு நிலையிலிருந்து தமிழ்ப் பகுதிகளில் அபிவிருத்தியைத் திட்டமிடுவது என்று சொன்னால் அதற்கு கடந்த பத்தாண்டு காலம் போதாது என்பதே உண்மை. எனவே வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தரப்புகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஒரு பிரதேசத்தில் நீண்டகால நோக்கில் திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான அபிவிருத்தியை முன்னெடுப்பது கடினம். அதன் விளைவே தொகுக்கப்பட்ட ஒட்டுமொத்தத் தரிசனமற்ற கட்டுமானங்கள் ஆகும்.

இந்நிலையில் தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து தமிழ்ப் பகுதிகளை முழுமையாகத் திட்டமிடும் ஒரு நிலைமை இப்பொழுதும் கூட முழுமையாக ஏற்படவில்லை என்பதே உண்மை. அண்மையில் கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தென்னிலங்கை மைய நோக்கு நிலையிலிருந்து தமிழ்ப் பகுதிகளின் மீது திணிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அனேகமாக தாயக நோக்குநிலைக்கு எதிரானவை. இதற்கு யாழ்ப்பாணத்தில்ஆளுநர் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டுமானத்தை உதாரணமாகக் காட்டலாம்.

யாழ். பழைய பூங்கா வீதியில் அமைந்திருக்கும் பழைய பூங்கா ஒரு மரபுரிமைச் சொத்து. காலனியாதிக்கத்தின் மிச்சம். இங்கிருந்த பெரியவிருட்சங்கள் லட்சக்கணக்கான வெளவால்களுக்குப் புகலிடங்களாக இருந்தன. ஆனால் அப்போதைய ஆளுநர் சந்திரசிறியின் காலத்தில் இந்த மரங்களில் ஒரு பகுதி வெட்டித்தறிக்கப்பட்டு நிர்வாகக் கட்டுமானங்கள்உருவாக்கப்பட்டன. தவிர ஒரு பகுதியில் நவீன பூங்கா உருவாக்கப்பட்டது. அங்கிருந்த முதுபெரும் விருட்சங்கள் தறிக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக வழமையாக பூங்காக்களில் காணப்படும் மரங்கள் சில நடப்பட்டன. ஒரு மரபுரிமைச் சொத்தாகிய பழைய பூங்காவை நிர்வாகக் கட்டடத் தொகுதியாக மாற்றும் உரிமையை ஆளுநர் எங்கிருந்து பெற்றார்? அதற்குள் ஒரு புதிய பூங்காவை உருவாக்கும் உரிமையை அவருக்கு யார் கொடுத்தது?

அதைவிட முக்கியமாக உலகம் முழுவதிலும் சிறிய பெரிய நகரங்களில் நகர்ப்புற சிறு காடுகள் உருவாக்கப்படுகின்றன. அதாவது நகரத்தின் கட்டட நெரிசலுக்கு மத்தியில் பச்சையாக காணப்படக்கூடிய பகுதிகளை பாதுகாத்து நகர்ப்புறச் சிறு காடுகளை உருவாக்கி வருகிறார்கள். குறிப்பிட்ட நகரத்தின் சுவாசப்பை என்று கூறத்தக்க அந்தச் சிறியகாடுகளில் வாழும் உயிரினங்களும் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறான உலக வளர்ச்சியின் பின்னணியில் லட்சக்கணக்கான வெளவால்களுக்குப் புகலிடமாக இருந்த பழைய பூங்காவை அழித்து புதிய பூங்காவையும் நிர்வாகக் கட்டடங்களையும் ஒரு ஆளுநர் உருவாக்கியிருக்கிறார். அதாவது ஒரு மக்கள் கூட்டம் அதன் தாயகம் என்று கருதும் ஒரு நிலப்பரப்பில் தேசிய நோக்கு நிலையிலிருந்து அபிவிருத்திகளைத் திட்டமிடாவிட்டால் இப்படித்தான் நடக்கும். அதற்குத் தேவையான தேசிய விழிப்பை ஏற்படுத்தி தமிழ் மக்களை அதன் பங்காளிகளாக்க வேண்டும். எனவே தமிழ் மக்களுக்கு அபிவிருத்திக்கான கூட்டு அதிகாரம் வேண்டும். அதே சமயம் கீழிருந்து மேல் நோக்கிய மக்கள் மயப்பட்ட சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்த வேண்டும். இல்லையென்றால் இயற்கைக்கும் அபிவிருத்திக்கும் இடையில் பொருத்தமான ஒரு சமநிலையைக் கண்டுபிடிப்பது கடினம்.

எஸ்.ராஜ்குமார்



# வரவு எட்டணா.. செலவு பத்தணா!

ஜனாதிபதி கோத்தாபய ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியானபோது 'கோத்தா பெயில்' என்ற கோசமும் தற்போது பிரதமர் மஹிந்தவால் வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து 'தோல்வியடைந்த அரசு' என்ற கோசமும் எதிர்க்கட்சிகளால் உரத்துச் சொல்லப்படுகின்றன.

கோத்தாபய ராஜபக்சவை பொறுத்தவரையில், தான் ஜனாதிபதியானால் இலங்கையை அப்படியாக்கலாம் இப்படியாக்கலாம் என்று பாற்கார பருத்தித்துறைப் பவளக்கொடிபோல ஏராளமான கனவுகளுடன் இருந்தார். 'எலிய வியத்மக' என்று ஏகப்பட்ட அமைப்புகளைத் தொடங்கி ஏராளமான திட்டங்களுடன் தேர்தலிலே குதித்தார். வெற்றி பெற்றார். பதவியேற்றார். ஆனால் அவரது பிறவிப்பயனோ அல்லது முன்செய்த பாவப்பயனோ தெரியவில்லை அவர் திட்டமிட்டவாறு எதுவுமே நடக்கவில்லை. கொரோனா வந்து அவரது கொட்டத்தை அடக்கிவிட்டது. இதனால் பாவம், கோத்தா பெயில் ஆகவேண்டிய நிலை.

அடுத்து ஏகப்பட்ட தடல் புடல்களுடன் ஆட்சிக்கு வந்த கோத்தாவின் மொட்டுக் கட்சியினர் "பால் மழை பெய்யும். தேனாறு ஓடும்" என்றெல்லாம் ஆசை வார்த்தைகளைக் காட்டி ஆட்சிக்கு வந்தனர். ஆனால் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு -செலவுத்திட்டம் மொட்டு அரசின் வண்டவாளங்களைத் தண்டவாளம் ஏற்றியிருக்கிறது. மக்களை மிகவும் ஏமாற்றியிருக்கிறது. இதனை வரவு செலவுத் திட்டம் என்பதைவிட கடன் வாங்கி செலவு செய்யும் திட்டம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின்படி 2021ஆம் ஆண்டுக்கான நாட்டின் வரவுகளை விட செலவுகள் ஆயிரத்து 555 பில்லியன்கள் மிகையாக உள்ளன. இதில் வருமானமாக கணிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 886 பில்லியன் ரூபா கூட உருப்படியாகத் தேறுமா என்பதும் சந்தேகமே

இப்போது நாட்டின் வருமானங்களெதுவும் சொல்லிக்கொள்ளக்கூடிய மாதிரியாக இல்லை. கொரோனா காரணமாக உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளில் வாங்க ஆள்கள் இல்லை. இதனால் ஏற்றுமதி வருமானம் ஏமாற்றமாகப் போய்விட்டது. சுற்றுலா வருமானமும் சுத்தமாகப் படுத்து விட்டது. முன்பெல்லாம் தென் பகுதியெங்கும் வெள்ளை தோல்களும் சப்பை மூக்குகளும் தாராளமாக திரியும். ஆனால் இப்போ கொரோனாவுக்குப் பின் வெளிநாட்டுக்காரர்களை காண்பதே அபூர்வமாக இருக்கிறது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களின் வருமானம் இலங்கைக்கு ஏராளமான தினார்களையும் றியால்களையும் அள்ளித் தந்தது. ஆனால் இப்போது கொரோனா காரணமாக அவர்களில் 50 ஆயிரம் பேர் இலங்கை திரும்பி விட்டார்கள். இன்னும் 40 ஆயிரம் பேர் வீடு திரும்புவதற்காகக் காத்திருக்கிறார்கள். இதனால் அந்தக் கதவும் அடைபட்டுவிட்டது. இப்போதுள்ள நிலையில் கிட்டத்தட்ட 17 ஆயிரத்து 200 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றே அரசு செலவுகளைச் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. இதனால் திட்டமிட்டுள்ள வருமானங்களும் காலை வாரிவிடுமோ என்பதால் கடன்பெறவேண்டிய தொகையை அதிகரிக்க வேண்டிய நிலைக்கே அதிக சந்தர்ப்பமுண்டு.

இது தவிர ஏற்கனவே பெறப்பட்ட 13 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா கடன், திருப்பிச் செலுத்தப்படவேண்டி உள்ளது. இதற்கு 2020 க்கு ஆயிரத்து 854 பில்லியனும் 2021 க்கு இரண்டாயிரத்து 117 பில்லியனும் வட்டி வேறு கொடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் சேர்த்தால் எதிர்காலத்தில் 6 ஆயிரம் பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெறவேண்டிய கட்டாயம். இந்தக் கடன்களைப் பெற ஆசிய அபிவிருத்தி வங்கி உலக வங்கி ஜப்பானின் ஜெய்கா நிறுவனம் என்பவற்றின் காலை இலங்கை பிடிக்க வேண்டும். மிகுதிப் பணத்தைப் பெற, இருக்கவே இருக்கிறது செல்லும் செல்லாச் செட்டியாரான சீனா. கொரோனா செய்துவிட்ட கோலத்தால் பழைய கடனை அடைக்க புதிய கடனை வாங்கவேண்டிய பரிதாபம். ராஜபக்சக்கள் மட்டுமல்ல, யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலைதான் வந்திருக்கும்.

அத்தோடு இந்த அரசு தனது நடவடிக்கைகள் மூலம் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்வதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள் எதிர்க் கட்சியினர். படை அதிகாரிகள் சிலர் உயர் பதவிகளில் இருந்து கொண்டு சிவில் நிர்வாகத்தையும் வியாபாரப் புள்ளிகள் சிலர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக இருந்துகொண்டு நாட்டின் பொருளாதாரத்தையும் நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் எனவும் அவர்கள்புலம்புகிறார்கள் . ஜனாதிபதி பதவியேற்ற கையோடு கோத்தாபய, நாட்டில் சில வரிகளை நீக்கினார். இதனால் கிட்டத்தட்ட 600 முதல் 700 பில்லியன் ரூபா வரை நாட்டுக்கு நட்டம் ஏற்பட்டது. அதை ஈடுகட்ட வேறு வழிவகைகள் எதுவும் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

கொரோனாவோடு மஞ்சள், உழுந்து என்பவற்றின் இறக்குமதியையும் தடுத்துவிட்டது அரசு. விளை விக்கப்பட்டுள்ள 25 ஆயிரம் மெட்ரிக் தொன் மஞ்சள் கிழங்கு ஜனவரியிலேதான் கிடைக்கும்; அதனைக் காயவைத்தால் 8 ஆயிரம் மெட்ரிக் தொன் மஞ்சள் கிடைக்கும். அதோடு மஞ்சள் தட்டுப்பாடு தீர்ந்துவிடும் என்கிறது அரசு. இந்த இடைப்பட்ட காலத்தில் மருந்துக்கும் இல்லாததால், அதனை கிலோ 350 ரூபாவுக்கு இந்தியாவில் வாங்கி , கடல் மூலம் கடத்தி வந்து இங்கே கிலோ 5ஆயிரம் ரூபாவுக்கு கடத்தல்காரர்களால் விற்கப்படுகின்றது. இன்னும் சிலரோ கடலைமாவிலும் கோதுமை மாவிலும் மஞ்சள் நிறச் சாயத்தைக் கலந்து போலி மஞ்சள்தூளை விற்று லட்சக் கணக்கில் லாபம் ஈட்டி வருகிறார்கள்.

உழுந்தின் நிலையோ அதைவிடப் பரிதாபம். உழுந்தைப் பயிரிட இப்போதுதான் காணிகளைத் தேடி வருகிறார்கள். மட்டக்களப்பில் தமிழர்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து உழுந்து பயிரிடத் திட்டமிடப்பட்டு வருகிறது. இந்த லட்சணத்தில் உழுந்தின் விலை உள்ளூரில் ஆயிரத்து 800 ரூபாவைத் தாண்டிவிட்டது. சைவக் கடைகளில் முன்னர் இட்லிக்கும், தோசைக்கும், வடைக்கும் 5 கிலோ 6 கிலோ உழுந்தைப் பாவித்தவர்களெல்லாம் இப்போது அரைக் கிலோவைத்தான் பாவிக்கிறார்கள். ஆனால் முன்னர் 40 ரூபா விற்ற உழுந்து வடை இப்போ 70ரூபா.முன்னர் 30 ரூபா விற்ற தோசை இப்போது 50 ரூபா. இவ்வாறாகத்தான் அரசின் பலவீனத்தைப் பயன்படுத்தி, மக்களிடம் கொள்ளையடிக்கிறார்கள் வியாபாரிகள்.

இவைபோன்றே, சீனி, ரின் மீன், பருப்பு வெங்காயம், அரிசி போன்ற பல பொருள்களின் வரியைக் குறைத்து விலையை இறங்க வைக்க அரசு முனைந்தபோதும், அது கைகூடவேயில்லை. இதனை வைத்தே இன்று எதிர்க் கட்சிகளால் தோற்றுப்போன அரசு என்றும் கோத்தா பெயில் என்றும் கோசங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.இது தவிர மஹர சிறைக் கலவரம் கொரோனா கட்டுப்பாட்டில் ஏற்பட்ட சொதப்பல் தனது செல்லப் பிள்ளையான நீதி அமைச்சருக்கு 40 கோடி ரூபா செலவில் புதிய அலுவலகம் என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதியையும் அவரது அரசையும் குடைந்து கொண்டிருக்கின்றன.

நாட்டின் முக்கிய பதவிகளுக்கு பொருத்தமற்றவர்களை நியமித்து, அவர்கள் சொற்படி ஆட முற்பட்டால் இப்படியான அவப்பெயர்கள் அரசுக்குத் தொடரவே செய்யும்.

■

**"இப்போது நாட்டின் வருமானங்களெதுவும் சொல்லிக்கொள்ளக்கூடிய மாதிரியாக இல்லை. கொரோனா காரணமாக உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளில் வாங்க ஆள்கள் இல்லை. இதனால் ஏற்றுமதி வருமானம் ஏமாற்றமாகப் போய்விட்டது. சுற்றுலா வருமானமும் சுத்தமாகப் படுத்துவிட்டது."**





# வெள்ளத்தில் மூழ்கியது யாழ்ப்பாணம்?

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

புரேவிப் புயல் கிழக்கைத் தாக்குமென்றார்கள். பிறகு அது முல்லைத்தீவு நோக்கி நகர்கிறது என்றனர். முல்லைத்தீவுக்கு நகரும் "புரேவி" இன்னொரு சுனாமியையோ முள்ளிவாய்க் காலையோ முல்லைத்தீவுக்குப் பரிசளிக்கப் போகிறதா? என்று அச்சத்தை உண்டாக்கியது. ஆனால், இறுதியில் யாழ்ப்பாணமே வெள்ளத்தில் மூழ்கியது. புயல் அபாயம், வெள்ளத்தில் மிதப்பதில் போய் முடிந்தது.

இவ்வளவுக்கும் யாழ்ப்பாணக் குடாநாடு மட்டுமல்ல, யாழ்ப்பாண நகரும் கடலோடு கூடிப் பிறந்த ஒன்று. "கடல் அருகிலிருக்கும்போது எப்படி அதற்கு அருகில் உள்ள இடங்கள் வெள்ளத்தில் மூழ்கும்?" என்று அறிஞர்கள் கேட்கிறார்கள். அவர்களுடைய கேள்வி நியாயமே. "சரியான வடிகாலமைப்பு இல்லாததே இதற்குக் காரணம்" என்று அவர்களுக்கு எப்படிச் சொல்ல முடியும்? குறைந்த பட்சம், "வடிகாலமைப்பே சரியில்லாமல்தான் ஒரு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நகரம் இருக்கிறதா?" என்று அவர்கள் திருப்பிக் கேட்டால்! அதுவும் படித்தவர்களை அதிகமாகக் கொண்ட ஒரு பெருமை மிகு நகரில்!!

என்ன செய்வது? துறைசார்ந்த பலரும் பல தடவை வடிகாலமைப்பின் (Drainage) அவசியத்தைப் பற்றிச் சொல்லியே வந்திருக்கிறார்கள். வடிகாலமைப்பைப் பற்றி மட்டுமல்ல, கழிவு நீரைப் பாதுகாப்பாக (Sewage discharge) வெளியேற்றுவதைப் பற்றியும் சொல்லி வந்தனர். இதைச் சரியாகச் செய்யாமல் விடுவதனாலேயே யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் கூட மாசடைந்து கெட்டுப் போயிருக்கிறது, தொடர்ந்து இன்னும் கெட்டுப்போகும் என்றும் எச்சரித்தனர்.

இதையெல்லாம் யார்தான் கணக்கில் எடுத்தனர்? இவை பற்றி ஊடகங்கள் கூடக் கவனத்திற் கொள்ளவில்லை. இந்த விடயத்தைக் குறித்து கவனத்துக்குரிய கட்டுரைகளோ, செய்திகளோ, ஆசிரியர் தலைப்புகளோ வரவில்லை என்றே சொல்லலாம். அப்படி எங்காவது வந்திருந்தாலும், அதெல்லாம் கவனிக்காமல் புறக்கணிக்கப்பட்டேயிருக்கின்றன. தொடர்ந்த உரையாடல்கள் நடந்ததில்லை. இடையில் வடிகாலமைப்புக்கு உலக வங்கி மற்றும் வெளிநாடுகளின் உதவிகள் கிடைத்துள்ளது என்றொரு கதை அடிபட்டது. பிறகு அந்தக் கதையும் அடிபட்டுப் போச்சுது.

பதிலாக வெள்ளம் பெருக்கெடுத்து, கடைகள், வீதிகள், வீடுகள், ஆஸ்பத்திரி, கச்சேரி, பூங்கா, பள்ளிக்கூடங்கள், கோயில்வளாகம் என்று எல்லா இடங்களையும் மூடத் தொடங்கும்போதே தலைக்கு ஏறியிருக்கிறது பிரச்சினையின் தீவிரம்.

இப்பொழுது வெள்ளத்தில் மூழ்கியது யாழ்ப்பாணம் என்று கடந்த சில நாள்களாக பலரும் ஓலமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சமூக வலைத்தளங்களையும் யாழ்ப்பாண வெள்ளமே மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது. இதற்குள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி என சமைத்த உணவு, சமைக்காத உணவுகளைக் கொடுப்பதற்கு ஒரு தொகுதியினர் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கென புலம்பெயர் உறவுகளிடமிருந்து நிதிவேறு திரட்டப்படுகிறது. அவர்களும் பார்த்துப்பாராமல் தங்களால் முடிந்த அளவுக்கு உதவுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களைக் கவனிப்பதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் முன்வருவது நல்ல குணமே. ஆனால், இது இப்பொழுது அவசியம்தானா என்று சிந்திக்க வேண்டும். ஏனென்றால், இதற்கென்று அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உள்ளது. தேவைப்பட்டால் அதனுடைய பணிக்கு மேலதிகமாக உதவலாம். இது கூட அவர்கள் கோரும் பட்சத்தில் செய்வதே நல்லது.

பதிலாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் வேலையை நாமே தூக்கித் தோளில் போட்டுக் கொள்ள வேண்டுமா? அதற்கென்று ஒதுக்கீடுகளும், உத்தியோகத்தர்களும் பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் உண்டு. இவர்களை வழி நடத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வேறு இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்கும்போது இதற்குள் போய் தலையைக் கொடுப்பது, அவர்களைச் சோம்பேறிகளாக்குவதாகவே முடியும். போதாக்குறைக்கு அரசாங்கத்தின் பொறுப்பையும் கடமையையும் நாங்கள் இல்லாமற் செய்து விடுகிறோம். "வெள்ள நிவாரணத்துக்கு அரசாங்கம் ஒதுக்கிய நிதி போதாது. கோரப்பட்ட நிதியையே அது தரவில்லை! அந்த நிதி வரும் வரை பாதிக்கப்பட்டவர்களைக் கைவிட முடியுமா? என்று சிலர் கேட்கக் கூடும். அரசாங்கத்திடமிருந்து வேண்டிய நிதியையும் உதவியையும் பெறுவதற்கு ஏராளம் நடைமுறை வழிகள் உண்டு. ஒன்று அரச அதிகாரிகள். இரண்டாவது, நாடாளுமன்ற உறுப்பினர்கள். மூன்றாவது, தொண்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகள்.

இவற்றைச் சரியாக இயங்க வைத்து பாதிக்கப்பட்டோரின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் அதையதைச் செய்ய வேண்டும். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசாங்கத் தரப்பினருக்கும் இதில் கூடுதல் பொறுப்புண்டு.

தவிர, நம்முடைய பணியெல்லாம் பொருத்தமான வடிகாலமைப்பைப் பற்றி இனிமேலாவது சிந்திப்பதுதான். கூடவே கழிவு நீர் வெளியேற்றத்தைப் பற்றியும். இரண்டுமே மிக மிக அவசியமானவை. நிவாரணப் பணியை விட நிரந்தரத் தீர்வே அவசியம். சரியான வடிகாலமைப்பைப் பற்றி சிந்திக்கத் தவறினால், உரிய முறையில் வடிகாலமைப்பைச் செய்யாது விட்டால், வெள்ளத்திலே மிதக்க வேண்டியதுதான். வேறு வழியே இல்லை.

ஏனென்றால், தண்ணீர் வடிந்தோடிச் செல்வதற்கான வழிகளெல்லாவற்றையும் மிகக் கெட்டித்தனமாக அடைத்து விட்டோம். சில இடங்களில் குளங்களைக் கூட மூடி விட்டோம். யாழ்ப்பாண நகரில் ராணி தியேட்டருக்குப் பின்புறமாக, லிடோ



தியேட்டருக்கும் பரடைஸ் ஹோட்டலுக்கும் முன்பாக இருந்த குளம் காணாமலே போய் விட்டது. அந்த இடத்தில் பெருங்கட்டடங்கள் முளைத்து வெள்ளத்தைப் பார்த்துச் சிரிக்கின்றன. போதாக்குறைக்கு எல்லா இடமும் மதில்கள் வேறு கட்டப்பட்டுள்ளன. வேலியிருந்த காலத்தில் மழை பெய்தால், வெள்ளம் நான்கு திசையாலும் வெளியேறிப் பரந்து செல்லும். மதில் வந்த பிறகு அப்படிச் செல்ல வழியில்லை. வளவுகளில் நிரம்பும் வெள்ளம் வீதிக்கே வருகிறது. அப்படி வீதிக்கு வரும் வெள்ளத்தினால் வீதிகளெல்லாம் "வெள்ள வாய்க்காலாகி" விட்டன. மேலும் எல்லா இடங்களிலும் கண்டபடி கட்டடங்கள் வேறு எழுப்பப்பட்டுள்ளன.

வவுனியாவில் பல குளங்களே இல்லாமல் போய்விட்டன. திருநாவற்குளத்தில் ஒரு குளத்தை மூடுவதற்கு சில அமைப்புகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தபோதும், அதையெல்லாம் கடந்து செல்வாக்குள்ளோர் காணிபிடித்தனர். இதை எதிர்த்த கவிஞர் எஸ்போஸ் இனந்தெரியாத முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். கிளிநொச்சி நகரில் பழைய கச்சேரிக்குப் பின்னுள்ள நீரோடும் பெருவாய்க்கால் பகுதியும் நீரேந்து பகுதியும் இப்படித்தான் அபகரிக்கப்பட்டுள்ளன. திருநகரில் குளக்கட்டுள்ளது. குளம் காணாமலாக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் கடந்த 10முதல் 15 ஆண்டுகளுக்குள் நடந்த திருக்காரியங்கள். இப்படித் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய தாழ்வான பகுதிகளையெல்லாம் நிரவினால் வெள்ளம் என்ன செய்வது? எங்கே போவது? "வெள்ளமும் யானையும் ஒரு போதும் ஊருக்குள் வருவதில்லை. அவை போற வழியில நாங்கள் இருந்தால் அதுகள் என்ன செய்யும்?" என்று சொல்வார்கள். இதுதான் உண்மை. வெள்ளம் எப்போதும் பள்ளத்தை நோக்கியே ஓடிவரும். அந்தப் பள்ளம் நிரம்பினால், அது செல்லக் கூடிய வழியைத் தேடும். அது தானாகவே வாய்க்காலை உருவாக்கி விடும். அந்த வாய்க்கால் வழியை இனங்கண்டு வடிகாலமைப்பை உருவாக்குவது பாரம்பரிய முறை. இப்பொழுது நகர் வடிவமைப்புடன் இணைத்து வடிகாலமைப்பை உருவாக்கும் முறை வந்துள்ளது. இந்த நடைமுறை வந்தே இருநூறு முன்னூறு ஆண்டுகளாகி விட்டன. சில புராதன நகர்களில் அதற்கும் முந்திய வடிகாலமைப்புகளுண்டு.

ஆனால், நாங்கள் போருக்குப் பிந்திய நிர்மாணங்களில் கூட வடிகாலமைப்பைப் பற்றிச்சிந்திக்கவில்லை. எங்கள் நகரங்களுக்கென்று வடிகாலமைப்பைப் பற்றிச் சிந்திக்காதவர்களாகவே இருக்கிறோம். மிஞ்சியிருப்பது அறுத்தோடிகள் மட்டுமே. இதைக் குறித்தெல்லாம் நமக்குக் கவலையே இல்லை. வெள்ளம் வந்தால் உள்ளம் கசிவோம். உதவிப் பொருட்களை வழங்குவோம். அவ்வளவோடு காரியம் முடிந்து விடும். பிறகு இதையெல்லாம் மறந்து விடுவோம்.

இவ்வளவுக்கும் வடக்கு கிழக்கில் வவுனியா, கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய அத்தனை பெருநகர்களும் கடலோரத்திலேயே உள்ளன. மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கல்முனை, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் என்று எல்லாவற்றையும் ஒரு கணம் கண்ணை மூடிக் கொண்டு யோசித்துப் பாருங்கள். இங்கெல்லாம் ஏன் வெள்ளம் நிற்க வேண்டும்? இதெல்லாம் வடிகாலமைப்புக்கு மிக இலகுவானது. ஒரு சிறிய ஏற்பாட்டின் மூலம் நகரின் வெள்ளத்தையெல்லாம் கடலுக்கே அனுப்பி விடலாம். சிறு நகரங்களான சுன்னாகம் போன்றவை தான் சற்று நெருக்கடியைச் சந்திக்க வேண்டும். சாவகச்சேரி, பருத்தித்துறை போன்றவை கூட கடலுக்கு நெருக்கமாகவே உள்ளன.

அதாவது இயற்கையான அமைவிடம் நமக்கு வாய்த்திருக்கும் நாம் அதைக் கூடச் சரியாகக் கையாளத் தெரியாமலிருக்கிறோம். இது நம்முடைய பிடரியில் நாமே குட்டிக் கொள்வதற்குச் சமம். இந்தத் தவறை இந்த வெள்ளத்தோடு நீக்கிக் கொள்ள வேண்டும். படிப்பினைகள்தான் மனிதருக்கு மிகச் சிறந்த பாடம் என்பார்கள். இந்தப் படிப்பினைகளிலிருந்து பெறுகின்ற பாடங்கள் புதிய வழிகளைத் திறக்கட்டும். அது வெள்ளத்தையாவது வெளியேற்றட்டும்.

தமிழ்ச்சமூகம் பல ஆண்டுகளாக பல வகையான (பிரச்சினைகளின்) வெள்ளத்தால் மூழ்கிக் கொண்டேயிருக்கிறது. குறைந்த பட்சம் மழை வெள்ளத்தைப் போக்குவதற்காவது வழியைக் காணாதிருக்கலாமா?

# பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியும் இந்தோ - பசுபிக் நலனும்

அ.நிக்ஸன்



இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் நடைபெறும் வரவு - செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான விவாதத்தில் குற்றம் சுமத்தி வருகின்றன. 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான கடந்த பத்து ஆண்டுகளில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்து வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் எவருமே அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளை நோக்கிக் கேள்வி தொடுக்கவில்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் இலங்கைப் படையினருக்கு ஏன் பயிற்சியளிக்கிறீர்கள் என்றோ அல்லது ஏன் நிதியுதவி செய்கிறீர்கள் என்றோ கேள்வி எழுப்பவில்லை. 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 35 ஆயிரத்து 515 கோடியே 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டமை தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் ஆகியோர் கடுமையாகச் சாடியிருந்தனர்.


இவர்களும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளையும் ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளையும் நோக்கிக் கேள்வி எழுப்பவில்லை. இந்தோ பசுபிக் பிராந்திய நலன் மற்றும் பாதுகாப்புப் போட்டியில் இலங்கையைத் தம் பக்கம் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே 2009ஆம் ஆண்டு ஈழப் போரை இல்லாதொழிக்க இந்த நாடுகள் இலங்கை இராணுவத்துக்கு உதவியளித்திருந்தன என்பது கண்கூடு. ஈழப் போர் முடிவுக்கு வந்து விட்டால் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தனது பொருளாதார நலனை முன்னெடுக்க முடியும் என்று கருதியே சீனாவும் அன்று போருக்கு உதவியிருந்தது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில், இலங்கை இராணுவத்துக்குச் சீன அரசு நிதியுதவி வழங்கியது என்பதைவிட அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும் இந்தியா ஜப்பான் போன்ற நாடுகளும் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதுடன் கூட்டுப் பயிற்சிகளிலும் ஈடுபடுகின்றன. இவ்வாறான உதவிகள், கூட்டுப் பயிற்சிகள் என்பவை இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டவை என்பது வெளிப்படை. 2009க்குப் பின்னரான புவிசார் அரசியல் போட்டியைப் பயன்படுத்தியே இலங்கை தனது முப்படைகளையும் நவீனமயப்படுத்தி வருகின்றது.

இலங்கைப் படையையும் இலங்கைப் படைத் தளங்களையும் பலப்படுத்தினால், இந்தோ பசுபிக் பாதுகாப்புக்கு அது உகந்தது என்ற கோணத்திலேயே அமெரிக்க, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் கருதுகின்றன. அதைச் சாதகமாகப் பயன்படுத்தியே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான பேச்சுக்களை இலங்கை ஒற்றையாட்சி அரசு முடக்கி வருகிறது என்பதை தமிழ்த் தேசியக் கட்சிகளால் அம்பலப்படுத்த முடியவில்லை.

2018ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்கக் காங்கிரஸ் அனுமதியோடு 39 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அப்போதைய பேச்சாளர் ஹீதர் நொயட், இந்து சமுத்திர வலய பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றது என்று கூறியே இந்த உதவியை அன்று வழங்கியிருந்தார். 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் 2010/2011 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் படைக்கு நிதியுதவி வழங்கப்பட்டது எனத் தெரியவில்லை.

ஆனால் இந்தோ- பசுபிக் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல்கள், கடற்படைக் கூட்டுப் பயிற்சிகளுக்கு இலங்கை முன்னுரிமையளிக்க வேண்டுமென்ற அழுத்தங்கள் அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்டிருந்தன. 2012ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைச் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்திருந்த இலங்கை தொடர்பான கடுமையான பிரேரணைகூட அந்த அடிப்படையில் முன்வைக்கப் பட்டதென்ற கருத்தும் உண்டு. 2009ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்று அமெரிக்க, இந்திய அரசுகளுக்கு அப்போதைய ராஜபக்ச அரசாங்கம் உறுதியளித்திருந்தது.



இந்தத் தகவலை சம்பந்தன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கூறியிருந்தார். விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்த பின்னர் நிரந்த அரசியல் தீர்வு கிடைக்கும் என்று அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் 2009ஆம் ஆண்டு தன்னிடம் கூறினர் என்றும், ஆனால் தான் ஏமாற்றமடைந்தார் என்றும் சம்பந்தன் கவலை வெளியிட்டிருந்தார். அதாவது அமெரிக்காவையும் இந்தியாவையும் இலங்கை ஏமாற்றிவிட்டது என்ற தொனி சம்பந்தனின் உரையில் வெளிப்பட்டது.

அந்த உறுதிமொழி உரியவாறு நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையிலேயே இந்திய அரசின் ஒத்துழைப்போடு 2012இல் ஜெனீவா மனித உரிமைச் சபையில் அமெரிக்காவால் பிரேரணை கொண்டுவரப்பட்டதென்ற முடிவுக்கு வர முடியும். அந்தப் பிரேரணையின் பின்னரான சூழலிலேயே ராஜபக்ச அரசாங்கம், இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அதிகளவில் ஒத்துழைக்க ஆரம்பித்தது என்றதொரு கதையும் உண்டு. ஆனாலும் தமக்குரிய நம்பிக்கையாளர்கள் எனக் கருதி 2015ஆம் ஆண்டு பதவிக்குக் கொண்டுவரப்பட்ட மைத்திரி ரணில் அரசாங்கத்திலேயே இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் அதிகளவு நிதியுதவிகளை வழங்கியிருந்தன. அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டு இராணுவப் பயிற்சிகளையும் வழங்கியிருந்தன.


2018ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் 290 பில்லியன் ரூபா இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு 306.1பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாத நிலையில், 2019ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி மதிப்பீட்டின் கீழ் பாதுகாப்பு அமைச்சுக்குரிய நிதி செலவுகள் செய்யப்பட்டிருந்தன.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கை இராணுவத்துக்கு வழங்கிய நிதியுதவிகள், ரோந்துப் படகுகள் மற்றும் கூட்டுப் பயிற்சிகள் தொடர்பாக, கொழும்பில் உள்ள அந்த நாடுகளின் தூதரகங்கள் வெளியிட்ட அறிக்கைகளில் இருந்தே இதனை அறிய முடிந்தது. பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதற்கான வெளிநாட்டு நிதியுதவிகள் பற்றி இலங்கைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளவது கடினமானது.

> நாடாளுமன்றத்தில் அரை மணி நேரம் நடைபெறும் கேள்வி நேரத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் இலங்கை இராணுவத்துக்கு வழங்கும் உதவிகள் பற்றியும் கேள்வி எழுப்ப முடியும். அது நாடாளுமன்ற சிறப்புரிமை. ஆனால் தமிழ் உறுப்பினர்கள் அவ்வாறு கேட்பதேயில்லை.

ஆனால் நாடாளுமன்றத்தில் அரைமணி நேரம் நடைபெறும் கேள்வி நேரத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் இலங்கை இராணுவத்துக்கு வழங்கும் உதவிகள் பற்றியும் கேள்வி எழுப்ப முடியும். அது நாடாளுமன்ற சிறப்புரிமை. ஆனால் தமிழ் உறுப்பினர்கள் அவ்வாறு கேட்பதேயில்லை. அப்படிக் கேள்விகள் தொடுக்கப்படும்போது தேசிய பாதுகாப்பு பற்றிய தகவல்களை வெளியிட முடியாதென அரசாங்கம் மறுக்கவும் கூடும் அப்படி மறுத்தால்கூட கொழும்பில் உள்ள அமெரிக்க ஜப்பான், இந்தியத் தூதரகங்களை நோக்கிக் கேள்வி எழுப்ப முடியும். அப்படிக் கேள்வி எழுப்பினால். ஈழத் தமிழர்களுக்கு எதிராக அல்ல, மாறாக இந்தோ பசுபிக் பாதுகாப்புக்காக இலங்கைப் படையினரையும் பலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என அந்த நாடுகள் பகிரங்கமாகச் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

அதன்மூலம் 2009ஆம் ஆண்டு ஈழப்போர் ஏன் இல்லாதொழிக்கப்பட்டதென்ற உண்மைக் காரணமும் வெளிப்படும். சம்பந்தன் நாடாளுமன்ற உரையில் கூறியதுபோல், உங்களுக்குரிய பொறுப்பை ஏன் 10 ஆண்டுகள் சென்ற பின்னரும்கூட செய்ய முடியவில்லை என்றும், அரசியல் தீர்வு வழங்கப்படுமென்ற வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய இலங்கைக்கு நீங்கள் கொடுத்த தண்டனை என்னவென்றும் பதிலுக்குத் துணிவோடும், உரிமையோடும் கேட்டிருக்கலாம். 2002இல் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தபோது அமெரிக்க, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள், தலைமையில் கூட்டப்பட்ட இணைத்தலைமை நாடுகள் தற்போது எங்கே என்றும் வினவியிருக்கலாம். ஆனால் அப்படிக் கேட்க தமிழ்த் தேசியக் கட்சிகள் தயங்குகின்றன. அமெரிக்க இந்திய அரசுகளைக் கேள்வி கேட்க விரும்பாத அணுகுமுறையினூடே இலங்கை அரசாங்கத்துக்கு மறைமுக ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது என்பதை இந்தக் கட்சிகள் அறியவில்லைப்போலும்.




# தடுப்பு மருந்தும் எட்டாக் கனியா?


ஆர்.பிரகாஷ்

இந்த உலகம் செல்வந்தர்களுக் கானது. பணக்காரர்கள் மென் மேலும் பணக்காரர்களாக வளரவளர, ஏழைகள் தொடர்ந்தும் ஏழ்மைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். ஆகப்பெரும் துயரம் என்னவெனில், மனிதப் பேரவல நெருக் கடிக்குளாவது குறைந்தபட்ச மனிதாபி மானம்கூட பல விடயங்களில் காட் டப்படுவதில்லை. அதிலொன்றுதான் கொரோனாவுக்கான தடுப்பூசி விவகா ரம்.

சீனாவின் 'வுகான்' மாகாணத்தில் கடந்த டிசெம்பர் மாதம் தோன்றியதாகச் சொல்லப்படும் கொரோனாப் பெருந் தொற்று பல பில்லியன் டொலர் பொருளாதாரப் பேரழிவுகளை ஏற்ப டுத்தியுள்ளது. உலகம் முழுவதும் 6.5 கோடி மக்கள் பெருந்தொற்றுக்கு உட் பட்டுள்ளனர். 14 லட்சம் பலியெடுப் புக்கள் ஏற்பட்டுள்ளன. 12 மாதங்கள் இந்த உலகம் சொல்லொணாத் துன்பங் க்ளை எதிர்கொண்டு வருகின்றது. இவற்றுக்கு ஒரு முடிவு கிட்டக்கூடிய சாத்தியப்பாடுகள் கண்ணெதிரே தெரி கின்றன. ஆனால் அந்தச் சாத்தியப்பா டுகள் பொருளாதார வல்லரசுகளுக்கே உரித்தானது என்பதே வேதனையா னது. கொரோனாத் தொற்றுக்கு சில தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் இந்தத் தடுப்பூசி களை மக்களுக்கு செலுத்தும் பணிக ளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இவற்றை விட சுவிட்சர்லாந்து, நியூசி லாந்து, டென்மார்க், பெல்ஜியம் உள் ளிட்ட ஐரோப்பிய நாடுகளும், அமெ ரிக்காவும், தென்கொரியா, சீனா போன்ற ஆசிய வல்லரசுகளும் இந்த மருந்தைப் பெறுவதற்குரிய ஒப்பந் தங்களில் கைச்சாத்திட்டுள்ளன.

ஒன்றல்ல, இரண்டல்ல அடுத்த ஆண்டு டிசெம்பர் வரையில் தேவையான தடுப்பூசிகளுக்கு இந்த நாடுகள் முற்பதிவு செய் துள்ளன. இந்த மிகப்பெரும் கேள்வியால் நிலைகுலைந் துள் ளன வறிய நாடுகள். வறுமைக்குட் பட்ட, போரால் சிதிலமடைந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடு களுக்கு இந்தத் தடுப்பூசி கிடைப்ப தில் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள் ளது. வல்லரசு நாடுகளின் இந்த இமா லய கேள்வி கோரலால்தான் இந்த நிலை என்பது பட்டவர்த்தனமானது. இதுகுறித்து சர்வதேச குழந்தைகள் அமைப் பான ஆம்னெஸ்டி 'வளர்ந்த நாடுகள் தங்கள் நாட்டு மக்களை பாது காப்பதற்கு 2021ஆம் ஆண்டு முடிவு வரை தேவையான தடுப்பு மருந்தை பெற்றுள்ளன. அல்லது அதற்கான முற்பதிவுகளைச் செய்துள்ளன.

இதனால் ஏழை நாடுகள் கொரோனா தடுப்பு மருந்தை இழக்கக்கூடும். இதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் அடுத்த ஆண் டுவரை 70 ஏழை நாடுகளில் 10 பேரில் ஒருவர் மட்டுமே இந்தத் தடுப்பு மருந்தை பெறுவர்' என்று எச்சரித்துள் ளது. கொரோனாவின் பரவல் தொடர் பில் உலகத்துக்குத் தெளிவான தகவல் களை உரிய நேரத்தில் வழங்கவில்லை, கனதியான பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு உலக சுகாதார அமைப்பின் மீது இருக் கின்றது. வருமுன் காக்கும் வழிகளை செய்யத்தவறிய சுகாதார அமைப்பு, வந்தபின்னராவது இந்த ஏழை நாடு களை பாதுகாக்க முன்வர வேண் டும். தடுப்பு மருந்தை அனைவருக் கும் கிடைக்கும்படியான பொறி முறைகளை செயற்படுத்த வேண் டும். அவையும் நாடுகளே, அங் கும் மக்கள்தான் உள்ள னர். பொருளாதாரப் பலத்தை போட்டிபோட் டுக் காண்பிக்கும் விடய மல்ல இது. ■



# முல்லை இனி இல்லை!



மயூ

கடந்த சில நாள்க ளாக தமிழ் ஊடகங் களை ஆக்கிரமித்தி ருப்பது சின்னத்திரை நடிகை சித்ராவின் மரணம்தான். 'பாண்டியன் ஸ்ரோர்ஸ்' என்ற தொடரில் முல்லையாக அவ ரைப் பார்த்து , ஊடாடிக் கொண்டிருந்த ரசிகர்களுக்கு, “முல்லை இனி இல்லை” என்பதுன் பேரதிர்ச்சிதான்.

அவரது மரணத்தில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டபோதும், பொலிஸார் அவரது மரணம் தற்கொலைதான் என்று உறுதிப்ப டுத்தியிருக்கிறார்கள். ஆயினும் அவரது தாயும், வருங்காலக் கணவரும் கொடுத்த மன அழுத்தமே தற்கொலைக்கு காரணம் என்று சொல்வதுதான் நம்பும்படியாக இல்லை.

இப்படி நடிகர்கள், நடிகைகள் உயிர்மாய்த்துக் கொள்வது அண் மைக்காலமாக அதிகரித்தே வந்திருக்கின்றது.

பன்முகத் தளங்களில், தனது திறமையைக் காண்பித்திருந்த நடிகை சித்ராவின் மரணம் வேதனையானதுதான். எனினும் அவ ரது மரணத்துக்கு அப்பால் ஆராய வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. தொலைக்காட்சி நாடகங்கள் சின்னத்திரை தொடர்கள் ஆரோக்கியமான பாதையில் பயணிக்கின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை என்றே கூற வேண்டும். ஆரம்ப காலங் களில் புராணக் கதைகள், நகைச்சுவைத் தொடர்கள், துப்பறியும் தொடர்கள் என்று உருவான சின்னத்திரைத் தொடர்கள் இப் போது, குடும்பத்துக்குள் ஒருவரை ஒருவர் பழிவாங்குவது, அடுத் தவர் கணவரைக் கவரத் திட்டமிடுவது என்று வரைமுறையற்றுச் சென்று கொண்டிருக்கின்றன. இந்தத் தொடர்கள் பார்வையாளர் மனங்களில் நல்ல கருத்துக்களை விதைக்கும் தொடர்களாக இல்லை என்பது சர்வ நிச்சயம்.

இப்படியான தொடர்கள் பார்வையாளர்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. கதை என்று ஒன்றில்லாமல் நீண்டு செல்லும் அந்தத் தொடர்களில் வருடக்கணக்காக ஒன் றித்து இருக்கும் அவர்கள், தொடரில் வரும் கதாபாத்திரங்களின் குணங்களை நாளடைவில் பிரதிபலிக்கத் தொடங்குகின்றனர். பார்வையாளர்களுக்கு மட்டும் அல்ல, அந்தத் தொடர்களில் நடிக்கும் நடிகர்கள், நடிகைகளும் இந்த நிலையில்தான். ஆண்டுக் கணக்கில் நீண்டு கொண்டிருக்கும் தொடர்களில், அந்தக் கதா பாத்திரங்களில் நடிக்கும் அவர்களும் மெல்ல மெல்ல அந்தக் கதாபாத்திரக் குணாதியசங்களுடன் ஒன்றித்துப் போக ஆரம்பிக் கின்றனர். அது நாளடைவில் அவர்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றது.

பிரபல சின்னத்திரைத் தொடரில் ஆண்டுக் கணக்காக நடித்துக் கொண்டிருந்த நடிகர் பிருத்விராஜ், “அடுத்தவரை எப்போதும் குறைகூறிக் கொண்டிருக்கும் கதாபாத்திரத்தில் நடித்தேன். அந் தக் குணம் என் இயல்பு வாழ்க்கையிலும் வந்துவிட்டது, அத னால் தொடரில் நடிப்பதை நிறுத்தப் போகின்றேன்” என்று கூறி, அந்தத் தொடர் முடிந்ததை நினைத்து தன் மகிழ்வை வெளிப்ப டுத்தியிருந்தார்.

நடிகர், நடிகைகளின் பார்வையாளர்களின் இயல்பான போக்கில் அவர்களை அறியாது நடக்கும் இவ்வாறான மாற்றங்கள் நாள டைவில் மன அழுத்தத்தை ஏற்படுத்த ஆரம்பிக்கின்றது. அதைச் சிலர் கையாள சிலர் அறியாது இருக்க சிலர் தவறான முடிவு களை எடுக்கத் தூண்டப்படுகின்றனர். சித்ரா விடயத்திலும் அதுவே நடந்திருக்கலாம் என்று அனுமானிக்கலாம். சின்னத்திரைத் தொடர்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதற்குச் சித்ராவின் மரணம் ஒரு உதாரணமாக இருக்கின்றது. புதுடில்லியில் விவசாயிகள் பெரும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் நிலையில் அதையெல்லாம் தாண்டி ஊடகங் களில் சித்ராவின் மரணம் முதன்மை இடத்தைப் பிடித்திருந்தது. அவரது உடல் உடற்கூற்றுப் பரிசோதனை நடந்து வெளியே வரும் வரையில் நிமிடத்துக்கு நிமிடம் ஊடகங்கள் தகவல் வெளி யிட்டுக் கொண்டிருந்தன. சமூக வலைத்தளங்களில் ஆயிரக் கணக்கான பதிவுகள் பகிரப்பட்டுக் கொண்டிருந்தன.

சமூகத்தில் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணுகின் றோமோ பிள்ளைகள் மனதில் எவை பதிவாகக் கூடாது என்று நினைக்கின்றோமோ அவற்றை ஆண்டுக் கணக்காகக் காண்பிக் கும் திரைகளாக மாறிக் கொண்டிருக்கும் சின்னத்திரைத் தொடர் களில் மாற்றம் வேண்டும். அவ்வாறான தொடர்களுக்குள் அமிழ் வதையும் மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சின்னத்திரை சித்ராவின் சாவு , அதற்கான விழிப்புணர்வை உண்டாக்கட்டும். ■







# கல்முனை

## ஆதிக் கிராமத்தின் அவலம்

○ ந.பரமேஸ்வரன்

கல்முனை. ஆதியான தமிழ்க் கிராமம். இலங்கை சுதந்திரமடைந்தபின், தமிழ்த் தேசியம் பேசிய அரசியல்வாதிகளால் கைவிடப்பட்ட ஒரு நகரமாகவே கல்முனை இருந்து வரு கிறது. கல்முனைத் தமிழர்கள் தமிழ்த் தேசியத்தின் மீது தாம் பற்றுறுதியுடன் இருக்கிறோம் என்பதை ஒவ்வொரு தேர்தலிலும் நிரூபித்தே வந்துள்ளனர். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு என்ற பெயரில் கல்முனை முஸ்லிம்கள் மேற்கொண்டு வந்த தமிழர்களின் நில அபகரிப்பை அல்லது ஆக்கிரமிப்பைக் கண்டுகொள்ளவில்லை. அம்பாறையில் ஆரம்பித்த முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பு, கல்முனையையும் விட்டுவைக்கவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின் சிங்கள அரசாங்கங்கள் தமிழர்கள் மீது வன்முறைகளை ஏவி விட்டபோது முதல் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் அம்பாறைத் தமிழர்களே. 1956ஆம் ஆண்டுமுதல், சிங்கள அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இனவன்முறைகளின் போது அம்பாறையிலிருந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அப்போது தமிழர்களின் காணிகளை அடிமாட்டு விலைக்கு முஸ்லிம்கள் வாங்கினார்கள். இதனால் அம்பாறைத் தமிழர்களின் சனத்தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு தடவையும் இது நிகழ்ந்தது.

அம்பாறையில் 1963 ஆம் ஆண்டு 23.04 வீதமாக இருந்த தமிழர்களின் குடித்தொகை, 2012ம் ஆண்டு 17.04 வீதமாகக் குறைந்துள்ளது. அதேபோல் 0.62 வீதமாக இருந்த மலையகத் தமிழர்களின் குடித்தொகை, 0.03 வீதமாகக் குறைவடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டு அம்பாறையில் மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை வெறும் 165 மட்டுமே.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானதைத்தொடர்ந்து முஸ்லிம் ஊர்காவல் படையினர் இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து தமிழர்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 1990 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் வெளியேறியதைத்தொடர்ந்து முஸ்லிம் ஊர்காவல் படையினரும், இலங்கை இராணுவத்தினரும் இணைந்து தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து வெறியாட்டம் ஆடினர்.

இதனையடுத்து புலிகள் பள்ளிவாசல்களில் தஞ்சமடைந்திருந்த முஸ்லிம்களைக் கொலை செய்ததுடன் வடமாகாணத்திலிருந்த முஸ்லிம்களையும் வெளியேற்றினர்.இது சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்தது.

புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியது பற்றி சர்வதேச ரீதியில் பேசப்படுகிற அளவுக்கு, கிழக்கில் முஸ்லிம் ஊர்காவல்படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பேசப்படுவதில்லை.

புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியது தவறு எனப் பகிரங்கமாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு புலிகள் முஸ்லிம்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு முன்னர் நடைபெற்ற விடயங்கள் பற்றி தெரியுமோ தெரியாது.

அந்தகாலப்பகுதியில் கிழக்கில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பற்றி கேள்விப்பட்ட யாழ்.இளைஞர்கள் மிகவும் கொதிப்படைந்திருந்தனர். எம்.ஜி.ஆர் மன்றத் தலைவர் பொன்.மதிமுகராசா எம்.ஜி.ஆர் மன்ற விழாவுக்கு புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் ஆஞ்சநேயரை சிறப்பு விருந்தின ராக அழைத்திருந்தார். விழா முடிந்து மேடையிலிருந்து இறங்கிய ஆஞ்ச நேயரை அணுகிய இளைஞர்கள் சிலர் “உங்களால் முடியாவிட்டால் எங்களிடம் துப்பாக்கிகளைத் தாருங்கள். நாங்கள் முஸ்லிம்களை பழிக்குப்பழி வாங்குகிறோம்” எனக் கூறினர். அதற்கு ஆஞ்சநேயர் “அவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக நாங்களும் அப்படிச் செய்ய முடியாது" என்று சொல்லி விட்டு வாகனத்தில் ஏறிச் சென்று விட்டார். அடுத்த ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். முஸ்லிம் அரசியல்வாதிகள் எவரேனும் தமிழர்கள் மீது தாம் நடத்திய வெறியாட்டங்களுக்குத் தங்களது வருத்தத்தைத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. இன்னும் தமிழர்களை ஒடுக்கும் செயற்பாடுகளையே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு கிழக்கில் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டபோது ஹிஸ்புல்லா பள்ளிவாசலில் வைத்து முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதங்கள் விநியோ கித்தார் என , சிவராம் ‘சரிநிகர்’ பத்திரிகையில் எழுதியிருந்தார். இதன்பின்னரும் ஹிஸ்புல்லா தாமே கோயிலை இடித்து சந்தை கட்டியதாக பகிரங்கமாக தம்பட்டம் அடித்த காணொலி அண்மையில் சமூகவலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எவ்வளவுதான் விட்டுக்கொடுப்புகளை செய்தாலும் கிழக்கு முஸ்லிம்கள் "தமிழர்களை அடக்கி ஆள வேண்டும், தமிழன் தலை நிமிரக்கூடாது "என கங்கணம் கட்டிக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவியை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுக்கு தாரை வார்த்துக்கொடுத்தும் எதுவித நன்மையையும் தமிழர்கள் பெறவில்லை.

கிழக்கு மாகாணசபையினால் நிரப்பப்பட்ட வெற்றிடங்களில் தமிழர்களின் எண்ணிக்கை மூன்றாவது இடத்திலேயே காணப்படுகிறது ; முஸ்லிம்கள், சிங்களவர்கள், தமிழர்கள் என்ற விகிதாசாரத்திலேயே கிழக்கு மாகாணசபை வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ரணிலைக் காப்பாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அல்லது சுமந்திரனால் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவிக்க முடிய வில்லை. முஸ்லிம்கள் செறிந்து வாழும் புத்தளம், கம்பஹா போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கென தனியான பிரதேச செயலகம் உள்ளதா?

**தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எவ்வளவுதான் விட்டுக்கொடுப்புகளைச் செய்தாலும் கிழக்கு முஸ்லிம்கள் 'தமிழர்களை அடக்கி ஆள வேண்டும், தமிழன் தலை நிமிரக் கூடாது' என கங்கணம் கட்டிக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.**

"எனது தாய் மொழி தமிழ். நான் தமிழிலேயே சாட்சியமளிப்பேன் "என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தெரிவிக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள், தங்களது தாய் மொழிக்கு உரிமையானவர்களை சிங்களப் பேரினவாதிகளுடன் சேர்ந்து அடக்கி ஆள நினைப்பது எதற்காக? ஒரே மொழியைப்பேசும் இரண்டு இனங்களுக்கிடையே ஏனிந்த வேறுபாடு? எதற்காக இரண்டு நிர்வாகப்பிரிவுகள்? கல்முனை தமிழ் பிரிவு, முஸ்லிம் பிரிவு, சிங்களப் பிரிவு என இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். இரண்டுமே மொழிரீதியாக தமிழ்பிரிவுகள் தான். உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இருந்த முஸ்லிம் பிரிவு ஏற்கனவே பிரதேச செயலர் பிரிவாக தரமுயர்த்தப்பட்டு விட்டது. தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவைத் தரமுயர்த்த முயற்சித்தால் முஸ்லிம்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு முட்டுக்கட்டை போடுகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவைத் தரமுயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது:" தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை தரமுயர்த்தினால் நாங்கள் அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வோம்" என முஸ்லிம் தலைவர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை தரமுயர்த்தும் விடயம் கை விடப்பட்டது. இந்த இடத்தில ரணில் கூறிய ஒரு விடயம் உற்று நோக்கத்தக்கது. "எமக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் எம்மை விட்டுப் போக மாட்டார்கள். ஆனால் முஸ்லிம் தலைவர்களை நம்ப முடி யாது" என ரணில் கூறியிருந்தார். அங்கு உண்ணாவிரதப் போராட்டம் நடந்தபோது, களமுனைக்கு விஜயம் செய்த சுமந்திரனும் ஞானசாரதேரரும் "இதோ வர்த்தமானி வந்து கொண்டிருக்கிறது "என அறிக்கை விட்டனர் .ஆனால் தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு கணக்காளரைக்கூட இன்று வரை நியமிக்க முடியவில்லை. நடைபெற்று முடிந்த தேர்தல் பிரசாரத்தின்போது வியாழேந்திரனும் கருணாவும் தங்களுக்கு ஆதரவளித்தால் தாங்கள் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதாக வாக்குறுதியளித்திருந்தனர். வியாழேந்திரனும் பிரதிஅமைச்சராகி விட்டார். வியாழேந்திரன் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தப்போகிறார் என்ற அச்சம் காரணமாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியின் கட்டுப்பாட்டையும் மீறி இருபதாவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் வியாழேந்திரனும் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இருவரும் இணைந்தாவது கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தினால் அதுவே கல்முனைத் தமிழர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். ■



# நலம் அறிய....



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
மாவட்ட பொது மருத்துவமனை,
சிலாபம்)

## மாதவிடாய் காலப்பகுதியில் குருதிக்கொடையளிக்க முடியுமா?



**கேள்வி: மாதவிடாய் காலப்பகுதியில் குருதிக்கொடையளிக்க முடியுமா?**

**எஸ்.நிரஞ்சனி, கோப்பாய்.**

**பதில்:** நிச்சயமாக உங்களுக்கும் மாதவிடாய்க்கும் இதனால் ஏதும் சிக்கல்களோ பாதிப்போ ஏற்படாது. மாதவிடாயின் ஒரு வாரத்துக்குப் பின்னர் குருதிக் கொடையளிப்பதே சிறந்தது. ஆனாலும் உங்கள் குருதியில் ஈமோக்குளோபினின் அளவு hb 12mg/dl க்கு மேற்பட்டுள்ள சுகதேகியாக இருக்கும் பட்சத்திலும், உங்களுக்கு அதிக இரத்தப்போக்கு இல்லா விட்டாலும், வயிற்று நோ, இதர பிரச்சினைகளேதும் இல்லாமல் இருப்பினும் தாராளமாகத் தானம் செய்யலாம். தடையேதுமில்லை.

## HbA1c என்றால் என்ன?

*த.இராமலிங்கம், சண்டிலிப்பாய்.*


FBS(Fasting blood sugar) எனும் வெறும் வயிற்றில் உள்ள சீனியின் அளவை பரிசோதிக்கும் முறையினை விட ,அதிக செலவாகும் இந்த HbA1cசோதனை முறையானது ஒரு நீரிழிவு நோயாளிக்கு ஏன் மேற்கொள்ளப்படுகிறது?

பொதுவாக நீரிழிவு நோயாளியொருவருக்கு, வெறும் வயிற்றில் (12 hours fasting) ஒரு முறையும், உணவு உட்கொண்ட பின் 2 மணித்தியாலங்கள் கழித்து ஒருமுறையும் (post prandial)குருதியில் உள்ள சீனியின் அளவை பரிசோதிப்பது வழமை. ஆனால் இந்த 2 சோதனைகளையும் confirmatory test ஆக, அதாவது நீரிழிவை உறுதிப்படுத்தும் சோதனை முடிவாக பயன்படுத்த இயலாது.

அதிலும் நம்மவர்கள் கில்லாடிகள். வைத்தியரை ஏமாற்றுவதாக எண்ணிக்கொண்டும் ,தனக்கு நீரிழிவு உண்டென ஒத்துக்கொள்ள இயலாத பட்சத்தில் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதற்கும் ,சில வேடிக்கையான விஷயங்களை மேற்கொள்வர். சோதனை செய்யும் நாளுக்கு முன்னைய 24 மணித்தியாலங்களுக்குள் உணவை குறைத்து உண்பது/ சீனியை அறவே தவிர்ப்பது ,போன்ற சிறு பிள்ளைத்தனமான நடவடிக்கைகளால் ,சீனியின் அளவு குறையும் வண்ணம் பார்த்துக்கொள்வர். இத்தகைய தவறான பரிசோதனை முடிவுகளுடன் வைத்தியரை அணுகும்போது, நோயாளியை குணப்படுத்துவது என்பது எமக்குப் பெரும் சவாலாக அமைகின்றது. இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்க்க மேற் கொள்ளப்பட்டுவதே HBA1c. இரத்தத்தில் உள்ள செங்குருதி அணுக்கள் 90 முதல் 120 நாள்கள் வரை உயிர்வாழும் (3 மாதம்). இதிலுள்ள ஹீமோகுளோபின் எனும் புரதத்தின் ஒரு பகுதி, எமது குருதியில் உள்ள குளுக்கோஸை கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. (Glycsylated haemoglobulin). எனவே இதனை கணிப்பிடுவதே HbA1cஇனது தாற்பரியம். இதன்மூலம் கடந்த 3 மாதகாலப்பகுதியில் ,நோயாளியின் இரத்தத்தில் சேமிக்கப்பட்டுள்ள சீனியின் அளவு தெரிகிறது. இங்கு HbA1c சோதனை செய் வதற்கு வெறும் வயிற்றில் இருக்கத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே நீரிழிவை உறுதிப்படுத்தும் சோதனையுமாகும்.

HbAC < 5.7 நீரிழிவு இல்லை
5.7 - 6.4 நீரிழிவிற்கான அபாய நிலை
HbAC > 6.4 நீரிழிவு
7- 8 அதீத அபாய நிலை. உடனடி சிகிச்சை அவசியம்
நீரிழிவு நோயாளி ஒருவர் ஒரு வருடத்தில் குறைந்தது 3 தடவை HbA1c செய்திருத்தல் அவசியமாகும்.

# சொற்சிலம்பம் போட்டி 25



அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..................................................................
கையொப்பம்:..........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1.மதிப்பளிக்காமை, 7.தாக்குதல் மேற்கொள்ள மறைத்து இலக்கு வைத்தல், 8.விசேட சந்தர்ப்பங்களில் காலில் கட்டிப் பயன்படுத்துவது, 9.காயத்தால் ஏற்படும் அடையாளம், 10.காளை மாடுகளை தேவை கருதிப் பிணைக்கும் மரத்தாலான சட்டம், 11.உலகம், 12.உடலின் வளைவு, 13.கவிஞர், 15.இணக்கச் சொல், 16.மனதுக்குள் பகை எண்ணம், 17.கணவன், 19.பிரச்சினை, 20.ஒன்றானது, 21.சௌபாக்கியம், 22.உடற் பகுதியில் காணப்படும் மறு

### மேலிருந்து கீழ்

1.ஐந்து வகைப் பாக்களில் ஒரு வகை, 2.பூச்சி வகையைச் சேர்ந்தது, 3.நேர அலகொன்று, 4.பிச்சை எடுத்தல், 5.பூச்சு மருந்து வகை, 6.எதிரி, 10.அனுபவித்தல்/ கொள்வனவு செய்தல், 11.நீரிழிவு நோய், 12.ஒரு வடிவம், 14.பிரிக்க, 18.இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை இடம்பெற்ற இடம், 19.குழந்தை, 20.ஒரு இலக்கம்

### சொற்சிலம்பம் போட்டி 23 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சூதுவாது, 5.தகழி, 7.சண்டைக்காரன், 9.கடு, 10.கண், 11.மரை, 12.சூம்பகம், 14.மார், 15.வதி, 17 மன்மதன், 19.தக, 20.திண், 21.அகல, 22.குழு, 23.மைத்துனன்

**மேலிருந்து கீழ்**

1.சூசகம், 2.துண்டு, 3.வாடை, 4.துக்கம், 5.தர, 6.கன்மம், 8.காண்பவன், 12.சூர்மதி, 13.கதி, 14.மரை, 16.சகலன், 17.மக்கு, 18.தண்மை, 19.தகன, 21.அது

**சொற்சிலம்பம் போட்டி இல.25**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**19.12.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**1 ஆம் பரிசு**
**பத்மினி செல்வநாயகம்**
சின்னக்கடை, பிரதான வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**கா.வேலுப்பிள்ளை**
இல.13. அன்னைதெரேசா வீதி, இறம்பைக்குளம், வவுனியா

**3 ஆம் பரிசு**
**பூபாலசிங்கம் ஆனந்தராசா**
பொன்னாலை வீதி, கட்டுடை, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**அ.ராதாமணி,**
எ.ஆர்.எஸ், கண்டி வீதி, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
**திருமதி ஞா.அநுசயா**
43, அரசடி வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை

# மாணவர் கழகம்



# ஏமாந்த நரி

ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு சாப்பிட எதுவும் இல்லை. அது நதிக்கரைக்குச் சென்றது. அங்கு ஒரு முயல் வந்தது.
நரி "ஆகா! முயல் ஒன்று இங்கு வந்திருக்கின்றது இன்று நல்ல வேட்டை தான்" என்று கூறியது. திடீரென்று முயலின் மீது நரி பாய்ந்தது.
முயல் நரியிடம் சிக்கிவிட்டது.
"ஆஹா! முயலே, நீ என்னிடம் சிக்கி விட்டாய். இன்று நீ தான் எனது உணவு என்று நரி சிரித்தது. நான் இப்போது என்ன செய்வது என்று முயல் யோசித்தது. அதற்கு ஒரு நல்ல யோசனை வந்தது. நரியிடம் நரியாரே! நரியாரே! எனக்கு உடம்பு சரியில்லை நான் கொஞ்சம் நீர் அருந்தலாமா என்று முயல் கேட்டது. சரி என்று நரியும் கூறியது. முயலை நரி விட்டதும் முயல் ஓடிவிட்டது. பிறகு நான் ஏமார்ந்து விட்டேன் என்று நரி கவலைப்பட்டது.

**ச.சயிலுஜா**, தரம் 4,
அங்கத்துவ இலக்கம் 56
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



**பெயர்:** அஸ்மிகா சுதாகரன்
**முகவரி:** நெளுக்குளம், வவுனியா. 151
**பி. திகதி:** 2014.07.01
**பாடசாலை:** வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்.



**பெயர்:** கிருபானந்தன் கோபிகிருஷ்ணன்
**முகவரி:** துன்னாலை தெற்கு, கரவெட்டி. 152
**பி. திகதி:** 30.11.2004
**பாடசாலை:** யா/நெல்லியடி மத்திய கல்லூரி



**பெயர்:** வி.தண்சிகா 153
**முகவரி:** இல.47, 6ஆம் ஒழுங்கை வைரப் புளிவம்குளம், வவுனியா.
**பி. திகதி:** 2014.04.02
**பாடசாலை:** வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.



**பெயர்:** விஜயகுமார் சேதுபதி,
**முகவரி:** முள்ளியவளை, முல்லைத்தீவு. 154
**பி. திகதி:** 2005.05.07
**பாடசாலை:** கிளி/ முருகானந்த கல்லூரி.



**பெயர்:** தேவநாதன் மதுசன்
**முகவரி:** விளானை, களபூமி, காரைநகர். 155
**பி. திகதி:** 2007.03.02
**பாடசாலை:** காரைநகர் இந்துக் கல்லூரி.

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள்.

சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாணவர்கள் தனது படைப்புக்களை அனுப்பும் போது தமது அங் கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.

சஞ்சீவி
**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.................. ..................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

## சிறுவர் சுடர்

# இனி எப்போ வரும்...?

குச்சொழுங்கையில் கொழுத்தும்
வெயிலிலும் குட்டைப்பூவசரமர
நிழலிலும் குந்தியிருந்த நாள்
**இனி எப்போ வரும்?**

செட்டிவளவும் கல்லணிஞ்சிற்பழ
மும் பறித்துச் சுவைத்த நாள்
**இனி எப்போ வரும்?**

முடியில்லா வேந்தனும் கூடவே
ஔவையும் குழுமி மகிழ்ந்த நாள்
**இனி எப்போ வரும்?**

முழு நிழல் வேளையில் முழுநாளும்
சுதந்திரமாய் சுற்றித்திரிந்த நாள்
**இனி எப்போ வரும்?**

நடு இரவில் விழித்து துலாவும்
பட்டையுமாய் மரங்களுக்கு
நீர்பாய்ச்சும் காலம்
**இனி எப்போ வரும்?**

மரங்களின் ஒலி ஓய்ந்து அடங்கு
முன் ஊரே திரண்டு வரும் நாள்
**இனி எப்போ வரும்?**

எம் பூமி எம் சூழல் இவையெல்லாம்
**இனி எப்போ வரும்?**

ச.பிறேமினி,
தரம்-09
யா/மகாஜனக் கல்லூரி.

# பிஞ்சு தூரிகைகள்



**சு.டேனுஷா,**
தரம்-06
வவு/ நெளுக்குளம், கலைமகள் மகா வித்தியாலயம்.





**க.அஸ்மிகா**
தரம்-06
வவு/ நெளுக்குளம், கலைமகள் மகா வித்தியாலயம்.





**அக்ஷயா சந்திரதீபன்**
கிளி/ முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்





**சந்திரசீலன் மகிழினி**
கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை.



# குழைக்காட்டு கதைகள் II

கோகுலராகவன்

நமசியர் என்கிற நமச்சிவாயம் ஊரிலே செல்வாக்கானவர். உறவுகளோடு நன்றாகப் புழங்கத் தெரிந்த, மதிக்கத் தெரிந்த பெரிய மனிதராக அவரைப் பின்நாள்களில் கண்டிருக்கின்றேன். வெள்ளை வேட்டி, சால்வை,வெயிற் காலத்தில் தலைப் பாகையோடும், சிலவேளை தோளில் துண்டோடும் திரிபவர். கௌரவமாக நடமாடிய மனிதர்.

இளமை நாள்களில் பெயர்பெற்ற கூத்துக் கலைஞராகவும் விளங்கியவர். காத்தவராயன் கூத்தில் வைசூரிராயன் வேடம் போடுவதில் அவரை அடித்துக்கொள்ள ஆளேயில்லை. ஒருமுறை பளையில் இருந்த மருதங்கேணிக்கு மச்சினன் முறையானவரின் கோயிலுக்கு கூத்தாடப் போனார். போன இடம் பம்பலான இடம்.

“மச்சான் கூத்து எழுப்பமாக இருக்கோணும்”

“பாரன், இண்டைக்கு கலக்கி விடுறன்”

கூத்து எழுப்பமாக இருக்க நமசியர் ‘ஒன்றை இரண்டை ‘ பாவித்தும் கொண்டார். அது கொஞ்சம் அதிகமாகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை. மாறி மாறி காட்சிகள் வர , நமசியர் குழப்பமாக பாடவும் கதைக்கவும் தொடங்கி விட்டார். குடிமக்கள் தமது குறைகளை வைசூரிராயனிடம் முறையிடும் கட்டத்தில் போதை உச்சமாகிவிட்டது.

“குட்டி குட்டி குரங்கு வந்து குஞ்சாத்தையைக் கொண்டு போட்டுது”

என்று குடிமக்கள் தம் குறைகளில் ஒன்றைச் சொன்னார்கள்.

நமசியருக்கு ‘குஞ்சாத்தை’ எண்டதும் தன்னுடைய 90 வயது சிறியதாயார் ( சிறியதாயை குஞ்சாத்தை என்பர்) படுக்கையில் கிடந்து கஷ்டப்படுவது ஞாபகம் வரவே,

“சாகட்டும் விடுங்கோடா படுக்கையில் கிடந்து இழுபடுகிறது” என்றார்.

பதில் புதுமையாக இருக்க சனங்கள் ஒரு தடவை சிரித்துக் கொண்டார்கள்.

“படையோடை பண்டி வந்து பனம் பாத்தியைக் கொண்டு போட்டுது பட்டபாடெல்லாம் போச்சுது”

பன்றி என்றதும் வேட்டைக்கு போன ஞாபகம் வர,

“இடியனை கொண்டு வாடா பண்டி சுட” என்று எதுவும் புரியாமல் கத்திவிட்டார்.

அவ்வளவுதான்.

சனங்கள் இம்முறை கடுப்பாகி கூக்குரல் இட்டு, கல்லால் செருப்பால் எறிய ....நமசியருக்கு எதுவும் புரியாமல் விழுந்தடித்து மேடையில் இருந்து இறங்கி ஓடியதால் தப்பித்தார்.

கூத்தும் குழம்பி விட்டது. அடுத்த நாள் வைசூரியார் வேசத்தில் ஊருக்குள் சைக்கிளில் வந்து கலக்கினார்.

ஆள் இரவு மருதங்கேணி சந்தைக்குள்தான் வெறியில் படுத்து நித்திரை கொண்டிருக்கின்றார். அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் மருதங்கேணிப் பக்க ஆள்களைக் கண்டால் பளைச் சந்தைக்குள் நாவல் மரத்துக்கு பின்னால் நமசியர் ஒளித்துவிடுவார்.

நமசியருக்கு நான்கும் ஆண் பிள்ளைகள். மூத்த மகன் தங்கராசனுக்கு திருமண வயதில் நிறையப் பேர் மாப்பிள்ளை கேட்டு வந்தார்கள்.

“இருபது பவுண் நகை, ஐந்து லட்சம் காசு, காணி பூமி தந்தால் பொருத்தம் பார்க்கலாம் “என்று விலாசம் விட்டுக் கொண்டிருந்தார்.

ஒருநாள் தங்கராசன் சொந்த மச்சாள் செல்லத்தைக் கூட்டிக்கொண்டு விசுவமடுப் பக்கமாக சின்னமாமன் வீட்டுக்கு போய்விட்டான்.

“அட ஐந்து லட்சம் கேட்டன். ஐந்து சதமும் இல்லாமல் பண்ணிப் போட்டான்”

என்று அதன் பின்னர் புலம்பத்தொடங்கி விட்டார் நமச்சியர். 1990 இல் நமசியரின் இரண்டாவது மகன் லிங்கராசன் கனடாவுக்கு போய்விட்டான். இதன் பின்னர் நமசியருக்கு பொருளாதாரம் மிகச் சிறப்பு.

> நமசியற்ரை இளைய பொடியன்கள் இரண்டு பேரும் சரியான குழப்படி. இதை வைத்தே நமச்சியர் கதைத்தார்.ஆனால் அவன் பொடியள் என்று கேட்டது புலிகள் இயக்கத்தைப் பற்றி. வந்த கோபத்தில் எழும்பி வயது போன மனிதர் என்றும் பார்க்காமல் ‘பளார்’ என்று கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

“அவன் தான் நான் பெத்த பிள்ளை”

“அப்ப மற்றதெல்லாம்

.....”

மனைவி இராசம்மா வம்புக்கு இழுப்பாள்.

“போடி விசரி”

1995 இல் வெளிநாட்டுக் காசு வாங்க கொழும்புக்கு கிளாலிப் பாதையால்தான் போக வேண்டும். கொழும்பில் இரண்டு மூன்று நாள்கள் நின்றுதான் காசு வாங்கி வரவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு காசு நேரடியாக அனுப்ப முடியாது. அப்படி போகும்போது வவுனியாவில் தடுப்பு முகாமில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்தே வவுனியாவுக்குள் நுழைய விடுவார்கள். வடக்கு நிலைப்பாடு பற்றி துருவித் துருவிக் கேட்பார்கள். நல்ல தமிழ் பேசக் கூடியவர்களே புலனாய்வுப்பிரிவில் இருந்தார்கள். அப்படி நமசியரும் ஒருமுறை விசாரிக்கப்பட்டார். முன்னால் இரண்டு பெண்கள் விசாரணை முடிந்து வெளியேறிவிட்டார்கள்.

இப்போது நமசியரின் முறை.

“நிலைப்பாடு எப்படி?”

“ஐயோ ஐயா, மழை தண்ணி இல்லை. ஆடு மாட்டுக்கும் குளத்தில தண்ணி இல்லை. குண்டு வெட்டித்தான் தண்ணிக்கு விடுறம். சரியான பஞ்சம் ஐயா.”

இதுவா அவன் கேட்டது?

இதற்கு இது பதில் இல்லையே. அவனுக்கு கோபம் வந்துவிட்டது. சரி பரவாயில்லை. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அடுத்த கேள்வியைக் கேட்டான்.

“பொடியள் என்ன செய்யிறாங்கள்?”

“ஐயோ தம்பி அவங்கள் என்ரை சொல்லும் கேட்காங்கள் தாயின்ர சொல்வழியும் கேட்காங்கள், பெட்டையளுக்குப் பின்னால திரியுறாங்கள். படிப்பும் ஏறுதில்லை”

நமசியற்ரை இளைய பொடியன்கள் இரண்டு பேரும் சரியான குழப்படி. இதை வைத்தே நமசியர் கதைத்தார்.ஆனால் அவன் “பொடியள் “என்று கேட்டது புலிகள் இயக்கத்தைப் பற்றி. வந்த கோபத்தில் எழும்பி வயது போன மனிதர் என்றும் பார்க்காமல் ‘பளார்’ என்று கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

“என்ரை ஐயோ”

நமசியருக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. இவர் கத்திய சத்தத்தில் பக்கத்து அறையில் இருந்த கப்டன் ஓடிவந்து வயதுபோன ஆள் என்பதால் விடச் சொல்லிவிட்டான்.

“தம்பி அந்தப் பெரியவன் வராட்டில் இவன் பாவி மற்றக் காதையும் பெயர்த்திருப்பான்”

நமசியர் அதற்குப் பிறகு காசு வாங்க கொழும்புக்குப் போவதில்லை. மனைவி இராசத்தையே அனுப்பி வைப்பார்.



# சின்னப்புவின் குறும்புகள்

சிரிக்கக் கூடிய உயிரினம் என்றால் மனிதன் தான். ஐம்பது வருடங்களுக்கு முன் எமது சொந்தக்காரரான சின்னப்பு என்பவர் வாழ்ந்தார். அவர் தனது தகப்பனாருடனும் சகஜமாகப் பழகுவார்.

“ தம்பி சின்னப்பு, வயலுக்குப் போய் எத்தனை பேர் அரிவி வெட்டுகினம் எண்டு பார்த்து வா” என்று தகப்பானர் சொல்ல, அங்கிருந்து சென்ற சின்னப்பு கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்தார்.

“ அப்பு சோமண்ணை, ஒரு பன்றியை அடிச்சுப் போட்டு வைச்சிருக்கிறார். உன்னை சாக்கும் கத்தியும் கொண்டு வரட்டாம்” எண்டு சொல்லியிருக்கிறார்.

## நீள நினைதல்

தகப்பனுக்கோ பன்றி இறைச்சி தின்னக் கொள்ளை ஆசை. அவர் வயலுக்கு ஓடிப் போய்பத்தைபத்தையாக தேட, அதைக் கண்ட சோமர் “என்னண்ணை தேடுகிறாய்?” என்றிருக்கிறார். தகப்பனும் “ இவன் சின்னப்பன் சொன்னான்ரா, ஏதோ பன்றி அடிச்சுப் போட்டுக் கிடக்காம். அது தான் தேடினனான்” என்றார்,

அதற்கு சோமர் “அவன் இங்க வரவே இல்லை. நீ வந்து ஆட்களை எண்ணட்டும் எண்டுதான் இப்பிடிச் சொல்லியிருக்கிறான். “ என்ற போது தான் மகன் செய்த குறும்பு தகப்பனுக்கு விளங்கியது. தோட்டங்களிலும் அவரது குறும்பு தொடரும்.

தோட்டத்தில் மிளகாய்க் கன்று நட்டு ஒரு மாசம் தான். வேறு ஒருவரின் மிளகாய்க் கன்றின் சில பழங்களை கொண்டு வந்து தங்களின் கன்றுகளில் கட்டிவிட்டு “அப்பு எங்களின் கன்றுகளிலும் பழம் பழுத்திருக்கு” என்பார் சின்னப்பு.

“ அடே தொடாதே நல்ல நாளில்தான் புடுங்க வேண்டும்”எண்டு தகப்பனும் ஒரு நல்ல நாளில் மிளகாய்ப்பழம் பிடுங்கப் போய் பலமுறை ஏமாந்திருக்கிறார்.

சின்னப்பு தோட்டத்தில்’சினைக் கிணறு’ ஒன்றை வெட்டினார். அதில் இருக்கும் தண்ணீர் நான்கு பரப்புத் தோட்டத்துக்குத் தான் காணும். ஆனால் இன்னொரு தோட்டக்காரர் ,சின்னப்பு இறைக்க முன்னரே அதிகாலை இருட்டோடு இருட்டாகப் போய் அந்தக் கிணற்றுத் தண்ணீரை தனது தோட்டத்துக்கு பாய்ச்சிவிடுவாராம். அதனால் கிணறு வற்றி, சின்னப்புவுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். ஒருநாள் சின்னப்பு இலந்தை முள் கொப்பு ஒன்றைக் கொண்டுபோய் கிணற்று நீருக்குள் தாட்டு விட்டார்.

அதிகாலை 3 மணிக்கு போய் மற்றத் தோட்டக்காரர் ஓலைப்பட்டையை கிணற்றுக்குள் போட்டு தண்ணீரோடு இழுத்தார். முள்ளில் இழுபட்டு பட்டை கிழிஞ்சு போட்டுது. அவர் வேறு பட்டை எடுக்க வீட்டுக்கு போக, சின்னப்பு இடையில் அவரைக் கண்டு “ என்னண்ணை, தண்ணீர் வார்த்தாச்சோ?” என்றுகேட்க, களவாக இறைக்க வந்தவருக்கு புண்ணில புளி வார்த்த மாதிரி இருந்தது. பிறகு சின்னப்பு போய் முள்ளை எடுத்து விட்டு தனது பயிருக்கு தண்ணீர் ஊற்றினார்.

**ச.வாரித்தம்பி**
கைதடி மேற்கு

**உங்கள் வாழ்வில்**
**சந்தித்த, அனுபவப்பட்ட**
**அழகிய, சுவாரசியமான**
**மறக்க முடியாத,**
**நினைவுகளை**
**எழுதி அனுப்புங்கள். சிறந்த நினைவுப் பகிர்வுகள் ‘நீள நினைதல்’ பகுதியில் பிரசுரமாகும்.**

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com

# பெற்றோருக்கு.....

ம.பா. மகாலிங்கசிவம்

தலைமுறை இடைவெளி எனும் பதம் முதியோருக்கும் இளையோருக்கும் இடையே காணப்படும் சொல். செயல், சிந்தனை என்பவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகளைச் சுட்டப் பயன்படுகின்றது. ஆனால் சிந்திக்க வேண்டிய விடயம் என்னவெனில் தந்தைக்கும் மகனுக்கும் ஏற்படும் முரண்பாட்டைச் சுட்டப் பயன்படும் அதே தலைமுறை இடைவெளி என்னும் தொடரே, அதே மகன் தந்தையாகி, அவன் மகனுடன் முரண்படும் போதும் பயன்படுத்தப்படுவதேயாகும். எவ்வாறெனினும் தலைமுறை இடைவெளியை சீர்மைப்படுத்துவதற்கும், இளைய தலைமுறையைக் கவனமாகக் கையாள்வதற்குமான ஆலோசனைகள், உளவியலாளர்களாலும், கலைஞர்களாலும் காலந்தோறும் முன்வைக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளன.

இவ்வகையில் பகீரதி கணேசதுரையின் "ஆரண்ய வாசம்" என்ற கவிதைத் தொகுப்பிலுள்ள "பெற்றோருக்கு....." என்னும் கவிதை இன்றைய தேன் கூட்டில் இடம் பெறுகிறது.



பெற்றவரே பெற்றவரே பெருமை கொள்ளுங்கள் – எம்மை
பெற்று வளர்க்கும் பெரும் பொறுப்பால் பேறு கொள்ளுங்கள்

வேலை செய்ய வேண்டும் என்றால் கட்டளை இடாதீர்,
ஒரு அபிப்பிராயம் போலச் சொன்னால் மகிழ்வடைவோமே

பிழைகள் விடுதல் மனித இயல்பு நான் சிறுபிள்ளை
பொறுமையோடு பிழை திருத்தி சரிசெய்தல் கடமை

என் குறையை மற்றவர் முன் எடுத்துச் சொல்லாதீர்
வளரும் எனது சுய கௌரவத்தை மதிப்பது கடமை

இரைந்து பேசி என் குரலை உயர்த்த வைக்காதீர்
எமை இனிமையாகப் பேசி அழைப்பது கடமை

கேட்கும் பொருட்கள் அனைத்தும் அனைத்தும் தந்து விடாதீர் உடன் தேவை உணர்ந்து
நேரமறிந்து தருவதும் திறமை

சொன்ன வாக்கை மறந்து எம் முன் தலைகுனியாதீர்
என்னைப் பெற்ற தந்தை தலை நிமிர்வதென் விருப்பே

எனது வேலை தன்னை என்னைச் செய்ய விடுங்கள் வாழும்
எனது சொந்த அனுபவத்தை நான் கற்றல் உயர்வே

பிழையதனை தனியே பேசிக் களைவோம்சரி
பிழைதிருத்தல் வாழ்வில் என்னை பேணி உயர்த்தவே

உங்கள் நண்பனாக நெருங்கி வாருங்கள் என்னை
உங்கள் பிள்ளை என்று நீங்கள் மதிப்பது கடமை

மற்றவரோடென்னைச் சேர்த்து ஒப்பிட வேண்டாம் எனது
அறிவு திறமை ஆற்றல் என்றும் தனித்துவமன்றோ

பூசைக்குரிய தெய்வம் நீங்கள் பொய் சொல்லல் சிறுமை
ஆசைக்குரிய அன்னை தந்தை உண்மையின் உருவே

பிழைகள் செய்தால் தலைநிமிர்ந்து ஏற்றல்பண்பு
பொய்யுரை தீயதெனப் பெரியோர் கூறுவர் நம்பு

என்றும் எம்மைப் பெற்றவரே உலகில் பெரியவர்
அன்பு பாசம் கருணையோடு எம்மை வளர்ப்பவர்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பகீரதி கணேசதுரை 'மாவை பாரதி' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதி வருபவர். சங்கீத ஆசிரியர், நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர், உளவளத்துணையாளர் எனப் பல பரிமாணங்களின் வெளிப்பாடாக ''சாபமும் சக்கரவர்த்தியும்'' என்ற நாடகத் தொகுதியையும் ஆரண்ய வாசம் என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டவர். உளவளத்துறை அறிவு துணைவர இளஞ் சமூகத்தைத் தான் புரிந்து கொண்டது மட்டுமன்றி, ஏனைய பெற்றோரும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

முதலில் பிள்ளைகளைக் கொண்டு எவ்வாறு வேலை செய்விப்பது? பிழை விடும்போது எவ்வாறு திருத்துவது என்பவை தொடர்பாகக் கூறப்படுகிறது. "வேலை செய்ய வேண்டும் என்றால் கட்டளை இடாதீர், அபிப்பிராயம் போலச் சொன்னால் மகிழ்வோமே" என்னும் பாடற்பகுதி இளையோர்க்கு "இப்படி செய்" என்று கட்டளை இடுவதைவிட, இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று அபிப்பிராயமாகச் சொல்வதையே விரும்புவார்கள் என கூறுகிறது.

இளையோரிடம் குறைகள் காணப்படுமாக இருந்தால் அவற்றை பலர் முன்னிலையில் சுட்டிக்காட்டக் கூடாது. அது அவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தும். எனவே அவர்களுக்கு மட்டும் எடுத்துக் கூறுவது தம்மை உணர்ந்து திருத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும். கவிஞர் கூறும் முக்கியமான இன்னொரு விடயம் "கேட்கும் பொருட்கள் அனைத்தும் தந்துவிடாதீர், உடன் தேவை உணர்ந்து நேரம் அறிந்து தருவதும் திறமை" என்பதாகும். பெற்றோர்களில் சிலர் பிள்ளைகள் கேட்ட பொருள்கள் அனைத்தையும் உடனுக்குடன் வாங்கிக் கொடுப்பார்கள். 'நாங்கள் கேட்ட போது எங்கள் அப்பா அம்மா வறுமை காரணமாக வாங்கித் தரவில்லை. நாங்கள் பட்ட கஷ்டம் எங்கள் பிள்ளைகளுக்கு வரக்கூடாது' என்பது இவர்கள் சித்தாந்தம். ஆனால் உடனுக்குடன் கேட்ட பொருளை வாங்கிக் கொடுத்தால் பிள்ளைகள் பணத்தின் அருமையைப் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பதையும் நினைத்த எதனையும் உடனே பெற முடியும் என்ற தவறான எண்ணத்தை உருவாக்கி விடுவார்கள் என்பதையும் இவர்கள் அறிந்திருப்பதில்லை. 'தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்' என்று முதுமொழியே இருக்கின்றது. வளர்ந்த பிள்ளையை நண்பனாகத் தான் கருத வேண்டும். எஜமான் வேலையாள், ஆண்டான் அடிமை மனோபாவங்கள் முரண்பாட்டை ஏற்படுத்தும். " உங்கள் நண்பனாக நெருங்கி வாருங்கள் என்னை உங்கள் பிள்ளை என்று நீங்கள் மதிப்பது கடமை என்னும் கவி வரிகள் இதனை உணர்த்துகின்றன.

பெற்றோர் விடும் இன்னொரு தவறு மற்றவரோடு தன் பிள்ளையை ஒப்பிடுவது ஆகும். புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் தனியார் கல்வி நிலையத்திலிருந்து தன் பிள்ளையையும் அயல் வீட்டுப் பிள்ளையையும் ஏற்றிச் செல்ல பெண் ஒருவர் காத்திருக்கிறார். இரு பிள்ளைகளும் புள்ளியிடப்பட்ட விடைத்தாள்களுடன் ஓடி வருகின்றனர். அந்தப் பெண் முதலில் அயல் வீட்டுப் பிள்ளைக்கு எத்தனை புள்ளிகள் என்று பார்க்கிறார். அதன் பின்னரே தனது பிள்ளையின் புள்ளிகளைப் பார்க்கிறார். அவரது மகனுக்கு அயல் வீட்டுப் பிள்ளையை விட ஓரிரு புள்ளிகள் குறைவாக இருந்தது. மகனைப் பார்த்தார் ஒரு பார்வை. ஒரு வேட்டைநாயினதும் முயலினதும் முக பாவங்கள் இருவரிலும் தெரிந்தன. உனக்கும் அவனுக்குக் கொடுக்கும் சாப்பாடு தான் தருகிறேன் இதுவரையும் பள்ளிக்கூடத்துக்கும் டியூஷனுக்கும் நான் தான் ஏற்றி இறக்குகிறேன். அவன் படிக்கிறான் நீ என்ன செய்கிறாய்?. கடுமையான ஏச்சு. ஒன்றாய் படித்து, ஒன்றாக விளையாடி ஒற்றுமையாக இருந்த அந்தப் பிஞ்சு மனங்களில் நஞ்சு விதைகள் தூவப்படுகின்றன. இப்போது தாயின் முகத்தில் இருந்த வேட்டைநாய் மகனின் முகத்துக்குத் தாவிக்கொள்கிறது. எனவே ஒப்பீடு ஒற்றுமையான பிள்ளைகளிடம் வேற்றுமை யைத் தான் ஏற்படுத்தும். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ் வொரு வகையான தனித்தன்மைகளை கொண்டிருப்பர். ஒப்பீடுகளைத் தவிர்ப்போம். "பூசைக்குரிய தெய்வம் நீங்கள் பொய் சொல்லல் சிறுமை ஆசைக்குரிய அன்னை தந்தை உண்மையின் உருவே" என்னும் பாடலடிகள், பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. பெற்றோர் பிள்ளைகள் உறவு சிறப்பாக அமைவதற்கேற்ற சிறந்த பல விடயங்கள் இக்கவிதையில் உளவியல் அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. புரிந்துகொள்வோம்! மாற்றிக் கொள்வோம்.

## கொட்டம் அடக்கிய கொரோனா

அவசர கூடலில் அர்த்தமற்று
அவதியுடன் பறந்த நம்மை
ஆற அமர இருத்தி எமக்கு
அர்த்தங்கள் புகட்டியது கொரோனா

அறிவு, அந்தஸ்து என்று
ஆடம்பரமாய் வாழ்ந்தோரையும்
அறைக்குள் தனிமைப்படுத்தி
அனுபவிக்க வைத்தது கொரோனா

இயந்திர மனிதர்களாய்
இயங்கிய மக்களுக்கு
இறப்பின் வலியை உணர்த்தி
இதயம் கலங்க வைத்தது கொரோனா

உல்லாச வாழ்க்கையை அனுபவித்து
உலகமெல்லாம் சுற்றித் திரிந்தோரை
உலுப்பியெடுத்து உயிர்ப்பயம் காட்டி
உறைய வைத்தது கொரோனா

காசு பணம் உள்ளவரும்
கார் பங்களா கொண்டவரும்
கடைசியாக யாரும் இன்றி
கதிகலங்க வைத்தது கொரோனா

சொத்து சுகம் அனுபவித்து
சொந்தங்களுடன் இருந்தோரை
சொர்க்கத்துக்கு அனுப்பி வைத்து
சொக்க வைத்தது கொரோனா

பதவியிலே இருந்தோரையும்
பார் போற்ற வாழ்ந்தோரையும்
பரிதவிக்கத் தனியாய் இருத்தி
பதற வைத்தது கொரோனா

பணக்காரன் பாண்டியன் என்றும்
படித்தவன் பாமரன் என்றும்
பாரபட்சம் இல்லை என்ற
படிப்பினையைக்
காட்டியது கொரோனா

அநீதிகளும் அக்கிரமங்களும்
அதிகரிக்கும் உலகத்தை
ஆண்டவனுக்கே பிடிக்கவில்லை
அழிக்கின்றார் கொரோனாவால்

**கு. சோபனா**
ஆசிரியர்
யா மூளாய் சைவப்பிரகாச
வித்தியாலயம்



# அரசியல் கைதிகளை விடுவ…
# அமைதியாக காய்நகர்த்துகிறே…

நேர்கண்டவர்: சோபிகா

**கே: மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசை நம்பி தமிழ்க் கட்சிகள், தாமும் ஏமாந்து, தமிழ் மக்களையும் ஏமாற்றி விட்டனவா?**

ப: ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 20152019 நல்லாட்சியின்போது, கணிசமான காரியங்கள் தமிழர் நல்வாழ்வு தொடர்பில் நடைபெற்றன. ஒன்றுமே நடைபெறவில்லை என்பதும், வடகிழக்கிலும், தெற்கிலும் தமிழ்க் கட்சிகள் நல்லாட்சிக்கு ஆதரவளித்து ஏமாந்து விட்டன என்ற எண்ணம் முற்றிலும் தவறானவை.

எமது எண்ணங்கள் முழுமையாக நிறைவேறவில்லை. அரைகுறையாக நிறைவேறின என்பதே உண்மை.

நாம் கையாண்ட அணுகுமுறைகள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன. எனக்கே சக கட்சிகள், சக தமிழ் அரசியல் நண்பர்கள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் உள்ளன. சில காரியங்களை இதைவிட காத்திரமாக, தந்திரமாக செய்திருக்கவேண்டும் என திடமாக எண்ணுகிறேன். நாம் அனைவரும் ஒரு பொது வேலைத்திட்டத்தை ஏற்படுத்தி, பணிகளைப் பிரித்துக்கொள்ள தவறிவிட்டோம் எனவும் திடமாக எண்ணுகிறேன். அப்படி நடந்துக்கொண்டிருந்தால், விளைவுகள் இன்னமும் சிறப்பாக அமைந்திருக்கும்.

**கே: தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் மீண்டும் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தமது விடுதலையை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் மக்கள் பிரதிநிதிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை என குற்றம் சுமத்தி வருகின்றனர். இந்த நிலையில் அரசியல் கைதிகள் தொடர்பில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன? நடவடிக்கைகள் எந்த நிலையில் உள்ளன?**

ப: கைதிகள் விடயத்திலும், நல்லாட்சிக் காலத்தில் பாதி கிணற்றைத் தாண்டியுள்ளோம். கணிசமான கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். நல்லாட்சி அரசு பொறுப்பேற்றபோதும், கடைசியில் விடைபெற்றபோதும், இருந்த கைதிகள் தொகையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

தமிழ்க் கைதிகள் விடுவிப்பு தொடர்பான அணுகுமுறைக் கொள்கை வகுக்கப்பட்டபோது அரசுக்கு உள்ளே இருந்து, நான் எனது வலியுறுத்தல் பங்களிப்பை முழுமையாக வழங்கினேன்.

எமது ஆட்சியின்போது, சட்டமா அதிபர் திணைக்களம், கறாராக இருக்கவில்லை. பிணை, குற்றப்பத்திரிக்கை போன்றவற்றில் கடுமையாக நடந்துக்கொள்ளவில்லை. ஆகவே கணிசமான முன்னேற்றம் இடம்பெற்றது.

தமிழ்க் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றையும் தயார் செய்தேன். முதலில் அதற்கு ஒப்புதல் அளித்த ஜனாதிபதி மைத்திரி, பின்னர் பின்வாங்கினார். 2018ம் வருட அரசமைப்பு சதியின் போது, அவரது அழைப்பை ஏற்று, அந்தத் திருட்டு அரசில், தமிழ் முற்போக்கு கூட்டணி இணையவில்லை என்று அவருக்கு என் மீது கோபம் ஏற்பட்டு விட்டது. அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதியின் ஒப்புதல் இல்லாவிட்டால், அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைக் கொண்டு வந்து, அதற்கு சம்மதம் பெறுவது கஷ்டமானது என்பது அமைச்சரவைகளில் அங்கம் வகித்தோர் நன்கறிந்த நடைமுறை உண்மை. எப்படியும், புதிய வருடத்தில், இந்த விவகாரம் முக்கியத்துவம் பெறும் என நான் நம்புகிறேன். சில காய்நகர்த்தல்களை அமைதியாக மேற்கொண்டு வருகிறோம்.

**கே: தமிழர் தாயகப் பகுதிகளில் நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன? அவ்விடயம் தொடர்பில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் உங்கள் கருத்து ?**

ப: இதுபற்றி எனது கருத்து என்னவென்று இனி மேல்தான் சொல்ல வேண்டுமா? மரணித்தோர், தமிழ்ப் பொதுமக்களாக இருக்கலாம், தமிழ்ப் போராளிகளாக இருக்கலாம், அவர்களது நினைவு கூரலை இன்றைய அரசு தடுக்கிறது. கடந்த நல்லாட்சியில் இந்த விவகாரம், மூர்க்கமாக தடுக்கப்படாமல், நினவுக்கூர சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இதுவும்கூட, நான் மேலே சொன்ன, நல்லாட்சியில் நாம் கண்ட கணிசமான முன்னேற்றங்களில் ஒன்று.

ஆனால், உண்மை என்னவென்றால், அப்போதும்கூட இது ஒரு சலுகையாகவே வழங்கப்பட்டது. புது அரசு வந்ததும், சலுகையைப் பிடுங்கி விட்டது.

தமிழ்ப் போராளிகள், சிங்கள மக்களைப் பொறுத்தவரையில், அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய "பயங்கரவாதிகள்". அது மட்டுமல்ல, போரில் மரணித்த தமிழ்ப் பொதுமக்களும் கூட, அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய "பயங்கரவாதிகள்". இதுதான் தெற்கின் கசப்பான யதார்த்தம்.

ஆனால், அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய ஜே.வி.பி, தெற்கில் பயங்கரவாதிகளாக கருதப்படுவதில்லை. ஜே.வி.பியினர் மரணித்த தமது சிங்கள போராளிகளை பகிரங்கமாக, ஆண்டு தோறும் ஏப்ரல், நவம்பர் மாதங்களில் நினைவு கூருகின்றார்கள். ஆனால், தெற்கில், நடத்தப்படும் இந்த சிங்கள "போராளி" நினைவு கூரல்கள், தேசிய மட்டத்தில் சர்ச்சையை கிளப்புவதில்லை. ஆனால், வடக்கு அல்லது கிழக்கு மாகாணங்களில் நடத்தப்படும் தமிழ் "போராளி" நினைவுகூரல்கள், "பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுகிறார்கள்" என்று பெரும் சர்ச்சைகளைக் கிளப்புகின்றன.

நினைவேந்தல் தொடர்பில், இம்முறை நாடாளுமன்றத்தில் கணிசமான கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் நானும் பங்குபற்றியுள்ளேன். தமிழ் எம்.பக்கள், சிறிதரன், கஜேந்திரகுமார், சார்ள்ஸ், செல்வம், சுமந்திரன், கஜேந்திரன் ஆகியோர் வாதப்பிரதிவாதங்களில் கலந்துக்கொண்டார்கள். இன்னமும் சிலரும் பேசி இருக்கலாம். இது நல்லது. நாமெல்லோரும், தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஒரே குரலில்தான் பேசுகின்றோம். ஆனால், நமது பிரச்சினைகளை, பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் ஆளும் கட்சியோ, எதிர்கட்சியோ பேச வேண்டும். சிங்கள சமூகம் பேச வேண்டும். சரியாகப் புரிந்துக்கொள்ள வேண்டும். அவர்களை நாம் புரிந்துக்கொள்ள வைக்க வேண்டும். இதுதான் எனது அணுகுமுறை. என் நண்பன் ரவிராஜின் அணுகுமுறை. இன்றைய தேவையும் இதுதான். இது இப்போது மெல்ல நடக்கிறது என நினைக்கிறேன்.

**கே: இந்த நாட்டில் இன முறுகலை ஏற்படுத்தும், இந்த நினைவேந்தல் உரிமை சட்டப்படி உறுதிப்படுத்தப்பட என்ன செய்ய வேண்டும்?**

ப: ஜேவிபியின் மீது ஒரு காலத்தில், தடை இருந்தது. இப்போது இல்லை. ஆகவே நினைவு கூருகிறார்கள். புலிகள் மீது இன்னமும் தடை இருக்கிறது. ஆகவே அவர்களை நினவுகூர முடியாதுள்ளது. அதைப் பயன்படுத்தி போராளிகளை மட்டுமல்ல, சாதாரண பொதுமக்களை நினைவுகூருவதைக் கூட இந்த இனவாத அரசு தடுக்கிறது. இதுதான் இங்கே பிரச்சினையின் உண்மை வடிவம்.

தமிழ் மக்கள் சார்பில் இலங்கை நீதிமன்றத்தில் புலிகளின் மீதான தடையை நீக்கும்படிகோரி வழக்காட வேண்டும். உடனடியாக தடையை நீக்கி தீர்ப்பு வராது. ஆனால், படிப்படியாக தீர்வு வரும்.

அதைவிட முக்கியம், இதுபற்றி சிங்கள சமூகத்தில் பேசப்படும். இதுதான் இன்று தேவை. உலகின் பல்வேறு நாடுகளில் இப்படி புலித்தடையை நீக்கச் சொல்லி வழக்குகள் நடைபெறுகின்றன அல்லவா?

புலிகளின் பெயரை பயன்படுத்தித்தானே, தமிழர்களின் பிரபல ஜனநாயக உரிமைகளை இன்னமும் இந்த அரசு மறுக்கிறது. அதை வைத்தே சட்டப்படி தீர்வையும் தேடுவோம். அதாவது இதுவும் ஒருவழி. இதை நான் நீண்ட நாள்களாக சொல்லி வருகிறேன். முன்னாள் எம்.பி.விஜயகலா மீது வழக்கு தொடரப்பட்டபோது முதன்முதலில் கூறினேன். இப்போதும் கூறுகிறேன். கடந்த வாரம், நண்பர் கஜேந்திரகுமாரிடமும் நேரடியாகச் சொன்னேன். புலிப்பூச்சாண்டி காட்டி தமிழ் மக்களை, அவர்களது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ஒடுக்கி நிற்கும் இனவாதிகளை, அவர்களுக்குப் புரியும் அவர்கள் பாஷையிலேயே எதிர்கொள்ளும் ஒருவழி இதுவாகும் என கூறினேன். உண்மையில், 'ட்ரயல் அட் பார்' வழக்கை பயன்படுத்தி, ஈழத்தமிழர் இறைமை பற்றி, மறைந்த திருச்செல்வம் எடுத்தியம்பியது போன்று, இந்த வழக்கை தொடுத்து, அதைப் பயன்டுத்தி, தமிழர் ஆயுதம் தூக்கியது ஏன் என ஆரம்பித்து, தமிழ்த் தரப்பு நியாங்களை, சிங்கள நாட்டுக்குப் புரிய வைக்கலாம். அதற்கான காலம் இன்று கனிந்துள்ளது. இதை கஜன், சுமன், விக்கி போன்றோர் இணைந்து செய்யலாம்.

**கே: மாவீரர் தின நினைவுநாளைக் காரணம் காட்டி தமிழர் பண்டிகைகளில்ஒன்றான கார்த்திகை விளக்கீட்டையும் இம்முறை பல இடங்களில் பொலிஸார் தடைசெய்திருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது. இது தொடர்பில் உங்கள் கருத்து?**

ப: தமிழ்ச் சினிமாப் பாஷையில் சொன்னால், இதைக்கூட புரிந்துக்கொள்ளாத "காமடிப் பீசுகள்" இவர்கள்.

இதுபற்றியும் தமிழ் எம்.பி.க்கள் சார்ள்ஸ், சிறிதரன் ஆகியோர் சபையில் பேசினார்கள். உரிய வேளையில் நானும் இடைமறித்து சிங்கள மொழியில் பின்வருமாறு கூறினேன். "பொலிஸ்" அமைச்சர் சரத் வீரசேகரவும், "இராணுவ" அமைச்சர் சமல் ராஜபக்சவும்அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தனர். "கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வாரம் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளையும், நவம்பர் 29 பௌர்ணமியன்று நடந்த "கார்த்திகை தீப" இந்துப் பண்டிகையையும், பொலிஸும், இராணுவமும் போட்டு குழப்பியடித்துள்ளன."

தமி…
கூட்டல…
நாடாளும…
மனோ…
உதயன்…
பிரத்தி…
இங்கு…



# ...விக்க
# ...றோம்!



”மரதன் ஓட்டம் ஓடப்போவதாக ஆர்ப்பாட்டமாக சொல்லி ஆரம்பித்து, முதல் நூறு மீற்றரிலேயே, தடுக்கி விழுந்து தோற்றுப்போகும் பந்தய வீரர் இந்த கோத்தாபய ராஜபக்ச. அதனால்தான் இவரை நாம் கொழும்பில், “சேர் பெயில் ஆகிவிட்டார்” என்கிறோம். இவரது அனுபவமின்மை அப்பட்டமாகத் தெரிகிறது. ஆகவே இவரது ஆட்சியும் பெயில்.

**...தமிழ் முற்போக்குக் ...கூட்டணியின் தலைவரும் ...நாடாளுமன்ற உறுப்பினருமான**

## ...னோ கணேசன்

**...தயன் -சஞ்சீவிக்கு அளித்த ...பிரத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

“இங்கே சபையில் வந்து, கார்த்திகைத் தீப நிகழ்வுகளை பாதுகாப்புப் பிரிவினர் குழப்பும் சம்பவங்கள் நடைபெறவில்லை எனச் சொல்ல வேண்டாம். இவை நடந்துள்ளன. இதற்கு எதிராக பொலிஸ் புகார்கூட செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி இங்கு வன்னி எம்பி சார்ல்ஸ் நிர்மலநாதன் சொல்வது முற்றிலும் உண்மை”

“இந்து கலாச்சார திணைக்களத்தில் இந்து பண்டிகைகள் பற்றிய நாட்காட்டியை பெற்றுக்கொண்டு, செயற்படும்படி, வடக்கு, கிழக்கு மாகாண டி.ஐ.ஜிகளுக்கும், யாழ், வன்னி பிராந்திய இராணுவ கட்டளை தளபதிகளுக்கும் கூறுங்கள்.”

“கடைசியாக எமது ஆட்சியில் எனது பொறுப்பிலேயே இந்து சமயத் துறை இருந்தது. ஆகவே மக்கள் என்னிடமும் முறையிட்டுள்ளார்கள். அவைபற்றி இந்த சபையில் பேச வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது”.

இவ்வாறு தொடர்ந்த என் பேச்சை கேட்டிருந்த ஒரு அரச தரப்பு எம்.பி நண்பர் ஒருவர், உணவு வேளையின் போது, “கார்த்திகை தீப பண்டிகையை ஏன் கொண்டாடுகிறீர்கள்?” என என்னிடம் கேட்டார். “நீங்கள் பிடித்து வைத்திருக்கும், கதரகம தெய்யோவின் பேர்த்டே” என்று அவருக்கு நான் பதில் சொன்னேன்.

**...மிழ் போராளிகள், சிங்கள மக்களை ...பொறுத்தவரையில், அரசுக்கு எதிராக ...யுதம் தூக்கிய பயங்கரவாதிகள். அது ...மட்டுமல்ல, போரில் மரணித்த தமிழ் ...பொதுமக்களும் கூட, அரசுக்கு எதிரான ...யுத நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு ...வழங்கிய பயங்கரவாதிகள். இதுதான் தெற்கின் கசப்பான யதார்த்தம்.**

**கே:** **மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்க வேண்டும் என்றகோரிக்கை உங்கள் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட வில்லை. இது தொடர்பாக பலமுறைபேசியவண்ணமே இருக்கிறீர்கள். இந்த ஆட்சிக்காலத்தில் பிரதமர் குறித்த விடயத்தை முன்மொழிந் துள்ளார். இந்த விடயத்தில் மக்கள் நம்பிக்கை கொள்ளலாமா? இந்த ஆட்சியில் இவ்விடயம் சாத்தியப்படுமா?**

**ப:** மலையக தமிழரது சனத்தொகை, பதினைந்து இலட்சம். இதில் தோட்ட தொழிலாளர் ஆக ஒன்றரை இலட்சம்தான். ஏனையோர் தோட்ட வரையறைக்கு வெளியே வந்து அடாத்தாக இன்று முன்னேறி வருகிறார்கள் என்பதை முதலில் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டுமெனக் கூறி விடுகிறேன்.

**கே:** **மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்த ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களை முன்னேற்றப் போவது இந்த நாள்சம்பளம் அல்ல. ஆயிரம் என்ன, இரண்டாயிரம் ரூபாகூடக் கொடுத்தால் கொடுக்கட்டும். வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால், இது நிரந்தரத் தீர்வு இல்லை. அப்படியானால் தீர்வு என்ன?**

**ப:** அரசாங்கம், தொழிலாளர் குடும்பங்களுக்கு, சொந்தமாகவோ, நீண்டகால குத்தகைக்கோ, தோட்டக் காணிகளைப் பிரித்து கொடுக்க வேண்டும். தோட்டகம்பனிகள் இன்று ராஜாங்கம் நடத்தும் காணிகள் எதுவும், தோட்ட கம்பனிகளுக்குசொந்தமானவையல்ல. கம்பனிகளே இங்கே நீண்டகால குத்தகைக்குதான் தோட்டங்களைப் பெற்று “நிர்வாகம்” செய்கின்றன. ஆகவே, அரசாங்கமே தோட்ட காணிகளைப் பிரித்துகுத்தகைக்கு தொழிலாளருக்கு கொடுத்தால், கம்பனிகாரர்கள் மலையக உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தில் தலையிட முடியாது. தொழிலாளர்கள் தமக்கு ஒதுக்கப்படும் காணியில் தாம்பறிக்கும் கொளுந்துகளை, அந்த பகுதியில் உள்ள எந்தவொரு தொழிற்சாலைக்கும் “பேரம்” பேசி விற்க முடியும். எந்தவொரு கம்பனியும் எமது மக்களை மிரட்ட முடியாது. இதுதான் தோட்டத் தொழிலாளரை, கிராமத்து விவசாயிகளாக மாற்றும் மலையக தொழிலாள மக்களையும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கும் நியாயமான நிரந்தரத் தீர்வு. இதுவே தமிழ் முற்போக்கு கூட்டணி சொல்லும், மலையக தொழிலாளரின் வருமானத்தை அதிகரித்து அவர்களை இந்நாட்டின் முழுமையான குடிமக்களாக மாற்றும் தீர்வு யோசனையாகும்.

**கே:** **கடந்த ஒரு வருடத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சி முறை பற்றி நீங்கள் என்ன நினைக்கறீர்கள்?**

**ப:** மரதன் ஓட்டம் ஓடப்போவதாக ஆர்ப்பாட்டமாக சொல்லி ஆரம்பித்து, முதல் நூறு மீற்றரிலேயே, தடுக்கி விழுந்து தோற்றுப்போகும் பந்தய வீரர் இந்த கோத்தாபய ராஜபக்ச. அதனால் தான் இவரை நாம் கொழும்பில், “சேர் பெயில்” ஆகிவிட்டார் என்கிறோம். இவரது அனுபவமின்மை அப்பட்டமாகத் தெரிகிறது. ஆகவே இவரது ஆட்சியும் “பெயில்”. இன்னும் கொஞ்ச நாள் பொறுமையாக இருங்கள். போகப் போக வேடிக்கை பார்க்கலாம்.

**கே:** **குடும்ப வறுமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் செல்கிறார்கள். மலையக பகுதிகளில்இருந்து அதிக அளவான பெண்கள் செல்கிறார்கள் . அவர்கள் நாட்டுக்கு அதிகளவான வருமானத்தைஈட்டிக்கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் அங்கு பல்வேறு சித்திரவதைகளை அனுபவிப்பதுடன் பலர்உயிரிழந்தும் உள்ளனர். இந்த நிலையில் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ஏதாவது நடவடிக்கைகளை நீங்கள் அரசிடம் முன்மொழிந்துள்ளீர்களா?**

**ப:** சொல்வதற்கு வெட்கப்படுகிறேன். உலகில் மிகவும் கொடூரமான தொழில் சூழல் நிலவும் நாடுகளுக்குள் எங்கள் நாட்டுப் பெண்களை, தெரிந்தே தொழிலுக்கு அனுப்பி வைத்து விட்டு, அவர்கள் உழைத்து அனுப்பும் அந்நியச் செலவாணியை வைத்து வாழும் நாடாக நாம் இருக்கிறோம். இதில் மலையகம், வடக்கு, கிழக்கு, தெற்கு, தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று வேறுபாடு இல்லை. நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு போகிறார்கள். இதை மாற்ற, அவர்களது பாதுகாப்பை அங்கேயே உறுதிபடுத்த, அண்மைய காலத்தில் வழி இருப்பதாக நான் நினைக்கவில்லை. அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மற்றும் சமூகங்களே தாமாக திருந்தி, சர்வதேச மனித உரிமைகளையும், தொழில் சட்டங்களையும் மதித்து நடந்தாலே தீர்வு வரும்.


ஆகவே ஒரே வழி, நமது பெண்கள், இந்த நாடுகளுக்கு பணிப்பெண்களாகப் போவதை சட்டம் போட்டு நிறுத்துவது ஆகும். அதைச் செய்ய எமது நாட்டு பொருளாதாரம் உயர வேண்டும். இன்னமும், பாதுகாப்புக்கு இவ்வளவு தொகையை ஒதுக்கும் கேவலமான ஆட்சியாளர்களை கொண்ட இந்நாட்டில் இதற்கு இப்போதைக்கு வழி இல்லை. இந்த நாட்டில் எல்லாமே பிழை. இங்கே முழு “சிஸ்டம்” மாற வேண்டும்.

தோட்டத் தொழிலாள சமூக பெண்களை பொறுத்த வரையில் அவர்களை விடச் சிறந்த உழைப்பாளிகளை நான் வாழ்நாளில் கண்டதே இல்லை. நான் மேலே சொன்ன தோட்டக் காணிகளை பிரித்து வழங்கி, அவர்களது சொந்த ககாணிகளில் உழைக்கும் கிராமவாசிகளாக அவர்களை மாற்றுவதே ஒரே வழி.

**கே:** **தமிழ் எம்.பிக்கள் எல்லோரும் ஒரே அணியாக ஒன்றியமாக செயலாற்ற முடியாதா? முன்பு நீங்கள் இதை முன்மொழிந்தீர்களே?**

**ப:** அந்தக் காலம் இப்போது மாறி விட்டது. நான் அதை முன்மொழிந்தபோது அதைத் தடுத்தவர்களின் வரலாற்றுப் பிழை அதுவாகும்.

இன்றும் தமிழ் எம்.பிக்கள் நாடாளுமன்றத்திலும், வெளியேயும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அதற்காக நாமெல்லோரும் ஒரே கட்சியாக இருக்க வேண்டும் என்ற தேவையில்லை. ஒருவருக்கு உரிய பாத்திரத்தை அடுத்தவர் புரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக பாருங்கள். கொழும்பு எம்.பியான, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரான எனக்கு இந்நாட்டு தேசிய அரங்கில் ஒரு பாத்திரம் இருக்கிறது. அதை நான் சரியாகச் செய்வதாக நினைக்கிறேன். கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் கஜேந்திரகுமார் எம்பி மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் ஒவ்வொரு பாத்திரங்களை வரலாறு நிர்ணயம் செய்துள்ளது. அதை அவர்கள் இன்று சிறப்பாகச் செய்ய தொடங்கி உள்ளார்கள் என நினைக்கிறேன். கடந்த கால காழ்ப்புணர்வுகள் இப்போது இல்லை. உண்மையில் அரசு பக்கம் இருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கூட உரிய பாத்திரம் இருக்கிறது. இவற்றை நாம் புரிந்து செயற்பட வேண்டும். அந்தப் பரந்த விரிந்த அரசியல் நோக்கும் மனதும் எமக்கு இருக்க வேண்டும். எட்டாவது நாடாளுமன்றத்தில் இருக்காத, இன்றைய ஒன்பதாம் சபையில் இருக்கும் கஜேந்திரகுமார், சாணக்கியன், விக்னேஸ்வரன் போன்றோர் வடக்கு,கிழக்கின் சார்பில் மிகச் சிறப்பாக சபையில் செயற்படுவதாக நான் நினைக்கிறேன். என்னால் இயன்ற அனைத்து ஒத்துழைப்புகளையும் நான் அவர்களுக்கு வழங்குவேன்,



# நிழல்

சிறுகதை

வ.றொபின்
(புன்னாலைக்கட்டுவன்)

விடிய வெள்ளனவே வழக்கத்துக்கு மாறாய் ஏதோ ஒரு சத்தம் .

அந்தச் சத்தம் என்னவாக இருக்கும்? உற்றுக் கேட்டபோது என் இதயம் படபடக்கத் தொடங்கியது. ஏன்? இந்தச் சத்தம் என் நெஞ்சில் ஒரு படபடப்பை ஏற்படுத்த வேண்டும்?

அந்தச் சத்தத்தை கூர்ந்து செவிமடுத்தேன்.

மரம் ஒன்று வெட்டப்படும் சத்தம்தான். பக்கத்து வீட்டு குஞ்சண்ணை வீட்டிலை மரம் தறிக்கிறாங்கள் போல என்று என் மனதை சமாதானம் செய்து கொண்டேன். இல்லை... இல்லை...அந்தச் சத்தம் இன்னும் பலமாக , கிட்டவாக என்காதில் ஒலித்தது. அது எங்கடை முற்றத்து வேம்பு, நான் ஊஞ்சல் கட்டி ஆடிய வேம்பு, தோழர்களோடு கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடிய மரநிழல், கெந்தி விளையாடிய இடம், குச்சி முறிச்சு பல்துலக்கியது, நுளம்புக்கு வேப்பம் இலையும், கொட்டையும் சேர்த்து புகை போட்டது, வேப்பம்பூவில் செய்த வடகம், வெள்ளிக் கிழமைகளில் நாவூறுக்கு கட்டிய வேப்பம் குழை, இந்த மரத்தில் தான் முறிச்சது, காளி கோயில் வள்ளியம்மா கலையாடிய வேப்பம் குழை........ என்று மனதுக்குள் நினைத்தவாறே முற்றத்துக்கு ஓடி வந்தேன்.

தறித்து விழுந்த மரத்தைச் சுற்றி ஒரு காகம் பறந்துகொண்டே இருந்தது... அந்த மரத்தில் கட்டியிருந்த அதன் கூட்டில் முட்டையிட்டு அடை காப்பதற்குள் அதன் கூடு கலைந்தபோனதைப் போல நமக்கு நிழலாயிருந்த வேம்பும், எனக்கு நிழலாக இருந்த கிழவியும் எனைவிட்டுப் பிரிந்து போய் விட்டதை உணர்ந்தேன்.

"ஐயோ! "என்று கத்திக்கொண்டு " வெட்டுறதை நிப்பாட்டுங்கோ" என்று நான் சொல்லி முடிக்கவும், கம்பீரமாக எங்கள் குடிசைக்கு குடையாய் நிழல் தந்துவந்த அந்த வேப்ப மரம் சரிந்து விழவும் சரியாக இருந்தது.

" எதுக்கு இப்ப இந்த வேம்பைத் தறிச்சீங்கள்?" என்று அப்பாவைக் கேட்டபோது அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்குள் கண்களில் கண்ணீர் சொரிய ஆரம்பித்தது.

".. அப்பா!.... அப்பா!... என்ன நடந்தது சொல்லுங்கோ?" என்று திரும்பத் திரும்பக் கேட்டேன்.

"அப்.....பம்மா... அப்பம்மா.... "என்று வார்த்தைகள் முழுமையாகாமல் அப்பாவின் வாய் திக்குமுக்காடின.

"..... அப்பம்மாக்கு என்ன நடந்தது? ஏன் அப்பா அழுகிறீங்கள் "என்று அப்பாவைக் கட்டியணைத்து உலுப்பிக் கேட்டேன்.

" அப்பம்மா செத்திட்டா... தங்கம்" என்று கூறிக்கொண்டே என்னை இறுக்கி அணைத்துக்கொண்டார்.



எப்போதுமே தனது பொக்கை வாயால் எனக்காகப் பல கதைகள் கூறுவதும், நான் சாப்பிடாமல் அடம் பிடிக்கும் அந்தக் கணங்களில் அன்பாகச் சோறூட்டி என்னை அரவணைப்பதும், புளியங்கொட்டை பிளந்து திண்ணையிலே கரியால் தாயக்கோடு கீறி என்னோடு தாயம் விளையாடுவதும், சுருட்டு வாங்கத் தாற காசில மிச்சத்துக்கு புளூட்டோ ரொபி வாங்கச் சொல்லுறதும் நீதானே பாட்டி என்று கிழவியின் நினைவுகள் என் நெஞ்சில் ஆர்ப்பரிக்க கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்தது.

"அழாத பிள்ளை.... எல்லாம் விதி.... அப்பம்மா கடவுளிட்டைப் போட்டா "என்று சொல்லி என்னை ஆறுதல்படுத்தி எனது தலையை வருடி விட்டார் அப்பா. என்னால் அப்பம்மாவின் இறப்பை ஏற்றுக் கொள்ளவே முடிய வில்லை. ஏனென்றால் எனதுலகில் என்னைத் தேவதையாகக் கொண்டாடிய கிழவி அவள் தான். எனக்கு பால் அப்பம் பிடிக்கும் என்று நிறையப் பால் விட்டு அப்பம் சுட்டுத் தந்த அப்பம்மா. நான் கிழவி என்று செல்லமாகத் தனகினாலும் பொக்கை வாயால் சிரித்து விட்டு தன் மடியில் இருத்திக் கொள்வாள் என்னை.

திடீரென்று நினைவுகளிலிருந்து நீங்கி "அப்பம்மாவை இப்பவே பாக்க வேணும் "என்று விம்மி... விம்மி... அழுதுகொண்டே அப்பம்மா வீட்டை போறதுக்கு தயாரானேன். தறித்து விழுந்த மரத்தைச் சுற்றி ஒரு காகம் பறந்துகொண்டே இருந்தது... அந்த மரத்தில் கட்டியிருந்த அதன் கூட்டில் முட்டையிட்டு அடை காப்பதற்குள் அதன் கூடு கலைந்து போனதைப் போல நமக்கு நிழலாயிருந்த வேம்பும், எனக்கு நிழலாக இருந்த கிழவியும் எனைவிட்டுப் பிரிந்து போய்விட்டதை உணர்ந்தேன்.

# # #

இந்தக் கதையை அந்தப் பென்னம்பெரிய கட்டடத்தின் நான்காம் மாடியில் இருந்தவாறு எனது இரண்டு பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொண்டிருக்கின்றேன்.... என்னை அறியாமலே கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்கிறது... இது பனிக் காலம் பனிமழை கொட்டத் தொடங்குகிறது... நினைவுலகில் பின்னோக்கிச் சென்ற நான்... மீண்டும் நினைவுக்குத் திரும்பு கையில்.... தொலைபேசி ஒலிக்கிறது.

".. ஹலோ....ஹலோ.... பிள்ளை, அம்மா கதைக்குறது விளங்குதா? "

"ஓம் அம்மா சொல்லுங்கோ... சுகமா இருக்கிறியளோ?..."

" ஓம்பிள்ளை... நாளைக்கு அப்பம்மாவோட 30வது நினைவு தினம். வழமை போல நீ அனுப்பின காசுக்கு மரக் கண்டுகள் வாங்கியாச்சுப் பிள்ளை... " என்று சொல்வதற்குள் அழைப்பு துண்டிக்கப்படுகிறது. அப்போதுதான் என் கணவர் வேலை முடிந்து உள்ளே வருகிறார். நான் வேலைக்காக வெளியே புறப்பட்டேன்!




நட்சத்திரக் கண்ணீர்ச் சிதறல்களில்
நனைந்து நெகிழ்ந்து பூத்திருக்கும்
மேகத் தவிப்பின் மெல் நாணமேலீட்டால்
மேகத்தை இழுத்து போர்த்தியும்
மோகன மேனி திரை தாண்டி தரை தொடும்
வானத்தின் வதன வனப்புக்களிடையே
ஓயாது ஓடி ஓடி காலகாலமாய் எதை
தேடிக் கொண்டிருக்கின்றது நிலவு

காவி உடையில் பிரம்மச்சாரியப் பேச்சு
தனித்திருக்கையில் குமரிகள் கூட்டு
வெளி உலகிற்கு வெள்ளுடை வேந்தர்
இருட்டுக்குள் நிர்வாணக் கூத்தர்;
மாதர் எதிரில் செந்தமிழ் மறவர்
மனதினுள்ளே துகிலுரிந்து
மனப்படுக்கையில்
மானபங்கப்படுத்தி களிகொள்ளும்
அரிதார மனிதர்கள் மத்தியில்
துளியாவது மனிதம்
துடிக்கிதா என்ற தேடலோ..

ஓலைக் குடில் கூட இல்லாமல்
ஓரமாய் வயிறும்
வாழ்வும் ஒட்டி உறங்கும்
ஏழை மனிதர்கள் வாழும் ஊரில்
கால்பட்ட இடமெல்லாம்
கல்லுக்கு மாடம் கட்டி
கற்சிலைகளை சிறைவைத்திருக்கும்
கல்லுக் காடுகளிடையே
கடவுளை தேடுகிறதோ..

பால்மணம் மாறா பட்டாம் பூச்சிகள்
பாடப் புத்தகத்து பட்ட(ப்) படிப்பெல்லாம்
புகுத்திவிடும் மேதாவித்தனத்தின்
காலிடுக்கில்
நசுங்கிக் கிடக்கும் பிஞ்சு இதயங்களும்
தொழில்நுட்ப எந்திரக் குஞ்சுகளிடையில்
தொலைந்துபோன கொஞ்சும் மழலைச்
சிரிப்பும் சித்தெறும்புக் குறும்பும்
சிறிதாவது சிந்திடாதோ
என்ற ஏக்கத் தேடலோ...

கண்ணே முத்தே கனியமுதே
கண்ணுக்குக் கண்ணானவளே – என்று
கெஞ்சி வஞ்சி மடிசாய்ந்து
தலை கோதிய தலைவன் தனம் தேடி
தொலைதூரத்தில் தொலைந்துபோக
தலைமகள் தசைத் துடிப்படக்க
தாண்டிடும் வேலியிடுக்கில்
கண்ணகியின் காற்சிலம்பாவது
கண்பட்டுவிடாதோ
என்ற ஆர்வத் தேடலோ

ஆசை மேகத்து ஆட்டம் நிக்க
நிலவின் தேடல் ஓட்டம் நிக்கும்
தேடலின் வேகம் நிறுத்தி
வேட்டையின் வேட்கை நிறுத்த
தேடிடும் வெகுமதி கிட்டும்
இந்த உண்மைகள் உணர்ந்தும்
மனித ஆட்டம் நிற்கவில்லையே!

சிவபாலன் அஜெந்தன்



தருமராசா அஜந்தகுமார்

# மரபை மறைக்கும் மாமத யானைகள்

## பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்

தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அதற்கோர் குணமுண்டு என்றார் நாமக்கல் கவிஞர்.

ஓர் இனம் தன்னை முதன்மைப்படுத்தும்போது அவ்வினத்தின் மரபுச்செழுமையும் புதுமைத்தடங்களும் முக்கியமானவை. பிட்டுக்கும் பீட்'ராவுக்கும் நடந்த போராட்டத்தைக் கண்டோம். ஜல்லிக்கட்டைப் பாதுகாக்க அணிதிரண்டதைக் கண்டோம். ஆனால் நடைமுறையும் செயற்பாடுகளுமே இன்னும் முக்கியமானவை. பூகோளமயமாக்கலின் இரும்புக்கரங்களுக்குள் எமது மரபின் செழுமைகள் நசிந்துகொண்டிருக்க, நாமும் அதன் மேல் ஏறி இருந்து கொண்டே செல்பி எடுப்பதாய் எம் வாழ்க்கை நகருகின்றதோ என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடியவில்லை. எங்கள் தாத்தாவிடம் ஒரு யானை இருந்தது என்ற கதையாய் எங்கள் மூதாதையரிடம் ஒரு மரபு இருந்தது என்று சொல்வதில் மகிழ்கின்றோமேயொழிய அந்த மரபு எங்களிடம் இருக்கின்றதா என்று நாம் கேள்வி எழுப்புவதில்லை. மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை என்று பாரதி எப்பொழுதோ இதைக் கூறிவிட்டான். நாவற்குழியில் அமைக்கப்பட்டிருக்கும் சிவபூமி அருங்காட்சியகத்தைப் போன்ற மரபுக்காவல் செயற்பாடுகளுள் எம்மை ஆழ இறக்கவேண்டும். சுற்றுலாவுடன் முடித்துவிடாமல் அதற்கான பிரக்ஞையை எமது மனங்களிலும் அடுத்த தலைமுறையிடமும் ஏற்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் சேகரிப்பு, கடற்கரையில் குப்பை பொறுக்குதல் போன்ற அணிதிரட்டுச் செயல்கள் போலவே திட்டமிட்ட தொடர்ச்சியான சேகரிப்புகள் தேவையானவை. அவற்றை ஒரு பிரக்ஞையுடன் சுமக்கவேண்டும். கண்டி மரபுரிமை என்ற அமைச்சு உருவாக்கம் அரசால் முன்னெடுக்கப்பட்டது என்றால் எமது மரபைத் தொன்மையைப் பேணும் கைங்கரியத்தை நாம்தானே நிறைவேற்றவேண்டும். மொழியின் தொன்மைகளை கலை இலக்கியத்தின் தொன்மைகளை- புழங்குபொருள்களின் தொன்மைகளை இன்னும் இன்னும் ஆழமாக நமது தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சென்று சேர்க்கவேண்டும். இங்கு சொற்கள் அல்ல முக்கியம்; செயற்பாடுகளே முக்கியம். எமது வீடுகளை வாழ்க்கை முறைகளை மீண்டும் மரபின் ஆழத்துக்குள் சென்று அலங்கரிக்கவேண்டும். புதிய தலைமுறை நோய்மைகளுக்குள் சிக்குண்டு இருப்பதை நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். இந்த இடத்திலேதான் தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூலின் முதன்மை எழுகின்றது. தொல்காப்பியம் என்ற பெயரே முக்கியமானது. தொன்மையைக் காத்து இயம்புவது என்று இதற்குப் பொருள் கூறலாம். 138 பதிப்புகளுக்கு மேல் தொல்காப்பியப் பதிப்புகள் நிகழ்ந்துள்ளன( ச.வே.சுப்பிரமணியன், 1992) என்பது சாதாரணமான விடயம் அல்ல. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் 1,610 சூத்திரங்களையும் கொண்டு தமிழர்களின் தமிழின் செழுமைக்குரிய நூலாக இது அமைகின்றது. இதன் ஆசிரியரின் பெயர் என்னவென்று தெரியாது. ஆனால் சிறப்புப் பாயிரத்திலே பனம்பாரணர் தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோனே என்று குறிப்பிடுகின்றார். இதன்மூலம் தன்னை, மரபு காத்துக்கொள்கின்ற ஒருவனாகவே அவர் பிரகடனப்படுத்துகின்றார. தொல்காப்பியத்தின் தோற்றத்தின் பின்னால் மரபைக்காக்க வேண்டிய தீர்க்கமும் தீர்க்க தரிசனமும் காணப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. நூலின் பெயர் மாத்திரமல்ல நூல் மரபு என்ற இயலுடன் ஆரம்பித்து மரபியல் என்ற இயலுடன்தான் தொல்காப்பியம் நிறைவுபெறுகின்றது. இந்தத் திட்டமிடல் என்பது எம் கவனத்தை ஈர்க்கின்றது. பின்வந்த இலக்கண நூல்களில் மரபியல் முதன்மை பெறவில்லை. சிலர் தொல்காப்பியத்தின் மரபியல் மீது, அதில் உள்ள சாதிப்பாகுபாடு குறித்து கேள்விகளை எழுப்புகின்றார்கள். அவற்றைப் பிற்சேர்க்கை என்று விமர்சிக்கின்றார்கள். அவை தேவையான சிந்தனைகள்தான். ஆனால் அவற்றைவிடத் தொல்காப்பியரின் மரபு பற்றிய பிரக்ஞையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தொல்காப்பியத்துக்கு முன்னர் இருந்த வழக்குகளைத் தொகுத்தே தொல்காப்பியம் தோன்றியது என்ற பனம்பாரணரின் கருத்து தொல்காப்பியரின் மரபுப் பிரக்ஞையை, தொகுப்பு உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்திவிடுகின்றது. அவரிடம் இருந்த செயற்பாட்டு அறிவைப் புலனாக்கிவிடுகின்றது.

**வழக்கும் செய்யுளும் ஆஇரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலம் தொகுத்தோனே போக்கறுப் பனுவல்**

மரபியலில் இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள், உயிர்ப்பாகுபாடு,குறித்த சமூகங்களுக்கு உரியவை, மரபின் முதன்மை, மரபு தோன்றும் முறைமை, நூல் இருவகை, நூல் நான்கு வகை, நூலின் தன்மை, வழிநூல் முதல் நூல், முதனூலின் சிறப்பு, நூலின் குற்றங்கள், நூலின் உத்திகள் எனப் பலவற்றைப் பேசுகின்றார்கள். மரபியலில் அவர் பேசிய விடயங்களில் மொழிமரபு, சமூக மரபு, நூல்மரபு என்பவற்றோடு அறிவியல் நோக்கு இருந்ததை உயிர்ப்பாகுபாடு பற்றிய விடயத்தில் காணமுடியும். ஓர் அறிவுயிரில் இருந்து ஆறறிவு உயிர்வரை பாகுபடுத்தி தெளிவாகச் சொல்கின்றார். புல்லும் மரனும் ஓர் அறிவினவே(சூத்திரம் 1527) என்று கூறியவர் புறக்காழனவே புல் என மொழிப, அகக் காழனவே மரம் என மொழிப (1585) என்று அவற்றிலும் தெளிவான பாகுபாட்டைக் கூறும் நுணுக்கத்தைக் காணமுடியும். இது அறிவுச் சமூகத்தின் ஓர் அடையாளமாகும். வ.சுப.மாணிக்கனார் தொல்காப்பியத்தைத் தமிழர்களின் உயிர்நூல் என்று சொன்னதன் காரணத்தை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். தொல்காப்பியத்தை ஒரு மானுடவியல் சமூகவியல் ஆவணமாக நாம் அணுகும் போது ஏற்படும் வாசிப்புகள் தனித்துவமானவை.

மரபில் இருந்து மாறக்கூடாது என்பதை மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும் (1591) என்று தெளிவாகக் கூறுகின்றார். மரபைத் தெரிந்து கொண்டு தெளிவான தளத்திலே நின்றுகொண்டு பேசுவதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். நவீனங்களின் முகவர்களைப் போல நாம் செயற்படுவதில் அல்லது காட்டிக்கொள்வதில் அர்த்தமில்லை. மரபிலக்கியங்களின் செழுமையை, யாப்புச்சுமைக்குள்ளோ அதன் மொழிச்சுமைக்குள்ளோ ஒளித்துவிட்டு நாம் நவீன இலக்கியங்களைப் பேசி அர்த்தமில்லை. நவீன இலக்கியத்தின் அடையாளமான பாரதி மரபின் நீட்சியாகவே நவீனத்துவத்தில் பிரகாசித்தவன் என்பதை உணராவிடின் அது காலப்பழியாய் எம்மை வளைத்துக் கொள்ளும். தொல்காப்பியம் கூறிய நூலின் குற்றங்கள், உத்திகளை இன்றைய தலைமுறை படிக்க வேண்டும். அவற்றுக்குள் மிகப்பெரிய கோட்பாடுகளே மறைந்திருப்பதைக் காணமுடியும். மரபில் இருந்து நாம் தேவையான விடயங்களை அகத்துறிஞ்சிக் கொள்ளவேண்டியதும், எம்மைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டியதும் அவசியமாகும்.

எம் வாழ்வு மரபுச்சக்கரத்துடன் இயங்குவது, தேவையானபோது எம்மைப் புதுப்பித்துக்கொண்டே நாம் நகரவேண்டும். இன்று கொரோனாவை எதிர்கொள்பவர்கள் மரபு வைத்தியத்தின் முறைகளையே அதிகம் கைக்கொண்டு மீண்டு வருவதைக் காணமுடிகின்றது. சில வேளைகளில் மரபின் பிரகாசம் எல்லாவற்றையும் மிஞ்சி விளங்கும் காலமும் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணரவேண்டும். அவசர உலகத்தின் தளைகளில் இருந்து விடுபட்டு மரபுக்குளுமையை அனுபவிக்க மனம் ஏங்குவதை நிதர்சனம் நிரூபித்து வருகின்றது.

புறநானூற்றிலே (256) ஒரு பாடலில் வண்டிச்சக்கரத்தில் பொருந்திய பல்லியானது அதனோடும் சுழன்று நெடுந்தொலைவு செல்வதுபோல், வாழ்வின் பல துன்பங்களிலும் அவனோடு ஒட்டி இதுவரை வாழ்ந்து வந்தவள் யான் என்று தலைவி கூறுவாள்.

**அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய**
**சிறுவெண் பல்லிபோலத் தன்னொடும்**
**சுரம்பல வந்த எமக்கும் ..**

அதுபோல ஏதோவொரு வகையில் மரபோடு ஒட்டியபடியே எம்முடைய வாழ்க்கையும் பல போராட்டங்களைச் சந்தித்துக்கொண்டு நகர்கின்றது.

புறநானூற்றிலே கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறந்த பிறகு, அவனின் இல்லாமையைப் பொத்தியார் என்ற புலவர் பாடும்போது ஒரு உவமையைக் கையாள்கின்றார்.

**பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த**
**பெருங்களிறு இழந்த பைதற் பாகன்**
**அது சேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை**
**வெளில்பாழ் ஆகக் கண்டு கலுழ்ந்தாங்குக்**
**கலங்கினேன் அல்லனோ யானே**

யானையால் உணவுக்குப் பஞ்சமின்றி வாழ்ந்த பாகன் அந்த யானை இறந்து போக கட்டியிருந்த கம்பம் வெறிதாகிப் போக கண்கலங்கி நிற்பானாம். அதுபோல எமக்கு அடையாளத்தைத் தந்த வாழ்வை இழந்து நாம் கலங்குகின்றோம். ஆயினும் விழிப்புணர்வுகள் ஆங்காங்கு பிரகாசமாய் இருப்பதைக் காணமுடிகின்றது. அதனூடாக சாத்தியங்களை உருவாக்கவேண்டிய கூட்டுப்பொறுப்பின் முன்னால் நாம் நிற்கின்றோம். நவீனத்தை அதன் வசதிகளை அனுபவித்த எங்களால் மரபின் செழுமை தெரிந்தாலும் அனுபவிக்க முடிவதில்லை. சொற்களில் சுகங்காண முடிந்த எங்களுக்கு அவற்றை நடைமுறையில் பொருத்தி வெற்றிகாணும் சாத்தியம் வாய்ப்பதில்லை. இந்த மாயைகளை நீக்குவதே பெருங்காலக்கடமை. சூரனின் முன்னால் முருகன் நின்றபோது சூரனுக்கு அவனுடைய பாதங்கள் முருகனைச் சுற்றிவர ஆசைப்பட்டன. கைகள் தொழுதிட விரும்பின. தலை பணிந்திட விரும்பியது. நாக்குப் போற்றிட விரும்பியது. நான் இவற்றுக்கு ஆளாகி வாழுதல் வேண்டும் என்றெல்லாம் யோசிக்கின்றான். ஆனால், நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே என்கின்றான். அதுதான் மரபு விடயத்திலும் எமக்கு நடக்கின்றது. மரபை மறைக்கின்றன மாமத யானைகள்.

எம்மை சுதாகரித்து, மறுவாசிப்புச் செய்து, உறுதியுடன் நடைபயில்வோம்.

**இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை அத்தனையும் சற்றே இறக்கிச்**
**சலிப்பகற்றி, ஓய்வு பெற்றுப்**
**புத்தூக்கம் எய்திப் புறப்படவும் எண்ணுகிலோம்.**

**மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக்**
**கொட்டி உதறி, குவிகின்ற கூழத்துள்**
**வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி,**
**அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ**
**சற்றேனும் இல்லோம்..**
**வேண்டாத குப்பை விலக்கி,மணி பொறுக்கி**
**அப்பாலே செல்லும் அறிவோ குறைவு**
**ஓ!**
**இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு்**
**பண்பாட்டின் பேரால் பல சோலி எங்களுக்கு.** (கவிஞர் இ.முருகையன்)



# "வித்துவான் பதில்கள்!"



**ஐயா நீங்கள் எப்படி வித்துவான் பட்டம் பெற்றீர்கள்?**

**கிருசன், யாழ்ப்பாணம்**

நான் பெறவில்லை. மற்றவர்கள் தந்தார்கள். காதை முறுக்கினால் கத்துவான் என்பதற்காக.

**வித்தூ..**
**இந்தக்காலத்தில தற்கொலைகளும் நீண்டு கொண்டே இருக்கு. என்ன காரணம் என்று நினைக்கிறீங்க?**

**ஆத்மிகா, வவுனியா**

வாழ்க்கையில் தோல்விகளை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைத்தான் இது காட்டுகிறது.





**ஐயா வித்தூ.....**
**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குள்ளயும் இந்த வெள்ளம் புகுந்ததைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?.**

**ஆரணி**
**சுழிபுரம்**

நக்கிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கம் என்ன என்பார்கள் அதுபோல ஓடுகிற வெள்ளத்துக்கு ஆசுப்பத்திரி என்ன ஆட்டுக் கொட்டில் என்ன? ஓடுற வெள்ளத்தைக் கட்டடங்கள் கட்டி ஓட விடாமல் தடுத்தா, அது கண்டதுக்கையும் பூரத்தான் பார்க்கும், கவனம்.

**பண்டிதரே, பாடம் படிக்கிறது பேயைப் பிடிக்கிறது போல இருக்கிறது... நல்லா படிக்க ஏதாவது டிப்ஸ் சொல்லுவீங்களா?**

**ஆரியன் கவின்,**

இரண்டுமே கஷ்டமான விடயங்கள் தான். திருமணத்தைக் கைவிட்டால் முதலாவதைப் பிடிக்கத் தேவையில்லை. படிப்பில் ஆர்வம் கொள்ளுங்கள். கல்விதான் உங்கள் வாழ்க்கையை முன்னேற்றும் ஒரே விடயம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். முதலில் இலகுவான பாடங்களைக் கற்று மன வெறுப்பைப் போக்கிக் கொண்டு பின்னர் பின் கடினமான பாடங்களுக்குச் செல்லுங்கள்.





**வித்தூ, உங்களுக்கு பேஸ்புக்கில வீடியோ பார்க்கும் பழக்கம் உண்டா?**

**ச.கபிசன், கிளிநொச்சி**

ஸ்கூல் புக்கில பாடம் படிக்கும் பழக்கமும், இரவில் ரேடியோ கேட்கும் பழக்கமுமே உள்ளன. நான் ரொம்ப பழசுங்க.

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்

**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com



கொரோனாப் பெருந்தொற்றால் ஏற்பட்டிருக்கும் உளம்சார் பாதிப்புக்களை நிவர்த்தக்கும் நோக்கில் இந்தக் கட்டுரை சாந்திகம் உளவளத் துணை நிறுவனத்தின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க (SCORE) செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக பிரசுமாகின்றது.

# எதிர்கால சந்ததியை சிறப்பாக வடிவமைப்போம்

**கலாநிதி க.கஜவிந்தன்**
முதுநிலை உளவியல் விரிவுரையாளர்,
உளவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எதிர்காலச் சந்ததியைச் சிறப்பாகக் கட்டமைப்பதில் எம் அனைவருக்கும் தவிர்க்க முடியாத பங்குண்டு. சிறுவர்கள், பெற்றோரிடம் இருந்தும் உறவினர், அயலவர், சமூகத்தினர் என்போரிடமிருந்துமே பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். நடைமுறைகள், பழக்க வழக்கங்களை அறிந்து கொள்கின்றனர். அந்த வகையில் அவர்களுக்குக் காத்திரமான பழக்கங்களையும், பண்பாடுகளையும் கற்பித்துக் கொடுக்க வல்லவர்களாக எம்மை நாமே தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தை வளர்ந்துவரும் காலத்தில், குழந்தைகளுக்கு கதை சொல்லல் மிக முக்கியமானதாகும். தமிழ் மக்களின் மிகத்தொன்மையான இந்தப் பண்பாடு தற்போது அருகி வருவது உண்மையில் வருத்தத்துக்குரியது. இந்த நிலை மாற்றப்பட்டு கதைசொல்லல் மூலம் குழந்தைகளை வளர்க்க வேண்டும். அதிலும் குழந்தைகளுக்குப் பொருத்தமான, அவர்களின் மனங்களைப் பாதிக்காத கதைகளை நாம் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஊட்ட வேண்டும். இவ்வாறு சொல்லப்படும் கதைகள் குழந்தைகளின் சிந்தனைகளைத் தூண்டுபவையாக அமைய வேண்டும். உதாரணமாக 'நிலவில் பாட்டி வடை சுடுகின்றாள்' என்பதற்குப் பதிலாக 'நிலவில் மனிதன் கால் பதிக்கின்றான். அங்கிருந்து மண்ணை பூமிக்கு எடுத்து வருகின்றான்' என்றவாறாக இந்தக் கதைகளை மாற்றியமைக்கலாம். இதற்குப் பெற்றோரும் இவை தொடர்பில் தெளிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்.




கற்பிக்க வேண்டிய விடயங்களை சொற்களிலும் சித்திரங்களிலும் செயற்பாடுகள் மூலம் கற்பிக்க வேண்டும். இன்றைய ஆரம்ப வகுப்புகளில் இவை உள்ளீர்க்கப்பட்டமை தெரிந்ததே ஆகும். இன்றைய இயந்திரமய வாழ்க்கையில் சிறுவர்களை எங்கே கவனிப்பது? என்பதுதான் பலரின் கேள்வி. பலருக்கு இது தான் தற்பொழுது பிரச்சினை. எனினும் எமது எதிர்காலத் தூண்களை செம்மைப்படுத்த முயற்சி செய்து நேரம் ஒதுக்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்படும் நேரத்துக்கு பெறுமதியோ விலைமதிப்போ இல்லை.

குழந்தைகளை வீட்டுக்குள் பக்குவமாக வைத்திருக்கின்றோம் என்று நினைத்து அடக்கி வைத்திருப்பதால் குழந்தை திறன்குன்றிய குழந்தையாக வளரும். பிறரிடம் செல்வதற்கோ, பிறருடன் உரையாடவோ அச்சப்படும். இது அவர்களின் சிந்தனைத் திறனையும் பாதிக்கும். அதேபோல் சிறுவர்கள் குறும்புக் காரர்களாக இருந்தால் அவர்களைத் தண்டிப்பதோ அடிப்பதோ தீர்வாக அமைந்துவிடாது. சிறுவர் பருவம் என்பது செயற்பாட்டுத் திறனும் முயற்சியும் அதிகமுள்ள பருவம். இக்காலத்தில் சிறுவர்கள் பல செயற்பாடுகளைச் செய்வர். உதாரணமாக வீடு கட்டல், வண்டி செய்ய முயலுதல், பட்டம் செய்தல் என பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்குத் தடைபோடாது சிறுவர்களை ஊக்குவிக்க வேண்டும். சமூகத்தில் குழந்தை சிறப்பாக வாழ பேச்சுத் திறமை அவசியமாகும். இன்றைய குழந்தைகள் நன்றாகவும் புத்திசாலித்தனமாகவும் பேசக்கூடியவர்கள். இதனைப் பெற்றோர்கள் முறையாக வழிப்படுத்தி வளர்க்க வேண்டும். அத்தோடு நம் பண்பாடு, கலாசாரம் என்பவற்றையும் மறக்காமல் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும். எமது இனம், மொழி, பண்பாடு கலாச்சாரம் நமக்கு முக்கியமானவை. இவ்வாறு வளர்த்தெடுக்கும் குழந்தையே நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் உருவெடுக்கும்.




# மௌன மொழி 25 கவிதைகள்

வாழ்க்கையில் துரோகம் இது
வாழ்ந்து பார்த்தால் புரியும் அது
மாடியில் தூங்கும் மனிதா
இந்த மழலையை கொஞ்சம்
திரும்பிப் பாராயோ
மனிதா நீ மனிதனா
புனிதா நீ குருடனா
மழை காற்றுக் குளிரை தாண்டி
அவள் உறக்கம் தெருவோரத்தில்

**அ.சிறீஸ்காந்தராசா**
தொண்டைமானாறு

பச்சைப் பிஞ்சு அவள்
பழஞ்சோற்றுக்கே பரிதவிக்க
பண்பிலா பகைவர் நாம்
பீட்ஷாவா? பிட்டா? என
பிதற்றிக் கொண்டு திரிகிறோம்

**பா.ராகவி**
அரியாலை, யாழ்ப்பாணம்

உணவுப் பாத்திரங்கள் கவிழ
பசியை போக்க முடியாது என்று
அதனை மறக்க நித்திரையைத் தேடினால்
தலை கால் நீட்ட முடியாது
நிம்மதியான நித்திரையைத் தொலைத்து
வறுமையில் வாடும் பிள்ளை நிலா

**ப.பவிஷா**
கோண்டாவில்

தகரக் கதவு சாத்தியபடி
வாளிகள் சரிந்தபடி
கட்டைப் பலகையில்
காலிரண்டையும் முடக்கி
கையைத் தலையணையாக்கி
தூங்கும் சிறுமலரே
உனக்கேன் இந்தக் கதி
உன் நிலை யாரறிவார்

**சி.பாலசுந்தரம்**
சண்டிலிப்பாய் வடக்கு
சண்டிலிப்பாய்

வாழ்வில் பணவசதி இல்லையாயினும்
இந்த ஏழைச் சிறுமி நிம்மதியாய் உறங்குகிறாள்
ஆனால் உலகில் பணக்காரனோ அதைக் கட்டிக்
காக்க தூக்கமின்றித் தினமும் அலைகின்றான்

**சுப்ரமணியம் ஜெயரூபன்**, பருத்தித்துறை

வறுமை உன்னை
வெறுமை செய்ததோ?
உன் பெற்றோர்
உனைப்பெற்ற பேற்றினை
உணர மறுத்தனரோ?
சுருண்டு கிடக்க
நீ நத்தையல்ல..
எழுந்து நட
உள்ளங்கையில்
உனைத் தாங்கி
உற்றபாசம் செய்ய இந்தப்
பூமித்தாயுண்டு... நீயே
நாளை நாயகி ஆவாய்...

**அல்வை த. சிவா**

ஏழ்மையின் உறக்கமோ
பசியின் தொடக்கமோ
ஒற்றைப் பருக்கைக்காய்
ஒற்றைப் படுக்கையில்
ஓராயிரம் ஏக்கங்களுடன்
மனதை வதைத்த
தேவதை இவள்..

**கு.கனிஸ்ரா,**
கொழும்புத்துறை

சிட்டாய் பறந்திடும் சின்னஞ்சிறு மலர்
வறுமையின் வெறுமை வாட்டிடவும்
புரேவியின் கொடுமை தாக்கிடவும்
தரணியில் பெண்ணாய் பிறந்ததினால்
மண்ணுடன் புதைத்து போகும்வரை
திண்ணமாய் வாழ்ந்திட எண்ணியே
காத்துக் கிடக்கின்றாள் காந்தள்மலர்

**இ.ரிஷிதா**, நயினாதீவு

**பரிசு பெறும் கவிதை**

**படுத்துறங்கப் பாயில்லை...**
**பலகைக்கட்டை சொந்தமெனக்கு...**
**இட்டுண்ண உணவில்லை...**
**இரவும் பகலும் ஒன்றெனக்கு....**
**கட்டியணைக்க அன்னையில்லை..**
**காவலுக்கும் யாருமில்லை....**
**கதியற்ற வாழ்வே தஞ்சமெனக்கு..**

**பற்குணன் அம்பிகாபதி.**
வவுனியா

**படுக்கக்கட்டில்**
**பஞ்சணையில்லை**
**வறுமையின் வஞ்சனை**
**வாசல்வரை துரத்த**
**குந்துபலகையே**
**குவலயமாக**
**சுருண்டுகிடக்கும்**
**சிறு பூ..!!!**

அளவை த.சுதன்

பசி வயிற்றைக் கிள்ள
பானையில் சோறும் இல்லை
பசியாற வலியும் இல்லை
படைத்தவனும் மறந்துபோக
வானம் போர்த்திய பூமிக்குள்
உறங்குது பச்சிளம் பூவொன்று
வரண்டது வயிறு
சுருண்டது உடல்.!!

**மூர்த்தி கவிதா**
திருகோணமலை

உயிர் வாழ நீர் இன்றி
நிழல் இன்றி
துயில் கொள்ள இடம் இன்றி
ஒதுங்குகிறேன் சுவரோரம்
அரவணைக்கயாரும் இன்றி
உணருகிறேன் தனிமையினை
வறுமையும் தனிமையும்
இளமையில் கொடியது காணீர்

**தி. ராஜினி**, அராலி



**பணத்தை படுக்கையாக்கி குளிருக்குள் குளிரூட்டி....**
**தூங்கும் மனிதம் இல்லா மனிதனுக்கு தெரியவில்லை...**
**நீ தூங்கவில்லை மாறாக...**
**வெயில் மழையை வீடாக்கி...**
**ஒரு வேளை சோற்றுக்காய்...**
**மீதி வேளை காற்றுண்டு காத்திருக்க...**
**கொதிக்கும் நீரில் விழுந்த புழுவை போல....**
**பசி தாகத்தின் மயக்கத்தில் சுருண்டு வீழ்ந்தாய் என்று...**

**மரியதாஸ்.சாங்கர்**, திருநெல்வேலி

# மௌன மொழி 26

வடமறுந்து போனாலும்
குடமுடைந்து போனாலும்
வறுமையில் வாழ்ந்தாலும்
பொய்யறியா பிஞ்சுநான்
தண்ணீரிலும் கண்ணீரிலும்
எங்கள் வாழ்க்கை உறக்கமே..

**ஞானப்பிரகாசம் மரியதாஸ்.**
இத்தாலி.

**வானம் கூரையானது**
**வீதியோ வீடானது!**
**பஞ்சணையுமில்லை - அன்னையின்**
**நெஞ்சணைதானுமில்லை.**
**சத்திரங்கள் சாவடிகள்**
**கட்டுகின்ற மனிதா- நீ**
**பிஞ்சு மனம் வெந்து நொந்து**
**வீதியில் கிடக்கும் நிலை பாராயோ?**

**ஜெ.லெவீந்** , வவுனியா

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**

**19.12.2020**

கவிதைக்கு பரிசு 1000/-

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப் புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதி யில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
**0773165555**

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 16







தில்லைநாதன் கோபிநாத்

**1990** ஆம் ஆண்டுகளில் புலிகளும், அவர்களுடன் தொடர்புடைய கட்டமைப்புக்களும், மக்கள் அமைப்புக்களும் மக்களிடம் செய்திகளையும் தகவல்களையும் எடுத்துச் செல்லும் முயற்சிகளில் பெருமளவு உழைப்பைச் செலுத்தத் தொடங்கினர். அவ்வகையில் தொடங்கப்பட்ட வெளியீடுகளில் செய்திகளை எடுத்துச் செல்ல உருவான ஈழநாதம், உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளை வெளிப்படுத்திய விடுதலைப் புலிகள், மகளிர் விவகாரங்களைக் கவனப்படுத்திய சுதந்திரப் பறவைகள், பொருண்மியச் செய்திகளுக்காகத் தொடங்கப்பட்ட ஆதாரம் ஆகியவை தொடர்பாகக் கடந்த வாரங்களில் அலசியிருந்தோம்.

'இந்த வரிசையில் கலை, இலக்கிய, சமூக இதழாக வெளிச்சமும், மாணவர் இதழாகச் சாளரமும் 1991இல் தொடங்கப்பட்டன. மாதாந்த இளையோர் இதழ்சுவடி எனக் குறிப்பிடப்பட்டுச் சாளரத்தின் முதலாவது இதழ் 1991 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களுக்குரியதாக வெளியானது. 1991ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதியன்று கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் சாளரம் அறிமுக விழா இடம்பெற்றது. முதல் இதழில் கல்வியாளர் பக்கம், நூல் அறிமுகம், விளையாட்டு, கல்வி, மொழி, பொதுஅறிவு, பருவ்வயதினர் பக்கம், வரலாறு, இயற்கை மாசுபடல், அரசியல், பண்பாடு ஆகிய பிரிவுகளில் ஆக்கங்கள் வெளியாகின. "சமூகம் பற்றியும், கல்வி பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இளையோர்கள், குறிப்பாக மாணவர்கள் இவை பற்றிச் சிந்திக்கும் நிலையை வளர்ப்பதும்" சாளரத்தின் நோக்கங்களாகக் குறிப்பிடப்பட்டன. (இதழ் 2) சாளரத்தின் தொடக்க ஆசிரியராக அ. கௌரிகாந்தன் செயற்பட்டார்.

சாளரத்தின் முதலாவது இதழில் தனித் தமிழ் தொடர்பான கட்டுரை ஒன்று வெளியானது. அக்கட்டுரையில் முடிந்த அளவுக்கு தனித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதையும் அவ்வாறான சொற்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் புதிய சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துவதையும் தனது கொள்கையாகச் சாளரம் அறிவித்தது. தமிழில் தாராளமாகக் கலந்துவிட்ட சமஸ்கிருத, ஆங்கிலச் சொற்களின் கலப்படம் அகற்றப்பட வேண்டும் என்பது கவனப்படுத்தப்பட்டது. இரண்டாவது இதழின் ஆசிரியத் தலையங்கத்தில் இக்கொள்கை பின்வருமாறு மேலும் வலியுறுத்தப்பட்டது.

"தனித்தமிழ் பிரயோகம் தமிழர்கள் மத்தியில் ஒரு கொள்கையாகவும், சுய கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நடைமுறையாகவும் வர வேண்டும் என்பதே எமது அவாவாகும். ஆனால் இதை ஒரே இரவில் நடைமுறைச் சாத்தியமானதாக்கிவிட முடியாது. புதிய சொற்பத ஆக்கங்கள் என்பது அவ்வளவு சுலபமானதல்ல. பயன்படுத்தும் ஒரு சொற்பதம் எடுத்த எடுப்பில் பொதுவாக அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு விடவும் முடியாது. ஆகவே, சாளரம் தன்னால் முடிந்த அளவுக்குத் தனித்தமிழ் சொற்பதங்களையே பிரயோகிக்கும். இதில் நாம் தவறுகளும் விட இடமுண்டு.

வாத விவாதத்துக்கு உள்ளாகியுள்ள சொற்பதங்களையோ வாத விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய சொற்பதங்களையோகூட நாம் பயன்படுத்தக்கூடும். தமிழீழ மக்களின் அறிவுஜீவ உலகம் பொது முடிவாக குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளும்வரை இம் முரண்பாடுகள் தொடரவே செய்யும். அறிவுஜீவ உலகம் ஏற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. நடைமுறையில் அது முரண்பாடுகளை ஏற்படுத்தாததாய் அமைய வேண்டும்.

மக்களின் பாவனைக்குச் சுலபமானதாயும் இருக்க வேண்டும்" இந்தக் கொள்கை விளக்கத்திலேயே தனித் தமிழ் அல்லாத சொற்களின் பயன்பாட்டை அவதானிக்க முடிகிறது. புலிகளின் மொழிக் கொள்கை மாற்றமடைந்த காலமாக இது அமைகிறது. தமிழ்நாட்டின் திராவிட இயக்கங்களின் கொள்கைகள் புலிகளுடன் இணைந்து செயற்போட்டோரது விருப்பத்துக்குரியவையாக இருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். வட எழுத்துக்களுடன் அமைந்த போராளிகளின் பெயர்கள்கூடத் தனித்தமிழ்ப் பெயர்களாகப் பின்னர் மாற்றப்பட்டமையையும் இங்கே கவனப்படுத்த வேண்டும். தனித்தமிழ் தொடர்பான ஆர்வத்தை அக்கால இளையோர் மத்தியில் சாளரம் உருவாக்கியதை அக்காலத்தில் மாணவராயிருந்த நானும் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

**1990 - 1995**

குறுக்கெழுத்துப் போட்டி, சுருக்கமான வசனங்களை வழங்கி அவற்றை இரண்டுக்கு மேற்படாத ஓவியங்களாக வரையும் வாக்கிய ஓவியப் போட்டி, நுண்ணறிவுப் போட்டி, பொது அறிவுப் போட்டி, ஓவியங்களை வழங்கி அவற்றுக்குப் பொருத்தமான சொற்கள் அல்லது கவிதை எழுதும் போட்டி என மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் சாளரத்தில் இடம்பெற்றன.

ஊடும்பாவுமாகப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளைப் பரப்புரை செய்யும் ஆக்கங்கள் ஒவ்வொரு சாளரம் இதழிலும் இடம்பெற்றன. தாயக மீட்பால் மாணவர்க்கு ஆவதென்ன! (இதழ் 1), பிரபாகரன் முத்தமிழ் விழாவுக்கு வழங்கிய

> **புலிகளுடன் தொடர்புடைய ஏனைய வெளியீடுகளைப் போலவே சாளரத்திலும் தொடர்ச்சியாக ஓவியங்கள் இடம்பெற்றன. ஓவியர் அ. மாற்குவின் ஓவியங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.**

வாழ்த்துச் செய்தியின் பகுதிகள் (இதழ்2), ஆனையிறவு தளம் மீதான தாக்குதல் (இதழ் 3), போரும் பாடசாலையும் (இதழ் 4) என இத்தகைய பரப்புரைகள் தொடர்ச்சியாக வெளிவந்தன. அக்காலத்தில் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான பதிவுகளும் சாளரத்தில் உள்ளன.

சாளரம் தொடர்ச்சியாகக் கவனப்படுத்திய இன்னொரு துறையாக சுற்றுச் சூழல் விழிப்புணர்வு அமைகிறது. வளைகுடா யுத்தத்தின் சுற்றுச் சூழல் பயங்கரவாதம் (இதழ்1), வனம் ஒரு வளம் (இதழ் 2), ஓசோன் படையில் ஒரு துவாரம் (இதழ் 3), பெண் குழந்தைகளை கண்போல் பேணுங்கள் (இதழ் 4) எனச் சூழல் மாசுபடல் எனும் பொதுத் தலைப்பில் கட்டுரைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. சாளரத்தின் பண்பாடு பகுதியில் சிறுகதைகள், உருவகக் கதைகள், பத்தி எழுத்துக்கள், கவிதைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. அவ்வாறே விளையாட்டு, அரசியல், கல்வி, வரலாறு, நூல் அறிமுகம், உளவியல், மருத்துவம் ஆகிய பகுதிகளிலும் தொடர்ச்சியான ஆக்கங்கள் இடம்பெற்றன. அரும்புகள் எனும் பகுதியில் பாடசாலை மாணவரின் கவிதைகளும் தெறிப்பு பகுதியில் சாளாரத்துக்கு அனுப்பப்பட்ட வாசகர் மடல்களும் இடம்பெற்றன.

புலிகளுடன் தொடர்புடைய ஏனைய வெளியீடுகளைப் போலவே சாளரத்திலும் தொடர்ச்சியாக ஓவியங்கள் இடம்பெற்றன. ஓவியர் அ. மாற்குவின் ஓவியங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. ஈழநாதத்துக்கான அச்சகம் தொடங்கியபோது உருவாக்கப்பட்ட புளொக் உருவாக்கும் பகுதி இதற்கு உதவியாக இருந்திருக்கலாம். அத்துடன் சாளரத்தின் தளக்கோலமும் (லே அவுட்) அக்காலத்தில் இருந்த நுட்பங்கள் சார்ந்து பார்க்கையில் மிகச்சிறப்பாக அமைந்தது.

சாளரத்தின் வரலாறு பகுதியில் சர்வதேச வரலாறுகளும் உள்ளூர் வரலாறுகளும் இடம்பெற்றன. கியூபா புரட்சி, பிரான்சியப் புரட்சி, பிடல் காஸ்ரோ, சேகுவேரா எனப் பல்வேறு புரட்சிகள், புரட்சியாளர்கள் குறித்து கவனப்படுத்தப்பட்டன. மறைக்கப்பட்ட வரலாறு எனும் கட்டுரைத் தொடரில் உள்ளூர் வரலாற்றில் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பகுதிகள் கவனப்படுத்தப்பட்டன. குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் பாட நூல்களில் இலங்கைத் தமிழர் தொடர்பான வரலாறுகள் எவ்வாறு மறைக்கப்பட்டும் திரிவுபடுத்தப்பட்டும் உள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழர் வரலாறு தொடர்பான இந்தக் கவனப்படுத்தல் சாளரத்துடன் மட்டும் நின்று விடவில்லை. 1998ஆம் ஆண்டில் வன்னியில் சமூகக் கல்வி மன்றம் என்ற அமைப்பினூடாக பாடசாலை மாணவர்களுக்கான "சமூகக் கல்வியும் வரலாறும்" எனும் பாடநூல்கள் ஆறாம் ஏழாம் எட்டாம் ஆண்டுகளுக்காக வெளியிடப்பட்டன. இலங்கையின் முதற்குடிகள், யாழ்ப்பாண அரசு, வன்னி அரசர்கள், கிழக்கு மாகாணக் குடித்தொகை, தமிழர் பிரதேசங்கள், அவற்றின் மண் தொகுதிகள், நீர்வளங்கள் போன்ற பல்வேறு வரலாற்று உள்ளடக்கங்கள் அந்தப் பாடநூல்களில் இடம்பெற்றன.

சாளரம் இரண்டாவது இதழில் வாசகர் வட்டம் உருவாக்கும் திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாளரத்தில் வெளியாகும் கட்டுரைகளையும் உள்ளடக்கத்தையும் விமர்சிக்கும் கூட்டங்களை விரிவான விழிப்புணர்வுக் கூட்டங்களாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டது. இத்தகைய வாசகர் வட்டமொன்று கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் உருவாக்கப்பட்டு ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன. ஆயினும் இத்திட்டம் பெருமளவில் வெற்றி பெற்றதா என்பது தெரியவில்லை. ஆயினும் பாடசாலைகள் தோறும் மாணவர் கழகங்கள் ஊடாகச் சாளரத்தின் விநியோகம் பரவலாக நடைபெற்று வந்தது.

அக்காலத்தின் பொருளாதாரத் தடைகளால் கொழும்பிலும் தமிழகத்திலும் வெளியாகும் இதழ்கள் யாழ்ப்பாணத்தில் இலகுவில் உடனடியாகக் கிடைக்க முடியாத நிலை உருவாகியிருந்தது. அந்த நிலையில் சாளரம் போன்ற இதழ்களுக்கான தேவை அதிகரித்தது. சாளரத்தின் மாணவர்கள் மத்தியிலான வெற்றி சாளரம் போன்ற இதழ்கள் மென்மேலும் தேவை என்பதனை உணர்த்தியது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் அறிவுக்களஞ்சியம், நங்கூரம் உள்ளிட்ட பல சஞ்சிகைகள் தோன்றிப் பெருவரவேற்பு பெற்றன. அவை தொடர்பில் அடுத்தடுத்த வாரங்களில் பார்க்கலாம்.

# 101 வயதினிலே...

நீராவியூர் யசிந்தா



குழந்தைத்தனமான முகம். ஒளிவீசும் கண்கள். நிதானமான பேச்சு. திடகாத்திரமான உடல்வாகு. இவ்வளவும் சேர்ந்த கலவைதான் வேலுப்பிள்ளைத் தாத்தா. அவரைப் பார்த்தால் 70 வயதென்றுதான் பார்ப்பவர்கள் சொல்வார்கள். ஆனால் தாத்தா சதமடித்து 101 ஆவது பிறந்த நாளையும் கொண்டாடிவிட்டார். வேலுப்பிள்ளைத்தாத்தாவின் பூர்வீகம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூளாய் தான். 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி மூளாயில் பிறந்த வேலுப்பிள்ளைத் தாத்தா, இப்போது கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் இருக்கும் மகனோடும், யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் உள்ள இன்னொரு மகன் வீட்டிலும் மாறி ,மாறி வசித்து வருகின்றார். எங்களோடு தன் கடந்த கால நினைவுகளை அசைபோடத் தொடங்கினார்.

" எனது அப்பாவின் பெயர் சரவணமுத்து, அம்மாவின் பெயர் கதிராசிப்பிள்ளை.எனக்கு மூன்று சகோதரர்கள்.

ஆனால் இப்போது அவர்கள் ஒருவரும் உயிருடன் இல்லை.நான் 3 ஆம் வகுப்புவரை மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும், பின்னர் 6 ஆம் வகுப்புவரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் படித்தேன். அதன் பின்னர் கல்வியைத் தொடரவில்லை. எனக்கு 15 வயதாக இருக்கும் போதே அப்பாவுடன் சேர்ந்து விவசாயத்தில் இறங்கி விட்டேன்.



எனக்கு 39 வயதாக இருக்கும்போது பெற்றோர் விருப்பப்படி யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை சேர்ந்த பரமேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்கொண்டேன். எங்களுக்குள் எந்தச் சண்டையும் இல்லாமல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சந்தோசமாக 60 வருடங்கள் வாழ்ந்தோம். கடந்த 2 வருடங்களுக்கு முன்னரே என்மனைவி என்னை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்தார்.



எனக்கு ஆண்பிள்ளைகள் நான்கு பேர். இதில் இளைய மகன் தற்போது உயிருடன் இல்லை. ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார். இங்குள்ளவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் , தெல்லிப்பழையிலும், மற்றையவர் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியிலும் வசித்து வருகின்றனர். இவர்கள் இருவரது வீடுகளிலும் தான் நான் மாறி மாறி தங்கியிருக்கிறேன். எனக்கு இப்போது 5 பேரப்பிள்ளைகள் உள்ளனர். எனக்கு பிள்ளைகளோ, பேரப்பிள்ளைகளோ எந்தக்குறையும் வைக்கவில்லை. ஒரு கூட்டுக் குடும்பமாக சந்தோசமாக வாழும் பாக்கியத்தை அந்தக் கடவுள் தந்திருக்கிறான்" என்று கூறிய படியே கதிரையில் சாய்ந்திருந்த தாத்தா நிமிர்ந்து எழுந்து " அப்பா.... அப்பா.... "என்று வாய்க்குள்முணுமுணுத்தார்.

"என்ன அப்பா, அப்பா என்று அடிக்கடி சொல்கிறீர்கள்?" என்று கேட்டதும், லேசாகச் சிரித்தார்.

" நான் அப்பா என்று சொல்வது கடவுள் பிள்ளையாரை.........." என்று சொல்லி மீண்டும் சிரித்துக்கொண்டார்.

"பிள்ளையாரை பிடிக்குமா?"எனக் கேட்டதுதான் தாமதம் ,

"ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை..... " என்று பாடத் தொடங்கிவிட்டார். அப்படியே நிறுத்தாமல், "தோடுடைய செவியன்..... சொற்றுணை வேதியன்"என்று அவரது தேவாரப்படலம் தொடர்ந்தது. அந்தத் தேவாரங்களில் ஒரு வரி கூடப் பிசகில்லாமல், கணீரென்ற குரலில் அவர் பாடுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். "இந்த வயதிலும் இவ்வளவு தேவாரங்களையும் ஞாபகம் வைத்துள்ளீர்களே ?" ஆச்சரியத்தை அள்ளி வீசினோம்.

" தேவாரங்கள் மட்டுமில்லை, எனக்கு பழைய புராணக் கதைகள் கூட இப்போதும் அத்துப்படி" சொன்னவர் அத்தோடு நிற்கவில்லை. தனக்கு என்னென்ன கதைகள் தெரியுமெனப் பட்டியல் இடத்தொடங்கி விட்டார். "மகாபாரதம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம்...." என்று அந்தப் பட்டியல் அனுமர் வால் போல நீண்டுகொண்டே போனது.

"சரி தாத்தா, இந்த வயசிலையும் இவ்வளவு திடகாத்திரமாக இருக்கிறீர்கள். அத்தோடு எல்லா விடயங்களையும் ஞாபகம் வைத்திருக்கிறீர்கள். அத்தோடு இரகசியம் என்ன?" நீண்டநேரமாக மனதை அரித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கடைசியில் கேட்டேவிட்டோம்.

அவ்வளவுதான். குழந்தைப்பிள்ளை போல தாத்தா கெக்கட்டம் விட்டுச் சிரிக்கத் தொடங்கினார். அந்தச் சிரிப்பு அடங்கச் சிலநிமிடங்கள் எடுத்தது.

"இதுக்கெல்லாம் நான் சாப்பிட்ட சாப்பாடுகள் தான் காரணம். நான் சாப்பிட்டமாதிரி இப்போது யார் சாப்பிடுகினம் ?" என்று பீடிகை போட்டுவிட்டு, வழக்கம் போல தனது பாணியில் அந்தச் சாப்பாடுகளையும் பட்டியலிட்டார்.

" ஒவ்வொரு நாளும் ஒரு பானை நெல் குத்துவன். அதில் வரும் பச்சை அரிசிச் சோறுதான் மத்தியானமும், இரவும் சாப்பாடு. பழைய சோற்றுத் தண்ணீதான் காலைச் சாப்பாடாக இருந்தது.ஒவ்வொருநாளும் சோற்றுக்குள் நல்லெண்ணெய் விட்டுத்தான் சாப்பிடுவேன். ஒரு நாளும் நல்லெண்ணெய் இல்லாமல் சோறு சாப்பிட்டது கிடையாது.இப்போதும் நல்லெண்ணெய் இல்லாவிட்டால் சோறு எனக்கு இறங்காது" என்றவர் கொஞ்சம் நிதானித்தார்.

" ஒவ்வொரு கிழமையும் ஒடியல் கூழ், குரக்கன் கூழ் என்று மாறி மாறி ஏதாவது ஒன்று கட்டாயம் குடிப்பேன். பனங்காய் என்றால் எனக்கு உயிர். பனங்காய் காலத்தில் மரத்தில இருந்து விழுந்தவுடன் உடன ஓடிப்போய் எடுத்து வந்து ஒரு பனங்காய் முழுவதும் சாப்பிடுவேன்.

பனங்காய்ப் பணியாரம், பனாட்டு இவைகளும் பிடித்தமானவை. தினமும் ஒரு லீற்றருக்கு அதிகமாக பசுப் பால் குடிப்பேன். இப்போதும் இறைச்சி, பால் , தயிர் என்று சாப்பிடவே செய்கிறேன். இதுவரைக்கும் நீரிழிவு, இதய நோய் அப்படி எதுவும் வரவில்லை" என்று கூறியபடியே கால்களை நீட்டி, கைகளை அங்கும் இங்குமாக அசைத்தார்.

" என்ன தாத்தாஉடற்பயிற்சி எல்லாம் செய்யிறீங்கள்? " கேட்டதும் மீண்டும் சிரிப்பு.

" இது உடற்பயிற்சி இல்லை, யோகாசனம் " என்று சொல்லியவாறே ஒரு சில ஆசனங்கள் 'அசால்டாக' செய்து காட்டினார்.

30 வயது தாண்டிவிட்டாலே, கை ஏலாது கால் ஏலாது என்று ஒவ்வொரு நோயாக நம்மவர்கள் அடுக்கிக் கொண்டே செல்லும் காலத்தில்,தாத்தா 101 வயதிலும் யோகாசனம் செய்வது இன்னொரு ஆச்சரியமே.

வேலுப்பிள்ளைத்தாத்தாவுக்கு திரைப்படங்கள் பார்ப்பது பிடித்தமான ஒன்று.

*(21ஆம் பக்கம் பார்க்க)*

**ஒவ்வொரு நாளும் ஒரு பானை நெல் குத்துவன். அதில் வரும் பச்சை அரிசிச் சோறுதான்.**

**மத்தியானமும், இரவும் சாப்பாடு. பழைய சோற்றுத் தண்ணீதான் காலைச் சாப்பாடாக இருந்தது.**

**ஒவ்வொருநாளும் சோற்றுக்குள் நல்லெண்ணெய் விட்டுத்தான் சாப்பிடுவேன். ஒருநாளும் நல்லெண்ணெய் இல்லாமல் சோறு சாப்பிட்டது கிடையாது.**

**இப்போதும் நல்லெண்ணெய் இல்லாவிட்டால் சோறு எனக்கு இறங்காது" என்றவர் கொஞ்சம் நிதானித்தார்.**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



அங்கு கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருள்களின் அடிப்படையில் பொலிஸார் வெளியிட்ட இன்னொரு தகவல் தான் பெரும் அதிர்வலைகளை யாழ்ப்பாணத்தில் உண்டாக்கியிருந்தது.
அந்த விடுதியில் சட்டவிரோதக் கருக்கலைப்பு மையமொன்றும் இயங்கி வந்தது என்ற தகவலே அது.
ஆனால் இதற்கு ஆதாரமாக பொலிஸார் வெளியிட்ட புகைப்படங்களில், ஆஸ்துமா நோயாளிகள் பயன்படுத்தும் 'பம்ப்' கருவிகளும், கையுறைகளும், இன்னும் சில சாதாரண நோயாளர்கள் பயன்படுத்தும் பொருட்களுமே இருந்தன. எனவே சந்தேகம் முளைத்தது. நேரடியாக எமது புலனாய்வுக்குழு களத்தில் இறக்கப்பட்டது. அங்கு திரட்டிய தகவல்களின் அடிப்படையில் அந்த விடுதி, தனியே பாலியல் தொழில் நடத்துவதற்காகவே இயங்குகின்றது என்றே எல்லோரும் ஒருமித்துச் சொல்கின்றார்கள்.

### அலட்டிக் கொள்ளாத அக்கம்பக்கம்

ஏ-9 வீதியில் கொடிகாமத்திலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது ஆசைப்பிள்ளை ஏற்றம். அதன் அருகே செல்லும் கிளைவீதிதான் கரம்பகத்துக்கு கூட்டிச் செல்லும் பாதை. மிகச் சிறியதொரு கிராமம். விவசாயமே மக்களின் பிரதான தொழில். இன்னமும் கிராமத்து வாசனை ஒட்டியிருக்கும் ஒரு பகுதி. வெளியாரின் நடமாட்டம் குறைவு. அங்கிருக்கும் ஒரு சில குடும்பங்களின் வீடுகளும் எட்ட எட்ட இருப்பதால், ஒரு வீட்டில் நடத்தப்பட்ட இந்த விடுதி பற்றி முதலில் பெரிதாக எவரும் அலட்டிக் கொள்ளவில்லை.

### சிறுமியையும் விட்டுவைக்கவில்லை

அந்த விடுதி நடத்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் ஓய்வுபெற்ற ஒரு அரச உத்தியோகத்தர். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோற்றவர். அவர் பலமுறை பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்டு ஊரவர்களால் கண்டிக்கப்பட்டவர். மிருசுவிலில் இவருக்கு ஒரு கடையை மகன் அமைத்துக் கொடுத்திருந்தார்.
ஆனால் அங்கும் அவர் தன் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. ஒருமுறை சிறுமி ஒருவரோடு அந்த முதிய நபர் தவறாக நடக்க முயன்ற விடயம், அவரது மகனுக்கு தெரிய வர, அத்தோடு தந்தையின் உறவைத் துண்டித்துவிட்டார் மகன். மனைவியும் மகனும் அவரைப் பிரிந்து வேறு இடம் போய் விட்ட நிலையில், இந்த விடுதியை அவர் சில வருடங்களுக்கு முன்னர் கரம்பகத்தில் ஆரம்பித்தார்.

### ஓட்டோ இருப்பது வசதி

ஓட்டோ ஒன்றும் அவரிடம் இருந்ததால் இன்னும் வசதியாகப் போய்விட்டது.
" ஓட்டோவில வாற பொம்பிளையளிட்ட கதை குடுத்து , அதில சரிப்பட்டு வாற ஆக்களை இந்த லொட்ஜுக்கு கொண்டு வாறதுதான் அவருக்கு வேலை. முதலில நாங்களும் கண்டும் காணாதது மாதிரித்தான் இருந்தம். ஆனால் போகப் போக ஆம்பிளையளும் வரத் தொடங்கத்தான் எங்களுக்கு சந்தேகம் வரத் தொடங்கிச்சுது. சிலவேளை பஸ்ஸில வந்திறங்கி, றோட்டில இருந்து இங்க வரைக்கும் நடந்தும் சில பொம்பிளையள் வந்து நிண்டிருக்கினம். கூடுதலா பின்னேரங்களில தான் அவை வருவினம். வந்தால் போக 2,3 நாள்கள் ஆகும். அதுக்கிடையில இரவிரவா மோட்டர் சைக்கிள்ல நிறைய ஆம்பிளையள் வந்து போவினம். கூடுதலா இரவு வாற ஆம்பிளையள் இரவே போறதை அவையின்ர வாகனச் சத்தத்தை வைச்சுக் கண்டுபிடிச்சிடுவம்" என்கிறார் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

## பள்ளிக்கூடத்தில் கைவைத்த விடுதிக்காரர்

" ஊருக்கு அவரால கெட்ட பேர்தான். இஞ்ச வாற பொம்பிளையளில அதிகம் பேர் வெளி மாவட்டக்காரர்கள். இஞ்சத்தை ஆக்கள் இல்லை. ஆனால் ஆம்பிளையள் யாழ்ப்பாணத்துக்காரர்கள் தான். சிலர் வாகனங்களிலயும் வாறவை. உந்த லொட்ஜில தனிய பொம்பிளை பிஸ்னஸ் மட்டும் நடக்கேல்லை. தண்ணிப் பார்ட்டியளும் விடிய விடிய நடக்கும். எப்ப இந்தத் தொல்லை நீங்கும் எண்டு இருந்தம். அவரிட்ட நேரை போய் மோதவும் பயம். ஏனெண்டால் அவருக்கு ஒரு கட்சியின்ரை சப்போர்ட் இருக்கு. அதை வைச்சு ஏதும் செய்துடுவாரோ எண்டு பொறுத்திருந்தம்" என்கிறார் இன்னொருவர்.
இந்த நிலையில் அந்த முதியவர் எல்லைமீறி மேற்கொண்ட காரியம் கிராமத்தவர்களை கொதித்தெழ வைத்தது.
ஒருமுறை அவரது விடுதியில் இருக்கும் அறைகளை விட ஆள்களின் தொகை அதிகமாகி விட்டது. எனவே மேலதிகமாக இருப்போரை ( பாலியல் தொழிலில் அன்றைக்கு ஈடுபடாத பெண்களை) கரம்பகம் பாடசாலையில் இரவு எவரது அனுமதியும் பெறாமல் தங்க வைத்துள்ளார்.
அந்த ஊர் மக்கள் பாடசாலையைக் கோயில் போல நினைப்பவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த விடயம் தெரியவரவே அவரது ஆட்டத்துக்கு ஒரு முடிவு கட்டுவதெனத் தீர்மானித்தனர்.

### பூனைக்கு கட்டப்பட்ட மணி

என்றாலும் அவரோடு நேரடியாக மோதப் பயந்தனர். பூனைக்கு யார் மணி கட்டுவது?
ஒரு வழி கிடைத்தது. கிராமசேவகருக்கு விடயத்தைக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் காரியங்கள் மளமளவென்று நடந்தன. அதிரடியாக பொலிஸ் முற்றுகையிட ,அங்கு தங்கியிருந்த இரு பெண்களுடன் விடுதியை நடத்தி வந்த அந்த முதியவரும் கைது செய்யப்பட்டு அவர் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
அவர் என்னதான் பாலியல் தொழிலை தன் விடுதியில் நடத்திவந்தாலும் கருக்கலைப்பு நிலையம் ஒன்றை அதே விடுதியில் நடத்தினார் என்பதை ஊர் மக்கள் ஏற்கவில்லை
"அப்பிடியான விசயங்கள் நடந்ததாய்த் தெரியேல்லை. அந்தாளுக்கு முட்டு வருத்தம் இருக்கு. அதுக்கு மருந்துகள் வாங்கி வைச்சிருக்கும். அதோட இந்தத் தொழில் செய்யிறவை வயித்தில பிள்ளை தங்காமல் இருக்கிறதுக்கும் குளிசை பாவிச்சிருப்பினம்.. அதுகளை வைச்சுத்தான் பொலிஸ் இப்பிடிச் சொல்லுது போல" என்கிறார்கள் கரம்பக வாசிகள்.
பொலிஸ் சொல்வதுபோல அந்த விடுதியில் கருக்கலைப்பு நிலையத்தை நடத்தி இருந்தால், அது தொடர்பான மருத்துவர்கள் அல்லது தாதிமார் அங்கு வந்து சென்றிருக்க வேண்டும். அப்படி வந்தால் கட்டாயம் ஊர் மக்களின் கண்ணில் சிக்காமல் சென்றிருக்க முடியாது. அங்கு கைப்பற்றப்பட்ட மருத்துவப் பொருள்களும் கருக்கலைப்புக்கு உரியவை அல்லவென்பதும் அவற்றின் புகைப்படங்களைப் பார்க்கும்போது புலனாகின்றது.

### லொக் டவுணில் ஒரு முற்றுகை

யாழ். நகரில் கே.கே..எஸ் வீதியில் இப்படியான விடுதிகளில் ஒன்று கொரோனா லொக் டவுண் காலத்தில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கும் இரு பெண்கள் கைது செய்யப்பட்டு ,தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். அந்தப் பெண்கள் இருவரும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். பாலியல் தொழிலைச் செய்வதற்காகவே குறித்த விடுதிக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். அதே பெண்கள் முதலில் வேறொரு விடுதியிலேயே தங்கி இருந்து 'தொழில்' செய்து வந்தனர்.
தனியே விடுதியில் மாத்திரமல்லாது , சமூக வலைத்தளங்கள் மூலம் தங்கள் வாடிக்கையாளர்களைக் கண்டறிந்து வெளியில் சென்றும் அவர்கள் இவ்வாறான நடத்தையில் ஈடுபட்டனர். இந்தச் சமயத்தில் அதே விடுதியில் இன்னொரு காதல் ஜோடியும் தங்கியிருந்தது. லொக் டவுண் காலமென்பதால், அந்த விடுதிக்கு வெளியாட்கள் வந்து தங்கவில்லை. ஆனால் இந்த நால்வரும் ( பாலியல் தொழிலாளிகளான இரு பெண்கள், காதல் ஜோடி) தங்கியிருந்ததால், நால்வருக்கும் இடையே ஒரு பழக்கம் ஏற்பட்டது. ஒருநாள் அந்தக் காதல் ஜோடிக்கிடையே இந்தப் பாலியல் தொழில் பெண்களால் சண்டை மூண்டது. அந்தப் பெண்களுடன் தன் காதலன் பழகுவது காதலிக்கு பிடிக்கவில்லை. இந்தச் சண்டை பெரிதானதாலேயே அவ்விரு பாலியல் தொழில் செய்யும் பெண்களும் கே.கே.எஸ் வீதியில் இருந்த இன்னொரு விடுதிக்கு மாறினர். அங்கு வந்த சில நாட்களில் தான் பொலிஸ் அவர்களைப் பிடித்தது.

### விடுதிகளுக்கிடையே வலைப்பின்னல் தொடர்பு

இதன் மூலம் இன்னொரு உண்மையும் புலனாகின்றது. இப்படி பாலியல் தொழிலுக்காக இயங்கும் விடுதிகளுக்கிடையே ஒரு வலைப்பின்னல் தொடர்புண்டு. ஒரு விடுதிக்கு வரும் இப்படியான தொழில் செய்யும் பெண்களை தங்கள் விடுதியில் உள்ள வாடிக்கையாளருக்கு வரவழைத்துக் கொடுக்கவே இந்த வலைப்பின்னல் தொடர்பாம்.

### விடுதிகளால் அவதியுறும் அயலவர்கள்

யாழ் . மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியிலும் இப்படியான விடுதிகள் பலவுள்ளன. அப்படி இயங்கும் விடுதி ஒன்றில் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் பாலியல் தொழில் செய்யவென அழைத்து வரப்பட்டு அங்கு இப்போதும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 17 தொடக்கம் 45 வயது வரையான பெண்கள் அந்த விடுதிக்கு தருவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அந்த விடுதிக்கு 'இவ்வாறான தேவைகளுக்காக' வந்து போன ஆண்களுக்கு " இந்த வயதில், இப்படியான தோற்றத்தில் ஒரு பெண் வந்துள்ளார்" எனத் தகவல் வழங்கப்படும். அதன் பின்னர் அந்த வாடிக்கையாளர்கள். பிடித்திருந்தால், தொடர்பு கொண்டு , கட்டண விபரத்தை அறிந்து அங்கு வருவார்களாம். பல வாடிக்கையாளர்கள் மதுபோதையிலேயே தங்கள் பாலியல் இச்சையைத் தீர்க்க இங்கு வரும் போது அயலில் உள்ள மக்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.
" நாங்களும் வீடு வாசலில பொம்பிளைப் பிள்ளையளை வைச்சிருக்கிறம் எண்ட அறிவில்லாமல் உந்த லொட்ஜ்காரர் செய்யிற வேலையை வாயால சொல்ல ஏலாது. இரவிலதான் எல்லாரும் கூடுவினம். ஒரே வாகனச் சத்தம். சரி, உந்த எளிய வேலைக்கு வந்தால், பேசாமல் லொட்ஜுக்க போனாலும் பரவாயில்லை. வாசலில நிண்டு தூசணம் கதைக்கிறது, குடிச்சுக் கும்மாளம் போடுறது எண்டு, அக்கம் பக்கம் இருக்க வழியில்லை. அதைவிட வெறியில வாற சில ஜென்மங்கள் அந்த லொட்ஜ் எண்டு நினைச்சு அக்கம் பக்கத்தில இருக்கிற வீடுகளுக்க இரவு வந்து கேற்றைத் தட்டுறாங்கள். இதெல்லாம் பொலிஸுக்கும் சொல்லிக் களைச்சுப் போனம். அவங்கள் எப்பிடி நடவடிக்கை எடுப்பாங்கள்..இஞ்ச கூட வாறதே அவங்கள் தானே" என்று கண்ணீரோடு. சொல்கிறார்கள் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக இயங்கும் பாலியல் விடுதிகளுக்கு அருகில் வசிப்பவர்கள்.

## நரக விடுதிகள் இன்னும் பல

பொலிஸார் முற்றுகையிட்டதாலேயே கரம்பக விடுதி பற்றி வெளியுலகுக்கு தெரிய வந்தது. ஆனால் இன்னும் பகிரங்கப்படுத்தப்படாமல் இது போன்ற பாலியல் துர்நடத்தைக்கு இடமளிக்கும் ஏராளமான விடுதிகள் வடக்கில் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. பொலிஸார் தெரிவித்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 100 விடுதிகள் எவ்வித பதிவுகளுமின்றி இயங்குகின்றன.. இவ்வாறு பதிவில்லாத விடுதிகள் எல்லாவற்றிலுமே பாலியல் துர்நடத்தை இடம்பெறாவில்லைத்தான். எனினும் இப்படி பதிவற்ற விடுதிகளில் சிலவற்றில் தான் சட்டவிரோதமான முறையில் பெண்களை வைத்து பாலியல் தொழில் செய்கின்றனர்.

### பொலிஸாரும் வாடிக்கையாளராம்

இந்த விடுதிகளை நடத்துபவர்கள் பொலிஸாரை ' உரிய முறையில் கவனிப்பதாலேயே ' பொதுமக்கள் முறையிட்டும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் கரம்பகத்தில் பிடிபட்டதைப் போல ஏராளமான பாலியல் விடுதிகளை முற்றுகையிட்டு, அவற்றைத் தொடர்ந்தும் இயங்கவிடாமல் தடுத்திருக்க முடியும். "விடுதி உரிமையாளர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொண்டால் இப்படியான குற்றங்கள் நடக்க வாய்ப்பேயில்லை. குறைந்தபட்சம். அயலில் உள்ள எங்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்திற் கொண்டாவது இப்படி பாலியல் துர்நடத்தைக்கு விடுதி உரிமையாளர்கள் இடமளிக்காமல் இருக்க வேண்டும் என்கிறார்கள் பொதுமக்கள்.

(21ஆம் பக்கம் பார்க்க)

(20 ஆம் பக்க தொடர்ச்சி)



## நாங்கள் என்ன செய்வது? விடுதியாளர்கள் ஆதங்கம்

ஆனால் விடுதி உரிமையாளர்களோ வேறுவிதமாகச் சொல்கிறார்கள்.

"விடுதிகளைப் பதிவு செய்கின்ற போது வயது குறைந்த எவரையும் தங்குவதற்கு அனுமதிக்க கூடாது என்பதும் தங்குபவர்களது அடையாள அட்டை பதிவு செய்துவிட்டு அனுமதிக்கும்படியே அறிவுறுத்தப்படுகின்றது.

ஆனால் இங்கு வருபவர்கள் கணவன் மனைவியா ?காதல் சோடியா..? இல்லை ஒன்றாக தங்குவதற்காக வருகிறார்களா? என்று விசாரணை செய்ய முடியாது. அடையாள அட்டையைப் பரிசோதித்து வயது சரி என்றால் பதிவு செய்துவிட்டு தங்குவதற்கு அனுமதிப்போம்.

வருபவர்கள் தாம் கணவன். மனைவி என்று கூறினால் திருமண எழுத்துக் கொப்பியோ புகைப்படமோ காட்டுங்கள் எனக் கேட்க முடியாது. இதே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தங்க முடியாது என்று கூறினால் பெரும் பணச் செலவில் விடுதிகளைக் கட்டிவைத்து விட்டு நாம் ஈயோட்ட வேண்டியது தான். விடுதிக்கு இப்படி தவறான நடத்தைக்காக வருபவர்கள்தான், தவறை உணர்ந்து திருந்த வேண்டுமே தவிர நாம் என்ன செய்ய முடியும்?" என்று கேள்வி எழுப்புகின்றார் விடுதி ஒன்றின் உரிமையாளர்.

பாலியல் தொழில் என்பது மறைமுகமாக ஏதோ ஒரு வகையில் முன்னரும் இருக்கவே செய்தது. ஆயினும் இப்படி தொழில் முறை ரீதியாக பாலியல் தொழிலாளிகளை இறக்குமதி செய்து அதை மிகப் பெரிய வலைப்பின்னலோடு தொடர்புறுத்தி பணம் பார்ப்பதுதான் எல்லோரையும் அதிரச் செய்துள்ளது.

தமிழர்களின் கலாசாரம்,பண்பாடு என்பவற்றை மாத்திரமல்லாது எமது சமூக இருப்பையும் இழிநிலைக்கு கொண்டு செல்லும் இத்தகைய நரக விடுதிகளுக்கும்,அங்கு தொடரும் துர்நடத்தைகளுக்கும் முடிவுரையே இல்லையா?

## சட்டம் என்ன சொல்கிறது

2000 ஆம் ஆண்டு சார்க் அமைப்பின் விபச்சாரத்துக்காக பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தலுக்கு எதிரான தீர்மானங்களில் இலங்கை கையெழுத்திட்டதன் அடிப்படையில் 2005ம் ஆண்டின் 30ஆம் இலக்க சட்டத்தின்கீழ் விபச்சாரத்துக்காக சிறுவர்களையும் பெண்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது அதனுடன் தொடர்புபட்ட விடயத்துக்காக ஏதேனும் கட்டடத்தை முகாமை செய்கின்ற அல்லது அதனை அறிந்துகொண்டு நிதி உதவி செய்கின்ற அல்லது வாடகைக்கு விடுகின்ற நபர் குற்றம் புரிந்தவராவார். இதற்கான தண்டனையாக 3ஆண்டுகளுக்கு குறையாததும் 15 ஆண்டுகளுக்கு மேற்படாததுமான மறியல் தண்டனையால் தண்டிக்கப் படுவதுடன் அவர் திரும்பவும் அக் குற்றத்தை புரிந்தால் இரு மடங்கு தண்டனை விதிக்கப்படலாம். குற்றத்தை செய்பவர் மட்டுமல்ல உடந்தையாக செயற்படுபவர்களுக்கும் அதே தண்டனை விதிக்கப்பட முடியும் .

1995 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க மற்றும் 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தினாலும் 1883 ம் ஆண்டின் 2ம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை கூட்டிவிடுதல் பிரிவு 360 அ (05) சட்டத்தின் பிரகாரம் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதற்கென ஆளொருவரை சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி அவரின் வழமையான வசிப்பிடத்தை விட்டுச் செல்ல உதவுகின்ற அல்லது எத்தனிக்கின்ற ஆள் கூட்டி விடுதல் தவறு புரிந்தவராவார். இக் குற்றத்துக்காக 02 ஆண்டுகளுக்கு குறையாததும் 10 ஆண்டுகளுக்கு மேற்படாததுமான மறியல் தண்டனை வழங்கப்படுவதுடன் குற்றப் பணமும் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்படும்.

○ மௌனா

# மணிக்கதை



## யாத்திரை

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் இறை சிந்தனையில் வாழும் ஒரு நல்ல மனிதன் கடவுளை எப்படியும் நேரில் சந்தித்து விடும் ஆத்ம தேடலுடன் தன்னந்தனியாக நடந்து கொண்டிருந்தான்.

அதேபோல, தான் படைத்த படைப்புகளில் ஒரு நல்ல மனிதனை சந்தித்து அவனுக்கு அருளும் நோக்கு டன் பூமிக்கு வந்த இறைவன் தன் கண்ணில் படும் மனிதர்களுள் தான் தேடும் நல்ல மனிதன் ஒருவனாவது தென்படுகிறனா என்று ஆவலு டன் மனித ரூபத்தில் நடந்து கொண்டிருந்தார்.

ஒரு காட்டு வெளியில் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தது.

மனிதன் தன் சாயலில் எதிரே வந்த கடவுளை ஆச்சரியத்தோடு பார்த்தான். இந்தக் காட்டு வழியில் தன்னந் தனியாக இவர் எங்கே செல்கிறார் என யோசித்தான்.

ஒருவரையொருவர் அண்மித்ததும் இருவரும் வணக்கத்தை பரிமாறிக்கொண்டனர்.

கொவ்வைச் செவ்வாய் இறைவன் கேட்டார் "ஐயா இந்தக் கானகத்தில் தனியாக எங்கே செல்கிறீர்கள்?" தான் தேடி வந்த மனிதன் அவன்தான் என்பதையும் அவன் தன்னை தேடித்தான் அலைகிறான் என்பதையும் கடவுள் அறியாதவரா?

நடந்து களைத்து, தான் தேடும் கடவுளை இத்தனை நாளும் காணாத துயரத்தில் இருந்த மனிதன் நா தழுதழுக்க எதிரே நிற்பவர் தான், தான் தேடும் கடவுள் என்பதை உணராதவராகச் சொன்னான் "நான் கடவுளைத் தேடிப் போகிறேன்" .

கடவுள் குமிண் சிரிப்புடன் "நீங்கள் அவரைக் கண்டீர்களா?" என்றார்

தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. அது சரி நீங்கள் யார்? எங்கு செல்கிறீர்கள்? "என்றான் அந்த மனிதன்

"நான் ஒரு நல்ல மனிதனை உண்மையான பக்தனைத் தேடிப்போகும் ஒருவன்" எனப் பதிலளித்தார் கடவுள்.

"அப்படியா நீங்கள் அவனை இன்னும் காணவில்லையா?" இது மனிதனின் கேள்வி

"ஓ.. இதோ பார்த்துக் கொண்டிருக்கிறேனே!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"நீங்கள்தான் அந்த மனிதன்... பக்தன்"

"என்ன சொல்கிறீர்.... புரியவில்லையே....?"

"நான் தான் நீர் தேடும் கடவுள்.... நீங்கள்தான் நான் தேடும் பக்தன்.."

மனிதன் பலமாகச் சிரித்து விட்டு, "எனக்கென்ன பைத்தியமா உம்மைக் கடவுள் என்று நம்புவதற்கு...?" என்று கூறியபடி தன் பய ணத்தைத் தொடர ஆரம்பித்தான்.

இரண்டடி எடுத்து வைத்து விட்டு அவன் திரும்பிப் பார்க்கவும், கடவுள் குமிண் சிரிப்புடன் மறை யவும் சரியாக இருந்தது.

(19ஆம் பக்க தொடர்ச்சி)

# 101



"நான் முதல் முதலாகப் பார்த்த திரைப்படம் "சிந்தாமணி". அந்தப் படத்தின் காட்சிகள் எல்லாம் இன்றுவரை நினைவில் இருக்கிறது. எனக்குப் பிடித்த படமும் அதுவே. அதன் பிறகு சிவாஜிகணேசன், கே.பி.சுந்தரம்பாள்,தியாகராஜ பாகவதர் போன்ற நடிகர்களின் திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பேன். நகைச்சுவை நடிகர் நாகேஸின் பம்பல்கள் உள்ள படங்கள் என்றால் எனக்கு அலாதிப்பிரியம்" என்று திரைப்பட நினைவுகளில் மூழ்கி எழுந்தவர், தன் பள்ளிக்காலச் சம்பவம் ஒன்றையும் எடுத்துவிட்டார்.

"பாடசாலைக் காலத்தில் நான் பழகிய நவரத்தினம் வாத்தியார் , பொன்னுத்துரை வாத்தியார் என்ற இருவரையும் என்னால் மறக்க முடியாது. ஒரு நாள் நான் வருத்தமென்று பொய் சொல்லி விட்டு, பள்ளிக்கூடம் போகவில்லை. அன்று நான் சைக்கிளில் கடைக்குப் போகும் போது இடையில பொன்னுத்துரை வாத்தியாரை கண்டேன். ஆனால் அவர் என்னைக் காணவில்லை. கண்டால் தோலை உரிச்சுப்போடுவார். அப்படியே சைக்கிளைத் திருப்பிக் கொண்டு ஒரே ஓட்டம். ஓடும் போது வழியில விழுந்து காலில் பெரிய காயம். இதைவிட அவரிடம் அடிவாங்கியிருந்தால் கூடப் பரவாயில்லை என்றாகிவிட்டது. இப்போது கூட எனக்குப் பொன்னுத்துரை வாத்தியார் என்று சொன்னாலே ஒரு பயம் தான்" என்று தன் ஆசிரியர்கள் மீதான பக்தியை வெளிப்படுத்தினார்.

பள்ளிக்கூட நினைப்பு வந்ததுமே அவர் உதடுகள் "ருவிங்கிள் ருவிங்கிள் லிட்டில் ஸ்ரார்" என்று பாலர் காலத்துப் பாடலை முணுமுணுக்கத் தொடங்க , அவர் தன் குழந்தையுலகில் உலவத் தொடங்கினார். அவரது குடும்பத்தினரின் அரவணைப்பில் அவர் அன்பெனும் கடலில் இன்னும் நூறாண்டுகள் நீந்த வாழ்த்திவிட்டுப் புறப்பட்டோம்.

சூரியன்

# அறிந்தும் அறியாமலும்



## பெருந்தலைகள் சங்கமம்

ஐக்கிய மக்கள் சக்தியை பலமானதொரு அரசியல் கூட்டணியாக கட்டியெழுப்பும் முயற்சியில் சஜித் பிரேமதாச தீவிரமாக இறங்கியுள்ள நிலையில் அவரின் கரங்களைப் பலப்படுத்தும் வகையில் பிரதேச அரசியல்வாதிகள் சஜித் அணியில் இணையவுள்ளனர். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக்கட்சி மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களே இவ்வாறு அரசியல் குத்துக்கரணம் அடிக்கவுள்ளனர். கடந்தவாரம் சிலர் கட்சிதாவிய நிலையில், அடுத்தவருடம் ஆரம்பத்தில் மேலும் சிலர் சஜித் அணியில் இணையவுள்ளனர். மாகாணசபைத் தேர்தலை இலக்குவைத்தே இந்தத் தாவல்கள் இடம்பெறுகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அதேவேளை, ரணில் அணியிலுள்ள முக்கிய புள்ளியான நவீன் திஸநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளார் எனவும், அர்ஜுன ரணதுங்கவும் இதே நிலைப்பாட்டில் இருக்கின்றார் எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நவீன் திஸநாயக்கவின் தம்பியான மயந்த திஸநாயக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் சம்பிக்க ரணவக்கவும் ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெறுவார் எனவும் நம்பப்படுகின்றது. எனினும் ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்தும் இயங்கும். அதன் பொறுப்புகள் முக்கிய தேரர் ஒருவரிடம் கையளிக்கப்படவுள்ளன.

## பட்ஜெட்டை ஆக்கிரமித்த மாவீரர்கள்!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைபை நிறைவேற்றும் போதிருந்த ஆதரவு குறைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

20 க்கு 'ஆமாம் சாமி' போட்ட எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள் ஐவர், பட்ஜெட் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நழுவியிருந்தனர். ஜனாசா விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டே அவர்கள் இவ்வாறு நழுவல் போக்கைக் கடைப்பிடித்தனர். ஆனால் எதிர்த்து வாக்களித்து அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் துணிவு அவர்களுக்கு இருக்கவில்லை . எதிர்காலத்தில் இதனை அரசியல் இராஜதந்திரம் என்றுகூட விளித்து சமூகத்தின் மத்தியில் அவர்கள் வீராப்பு பேசக்கூடும்.

இம்முறை வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் காட்டிலும் கொரோனா வைரஸ், நினைவேந்தல் நிகழ்வு, மாவீரர் தினம், முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிப்பு, மஹர சிறைச்சாலை கலவரம் ஆகியவை தொடர்பிலேயே சபையில் கூடுதலாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. விவாதத்தின் இறுதி நாளன்றும் இவ்விவகாரங்கள் சபையில் சூடுபிடித்திருந்தன.

வழமையாக நவம்பர் மாதத்திலேயே பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறும். அக்காலப்பகுதியிலேயே மாவீரர் தினம் நினைவேந்தல் நடைபெறும். அது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும். அந்தவகையில் இம்முறையும் 'பட்ஜெட்' விவாதத்தில் மாவீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

## 5ஆம் திகதி ஹவுஸ்புல்!

பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி, எமது மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளும் தேசிய பட்டியல் எம்.பிக்களை நியமிக்கா ததால் இதுவரையில் இரு எம்.பிக்கள் இல்லாமல்தான் சபை நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

இவ்விரு கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் ஊடாக தலா ஒரு ஆசனம் வீதம் கிடைத்தது. எனினும், உட்கட்சி மோதல்களால் உறுப்பினர்களை நியமிக்கமுடியாமல் திண்டாட்டம் தொடர்கின்றது.

எனினும் எதிர்வரும் 5 ஆம் திகதி இவ்விரு கட்சிகளும் தமது உறுப்பினர்களை சபைக்கு அனுப்பும் என அக் கட்சிகளின் உள்வீட்டு தகவல்கள் தெரிவித்தன. இதன் மூலம் சபையும் முழுமைப்பெறும். அதாவது 225 உறுப்பினர்களும் சபைக்கு தெரிவுசெய்யப்பட்டு விட்டனர் என்ற நிலை உருவாகும்.



## தலைவராகிறார் ஜீவன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக ஜீவன் தொண்டமான் நியமிக்கப்படவுள்ளார் என காங்கிரஸின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தேசியசபை விரைவில் கூடவுள்ளது எனவும் இதன்போதே புதிய தலைவர் தேர்வு இடம்பெறும் எனவும் அறியமுடிகின்றது. இதன்படி தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகிய இரு பதவிகளையும் ஜீவனே வகிப்பார் எனக் கூறப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவையடுத்து, காங்கிரஸின் தலைமைப்பதவி இன்னும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. பொதுச்செயலாளராக பதவி வகித்த அனுசியா உப தலைவராக நியமிக்கப்பட்டு, பொதுச்செயலாளர் பதவி ஜீவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே தலைவர் பதவியும் அவர் வசம் செல்லவுள்ளது. மறுபுறத்தில் செந்தில் தொண்டமானும் தலைவர் பதவியை எதிர்பார்த்து காத்திருக்கிறார். இதனால் பெரும் பரபரப்புக்கு மத்தியிலேயே தேசிய சபைகூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஒற்றுமை சாத்தியமா?

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தெற்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கும் வகையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் அமைக்கும் யோசனையை நல்லாட்சியின்போது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் முன்வைத்திருந்தார். எனினும், அந்தத் திட்டம் கைகூடவில்லை. தற்போது அதற்கான முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் கூட்டணியாக அல்லாது, குறைந்தபட்சம் நாடாளுமன்றத்துக்குள்ளாவது கூட்டணியாக செயற்படுவது தொடர்பில் ஆழமாகப் பரீசிலிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் கையொப்பமிட்டு இதற்கு சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஓரணியில் செயற்படுவதன்மூலம் புதிய அரசமைப்பு உள்ளிட்ட விடயங்களின்போது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு அது பெரும் பலமாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது வடக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டு செயற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியமும் சாத்தியப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆனால் ஆளுங்கட்சி பக்கமுள்ள தமிழ் அரசியல்வாதிகளை இணைத்துக்கொள்வதா என்பது பற்றி இன்னும் கவனம் செலுத்தப்படவில்லை. நாடாளுமன்றத்தில் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை


இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

23



**மாணவர்கள், சில பல்கலைக் கழக கற்கைநெறிகளைத் தவிர்க்கும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டுத் தமது பெறுபேற்றுக்கு அமைய விண்ணப்பிக்கக்கூடிய கற்கைகள் அனைத்துக்கும் விண்ணப் பிக்கவேண்டும். சில சந்தர்ப்பங் களில் முதல் படிவம் அனுப்பு கின்ற வேளையில் தவிர்க்கப்படும் ஒரு கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருக்கலாம் என பின்னர் ஏங்குகின்ற பல மாணவர்கள் உள்ளனர்.**

கடந்த சில வாரங்களாக பல்கலைக்கழக அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்டு எமது மாணவர்கள் இழைக்கும் தவறுகள், எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகளும் சம்பவப் பின்னணிகளின் அடிப்படையிலும் கட்டுரையாளரின் தொழில்சார் அனுபவத்தின் அடிப்படையிலும் முன்வைக்கப்பட்டன.

இவ்வாரம் தொடக்கம் அடுத்துவரும் இரண்டு வாரங்கள் பல்கலைக்கழக கற்கைநெறி ஒன்றைத் தெரிவுசெய்வதில் கவனம் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும், அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதற்குப் பின்னாக அக்கறை கொள்ளப்படவேண்டிய சில முக்கியமான விடயங்கள் குறித்தும் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தத்தக்க விதத்திலான கருத்துக்கள் சிலவற்றை முன்வைத்து இக் கட்டுரைத் தொடரின் முதற் பகுதியை நிறைவு செய்யலாம் என நினைக்கின்றோம். பல்கலைக்கழக கற்கைநெறியொன்றைத் தெரிவுசெய்வதில் கவனம் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் கணித உயிரியல் விஞ்ஞானப் பிரிவுகளில் தோற்றி முதன்மை நிலையில் சித்தியடையும் மாணவர்களைத் தவிர்த்து, ஏனைய அத்தனை மாணவர்களும் பிரதானமாக எதிர்நோக்கும் சவால், எந்த பல்கலைக்கழக கற்கைநெறிக்கு முக்கியத்துவம் கொடுத்து தெரிவுசெய்வது என்பதாகும்.

தற்போதைய சூழ்நிலையில் உயர்தரப் பரீட்சையில் சராசரிக்கு மேலான பெறுபேறுகளையும், சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திக்கு மேற்பட்ட பெறுபேறுகளையும் கொண்ட எந்தவொரு பிள்ளையும் மும்பதுக்கு குறையாத பல்கலைக்கழகக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் ஒவ்வொரு பிள்ளைகளும் பல்கலைக்கழக அனுமதிக்கான முதற் படிவத்தை நிரப்பும்பொழுது எதிர்கொள்கின்ற பிரதான சவால், கற்கைநெறித் தெரிவு மற்றும் அவற்றுக்கான முன்னுரிமை ஒழுங்குகளை முறைப்படுத்துவது என்பதாகும். கணித, உயிரியல் பிரிவுகளில் முதல்நிலையிலுள்ள மாணவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற முதன்மை கற்கைகளுக்குள் தெரிவுசெய்யப்படுவதனால், அவர்கள் இத்தகைய சவால்களை எதிர்கொள்வதில்லை. ஏனைய பிள்ளைகள் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்வது நன்று என்பது கட்டுரையாளரின் கருத்தாகும்.

1.பிள்ளைகள் தமது தனிப்பட்ட ஆற்றல் மற்றும் விருப்பம் என்பவற்றை முதன்மைப் படுத்தவேண்டும்

2.சில சந்தர்ப்பங்களில் கற்கை நெறிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட பல்கலைக் கழகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாக இருக்கும்

3.புதிதாக அறிமுகப்படுத்தப் படும் கற்கைநெறிகளில் முதலாம் இரண்டாம் அணி மாணவர்களாக இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக் குறித்து ஆராய்தல்

4.பல்கலைக்கழக அனுமதிக் கான கைநூலுக்கு அப்பால் குறித்த பல்கலைக்கழகங்களின் இணையத்தளங்களுக்கு சென்று கற்கை நெறிகளின் ஆழம் மற்றும் அகலம் குறித்து ஆராய்தல்.

5.குறித்த கற்கையை நிறைவுசெய்து வெளியேறிய மாணவர்கள் தற்போதுள்ள நிலைகளின் பின்புலங்கள் குறித்து சற்று ஆராய்தல், மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் எடுப்பதன் மூலமாக சிறந்த கற்கைகளை தெரிவுசெய்யக்கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு பிள்ளைகளிடமும் ஒவ்வொருவிதமான தனித்துவமான ஆற்றல்கள் நிறைந்திருக்கும். உயர்தரத்தில் வழங்கப்பட்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட கற்றல் வாய்ப்புகளுக்குள் அவர்கள் தங்களை மட்டுப்படுத்தி இருப்பார்கள். ஆனால் பல்கலைக்கழக கல்வி எனும் சூழ்நிலையில் அவர்கள் தங்கள் தனித்துவ ஆற்றல்களை மையப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான பல வாய்ப்புக்கள் உள்ளன.

உதாரணமாக விளையாட்டுத் துறையில் சிறப்பாக சாதிக்கும் பிள்ளைகளுக்கான கற்றல் வாய்ப்புகள் தற்போது ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் வழங்கப்படுகின்றன. அதுபோன்று ஆற்றுகைத்துறையில் ஈடுபாடு உடைய எந்தப் பிரிவைச் சேர்ந்த பிள்ளையும் துறைசார்ந்த ஈடுபாட்டுடன் முன்னோக்கிச் செல்வதற்கான கற்கைகள் சில பல்கலைக்கழகங்களில் உள்ளன. அதுபோன்று எதிர்கால தொழில் வாய்ப்புக்களை மையப்படுத்தி தமது துறைகளைத் தெரிவு செய்து கொள்ளத்தக்க விதத்திலான கற்கைகளும் உள்ளன.

குறிப்பாக ஊடகத்துறை,மொழிபெயர்ப்புத் துறை, இணை சுகாதாரத்துறை என பல்வேறு கற்கைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். எனவே ஒரு பிள்ளை, ஒரு பல்கலைக்கழக கற்கையைத் தெரிவு செய்யும்போது தனது தனிப்பட்ட திறமை, விருப்பம் என்பவற்றை முதலில் முதன்மைப்படுத்த வேண்டும் அடுத்த மிக முக்கியமான விடயம், கற்கை நெறிகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்துக்குச் சமாந்தரமாக பல்கலைக்கழகங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்பது கட்டுரையாளரின் ஆலோசனையாகும். காரணம், ஒரு மாணவனின் ஆளுமை விருத்தியில் தனிப்பட்ட ரீதியில் பல்கலைக்கழகங்களும் அவற்றின் சூழலும் செலுத்தும் செல்வாக்கு அளவு கடந்தது. குறிப்பாக மாணவனின் மொழிப்புலமை, சமூகமயமாகும் தன்மை மற்றும் மேற்படிப்புக்கள் என்பவற்றில் பல்கலைக் கழகங்கள் கனதியான வகிபாகத்தை கொண்டுள்ளன. இவற்றைக் கருத்தில்கொண்டு எமது வடபுல மாணவர்கள் பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்வதில் அக்கறை எடுக்கவேண்டும். இலங்கை ஒரு பன்மைத்துவ கலாசாரம்,மொழி மற்றும் பண்பாட்டைக் கொண்ட நாடு எனும் அடிப்படையில் எமது மொழிப்புலமை எமது எதிர்கால முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும். மொழியாற்றலை இலகுவாக உள்வாங்கிக் கொள்ளத்தக்க சூழ்நிலைகளை பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன. இதனைக் கருத்தில் எடுப்பது மிக அவசியமானது.

அதுபோன்று புதிதாக அறிமுகப்படுத்தப்படும் கற்கைகளுக்குள் முதலாவது இரண்டாவது அணி மாணவர்களாக நுழைவது வேலைவாய்ப்புச் சந்தையில் கேள்வியை அதிகரிக்கும். அத்துடன் பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் பட்டப்படிப்புகள் தொடர்பான ஒரு மேலோட்டமான விபரமே பல்கலைக்கழக அனுமதிக்காக வெளியிடப்படும் கைநூலில் குறிப்பிடப்படுவதுண்டு.

சில பல்கலைக்கழகங்கள் மட்டும் தமது கற்கைகள் தொடர்பான சற்று விரிவான விளக்கங்களை கைநூலில் வழங்கியுள்ளன.

இருந்தபோதும் பல தகவல்கள் அந் நூலில் கிடைப்பதில்லை. இந்நிலையில் மாணவர்கள் குறித்த பல்கலைக்கழகத்தின் இணையத்தளங்களுக்குச் சென்று அங்கு வழங்கப்பட்டிருக்கும் விவரங்களை ஆழமாகவும் அகலமாகவும் ஆராயவேண்டும். அதன் ஊடாக குறித்த கற்கைகளுக்குத் தெரிவுசெய்து பின்னர் அதனை அடிப்படையாக வைத்து விசேட கற்கையாக கற்கக்கூடிய துறைகள் குறித்து ஆராய வேண்டும்.

குறிப்பாக தொழில்நுட்பத்துறை சார்ந்து பிள்ளைகளுக்கு தற்பொழுது பல பல்கலைக்கழகங்களில் புதிய முன்னேற்றகரமான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றமை இவ் விடயத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. நிறைவாக, மாணவர்கள் ஒரு முக்கிய விடயத்தை கருத்தில் கொள்ளவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் தொழில்சார் கற்கைகள் என்கின்ற அடிப்படையில் மிகக் குறைவான எண்ணிக்கையான கற்கைகளை மட்டுமே குறிப்பிட முடியும். மருத்துவம்,பொறியியல், சட்டம், இணை சுகாதார கற்கைகள், கட்டக்கலை ஆகிய கற்கைகள் தவிர்த்து ஏனைய மாணவர்கள் தமது தொழில்சார் எதிர்காலத்தை தீர்மானம் செய்து கொள்ள முடியாத சூழ்நிலையிருக்கின்றது. இச் சூழ்நிலையில் பட்டமென்பதை ஓர் அடிப்படைத் தகுதியாக வைத்து பின்னர் மாணவர்கள் எடுக்கின்ற முயற்சி, தனிப்பட்ட திறமை அடிப்படையிலேயே அவர்கள் தொழில்சார் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் முன்னேறவும் வேண்டியிருக்கின்றது.

எனவே மாணவர்கள், சில பல்கலைக்கழக கற்கை நெறிகளைத் தவிர்க்கும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டுத் தமது பெறுபேற்றுக்கு அமைய விண்ணப்பிக்கக்கூடிய கற்கைகள் அனைத்துக்கும் விண்ணப்பிக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் முதல் படிவம் அனுப்புகின்ற வேளையில் தவிர்க்கப்படும் ஒரு கற்கைக்கு விண்ணப்பித்திருக்க லாம் என பின்னர் ஏங்குகின்ற பல மாணவர்கள் உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஆழமான கரிசனையைச் செலுத்துவதன் மூலமாக மாணவர்கள் தமக்குப் பொருத்தமான எதிர்காலத்தில் தமது தொழில் சார்ந்த வாழ்க்கையை சிறப்பாக கட்டமைக்கத்தக்க கற்கைகளை தெரிவுசெய்துகொள்ள முடியும் என்பது கட்டுரையாளரின் அபிப்பிராயமாகும்.

அத்துடன் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரும் அதனை பதிவுசெய்தல், அதற்குப்பின் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளில் மாணவர்கள் விடும் தவறுகள் காரணமாகவும் வாய்ப்புகளை இழக்கும் சூழ்நிலைகள் இருக்கின்றன. இவை குறித்து அடுத்தவாரம் ஆராயலாம்.

(தொடரும்)



# யாழ். மாநகரசபை முதல்வருக்கு அவசரமா ஒரு கடிதம்

ஐயா வணக்கம்.
சுகம் விசாரிக்கிற மனோநிலையிலை நான் இப்ப இல்லை. நேர விசயத்துக்கு வாறன்.

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் யாழ்.மாநகர எல்லைக்குள்ளை பொலித்தீனையும்,பிளாஸ்ரிக்கையும் தடை செய்யப் போறன் எண்டு சொல்லி நீங்கள் அறிக்கை விட்டது ஞாபகத்திலை இருக்கோ. மறந்தால் ஒருக்காப் பேப்பரைப் பிரட்டிப் பாருங்கோ. அப்ப தெரியும். அண்டைக்கு சொன்னமாதிரி பொலித்தீனையும்,பிளாஸ்ரிக்கையும் கட்டுப்படுத்தி இருந்தால் இப்ப பெய்த மழைக்கு ஆஸ்பத்திரிக்குள்ளையும் வெள்ளம் போயிருக்காது. கடைகண்ணியளுக்கையும் தண்ணி உள்ளிட்டு இவ்வளவு சேதமும் வந்திராது. மழைவெள்ளம் ஓடாமல் தடைப்பட்டு நிண்டதுக்கு ஆஸ்பத்திரியைச் சுத்தி இருக்கிற பெரிய வாய்க்காலுக்கை பொலித்தீனும், பிளாஸ்ரிக் தண்ணிப் போத்திலுகளும் போய் அடைச்சுக் கிடந்ததுதான் காரணம் .

அது மட்டுமில்லை, யாழ்பாண எல்லைக்குள்ளை கன இடங்களிலை ரொய்லட்டுகளுக்க வெள்ளம் உள்ளிட்டதாலை மலம் வந்து எல்லா இடங்களிலையும் மிதக்கத் துவங்கிவிட்டுது. ரொய்லெட்டுக்க தண்ணிபோய் குடி தண்ணி அள்ளுற கிணத்துக்கை வடிஞ்சதாலை என்ன நடந்திருக்குமெண்டு நினைக்கிறியள்? அப்ப சுகாதாரக் கேட்டைப் பற்றிச் சொல்ல வேணுமோ? சனத்துக்குக் கொரோனாவும் வரும். அதுக்கு மேலை ஒண்டு இருந்தா அதுவும் வரலாம்.... சிரட்டேக்கை ஒரு சொட்டுத் தண்ணி நிண்டாலே வழக்குப் போடுற பீ.எச்.ஐ மார் யாழ்ப்பாணத்திலை நிக்கிற வெள்ளத்துக்கு ஆருக்கு எதிராய் வழக்குப் போடப் போயினமாம்?

யாழ்ப்பாண ரவுணுக்கை வெள்ளம் நிண்டதுக்கு அந்தந்த நேரத்துக்கு குப்பை கூழங்களை அகற்றாததும் ஒரு காரணம் எண்டு சனம் கதைக்குது. நீங்கள் பொலித்தீனை இல்லாமலாக்க பிளான் போட்டதும் சரி, பிரேரணை கொண்டு வந்ததும் சரி. ஆனால் அதிலை என்னத்தை நடைமுறைப்படுத்தினனீங்கள்?

நீங்கள் மேயராய் வந்த பிறகு இதுவரை நீங்கள் கொண்டு வந்த திட்டங்கள் என்னென்ன? அதிலை எத்தினையைச் செய்தனியள் எண்டதைப் பட்டியல் போட்டுத் தாங்கோ பாப்பம்.நானறிய நீங்கள் வந்து செய்த சாதனை என்னெண்டால் உங்கடை வசதி வாய்ப்புகளை ஒழுங்குபடுத்தினதும், சட்டவிரோதமா ஒருத்தரிட்டையும் அனுமதி எடுக்காமல் கம்பங்களைக் கொண்டு வந்து இரவிரவா நட்டதுந்தான் எண்டு எனக்கு நல்லாத் தெரியும். கடைசியா நீங்கள் கொண்டுவந்த வரவுசெலவுத் திட்டமும் தோல்வியாப் போச்சுது. அதுக்கு என்ன செய்யப் போறியள்? சனத்துக்கு என்ன சொல்லப் போறியள்?

முன்னம் எங்கடை ஆக்கள் யாழ்ப்பாணத்திலை பெய்யிற மழைத் தண்ணி வடிவாக் கடலுக்கு வழிஞ்சோடக்கூடிய மாதிரித்தான் எல்லா வசதிகளையும் செய்தவை. இடையிடை குளங்களைக் கட்டித் தேக்கி, வடிவாப் பிளான் போட்டுத்தான் அதைக் கட்டினவை.

ஆனால், தண்ணி ஓடுறபாதையிலை உள்ள தேக்கங்களிலை றீகல் தியேட்டருக்கு முன்னாலை உள்ள புல்லுக்குளத்தை இந்திய அரசாங்கம் கட்டுற கலாசார மையத்துக்கு எடுத்து சுத்தமாக்கிறம் எண்டு சொல்லிப்போட்டு மழைத் தண்ணி ஓடுற பாதையைத் தடுத்துப் போட்டியள். அதுக்கு மாற்று வழி என்ன செய்தனியள்?அதைச் செய்யாதது ஆற்றை குற்றம்?

அதை விடுங்கோ. பல காலம் சனம் நிண்டு தொழில் செய்த வின்சர் தியேட்டருக்கு முன்னாலை உள்ள குளத்தைத் தூராக விட்டிட்டியள். பத்தாததுக்கு அதிலை தியேட்டர்கார அரசியல்வாதி கடையளைக் கட்டி தன்ரை ஆக்களுக்கு குடுத்துப் பசியாறிட்டார். இண்டுவரை அந்தக் கட்டடத்துக்கு அனுமதியும் எடுக்கேல்லையாம். அப்ப மேயராக வந்த நீங்கள் இண்டைவரை அதைப் பற்றி ஏதேனும் வாய் திறந்தனியளோ? சரி கதைக்கப் பயத்திலை விட்டிருப்பியள்.ஆனாலும் குளத்தைத் தூர்வாரி சுத்தப்படுத்தி இருக்கலாமே. அதையும் செய்யேல்லை.

அங்காலை நாகவிகாரைக்குப் பக்கத்திலை இருக்கிற வாய்க்காலுக்கை ஊத்தைத் தண்ணி வரப்படாது எண்டு தடுப்புக் கட்டினவை. அதைத் தன்னும் தட்டிக் கேட்டிருக்கலாம். அதையும் செய்யேல்லை. அதுக்குப் பக்கம் இருக்கிற ஆரிய குளம் என்ன பாவம் செய்ததோ தெரியாது. யாழ்ப்பாணத்தைப் பாக்க தெற்கிலை இருந்து வந்த சனம் எறிஞ்ச தண்ணிப்போத்தல் , லஞ்ச் சீற், பொலித்தீன் பைகள்,பம்பஸ் எண்டு எல்லாம் அதுக்கைதான் கிடக்கு. அனாதை மாதிரி ஆரிய குளமும் எந்தப் பாரமரிப்பும் இல்லாமல் கிடக்கிறதைப் பாக்க வயிறெரியுது.

இப்பிடித்தான் எல்லாத்தையும் நேரகாலத்துக்குச் செய்யாமல் விட்டிட்டு இப்ப கிடந்து கத்திறம். இப்ப இதை வாசிச்சாப் பிறகாவது உங்களுக்கு ரோசம் வருகுதோ எண்டு பாப்பம்.

தங்கள் மேல் அதிபட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.

# நான் டோனியில்லை!

ஆர்.லயன்



டோனிபோல் என்னால் வேகமாக இலக்குக்காப்பில் ஈடுபட முடியாது என்று தெரிவித்து இந்திய ரசிகர்களின் மனங்களை வென்றுள்ளார் ஆஸ்திரேலிய வீரரான மத்தியு வேட்.

இந்தியா ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி 20 ஆட்டத்தின்போது தவானை ஸ்டம்பிங் செய்ய முயன்றார் வேட். ஆனால் பந்தை அவர் போதுமான வேகத்துடன் கையாளவில்லை. இதனால் தவான் ஆட்டமிழக்காமல் தப்பித்தார்.

இதையடுத்தே களத்தில் அடுத்த நிமிடமே தவானிடம் 'டோனிபோல் என்னால் வேகமாகச் செயற்பட முடியாது' என்று தெரிவித்தாராம் வேட். இது இலக்குகளில் பொருத்தப்பட்டிருந்த ஒலிவாங்கிகளில் பதிவாகி ஐ.சி.சியின் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இது மட்டுமல்ல இன்னும் பல விடயங்களில் தனது தூய்மையான இதயத்தை நிரூபித்தவர்தான் இந்த வேட். பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிமித்திடம் இருந்து பறிக்கப்பட்ட தலைமைத்துவத்தை மீண்டும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருந்தார். அத்துடன் கடந்த மூன்று வருடங்களின் முன்னர் பவுன்சரால் தாக்கப்பட்டு இறந்த பிலிப் ஹியூக்ஸின் டெஸ்ட் ஜெர்சி இலக்கத்தை (408) இன்று வரை தனது துடுப்பு மட்டையில் பொறித்து விளையாடி வருகின்றார் வேட். அத்துடன் ஹியூக்ஸின் உருவப் படத்தை தன் கைகளில் பச்சை குத்தியும் வைத்துள்ளார்.

**'வேட் , வேட்டைக்காரனில்லை,வெள்ளாந்தி!'**



# மெஸ்ஸி எதிரியல்ல

கால்பந்தாட்டத்தின் இரு துருவங்களான மெஸ்ஸி, ரொனால்டோ இருவரையும் பரம எதிரிகளாக இணையவாசிகள் சித்திரிக்கும் நிலையில், மெஸ்ஸி எதிரியல்ல என்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார் ரொனால்டோ.

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் மெஸ்ஸி, ரொனால்டோ இருவரும் களத்தில் கடந்த புதனன்று அதிகாலை (இலங்கை நேரப்படி) மோதினர். ரொனால்டோ இரு கோல்களைப் பதிவுசெய்ய யுவென்டஸ் 3:0 என்ற கணக்கில் வென்றது. மெஸ்ஸி கோல்களைப் பதிவு செய்யவில்லை. ரொனால்டோவின் ரசிகர்கள் பார்சிலோனாவின் இந்தத் தோல்வியை மெஸ்ஸியின் தோல்வியாக சித்திரிக்க பாடாய்ப் பட்டனர். ஆனால் ரொனால்டோவோ, 'ஒவ்வொரு வீரருக்கும் கடினமான காலகட்டம் இருக்கும். இது மெஸ்ஸிக்குரியது. இனி எனக்கும் வரலாம்' என்றுவிட்டுக் கடந்து சென்றுள்ளார். அத்துடன் நின்றுவிடவில்லை. 'மெஸ்ஸியை தாம் ஒரு போதும் எதிரியாகப் பார்த்தது கிடையாது' என்றும் தெரி வித்து விமர்சகர்களுக்கு 'பளார்' விட்டுள்ளார் அவர்.

**'அடிச்சாலும் பிடிச்சாலும் நண்பேண்டா!'**

# நடராஜன் எனும் சொத்து

இந்திய அணியின் தலைவரான கோலி, நடராஜன் தமது சொத்து என்று தெரிவித்துள்ளார். அத்துடன் ரி-20 உலகக்கிண்ணத் தொடரிலும் நடராஜன் விளையாடுவார் என்றும் கோலி நம்பிக்கை தெரிவித்தார்.

ரி - 20 உலகக்கிண்ணத் தொடர் ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான அணி தொடர்பில் தற்போதே கவனம் செலுத்தியுள்ளது இந்தியா. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றமை இந்திய அணிக்குக் கூடுதல் சாதகம். இந்தத் தொடரில் நடராஜன் எதிர்பாராத அளவுக்குச் சிறப்பாக விளையாடினார். இதையடுத்தே அவரை தாராளமாகப் புகழ்ந்துள்ளார் கோலி. இடதுகை வேகப்பந்து வீச்சாளராக நடராஜன் இருப்பது தனது கூடுதல் பலம் என்றும், நடராஜனின் பணிவு பிடித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார் கோலி.

**'கோழிதான் கொக்கரிக்கும். ஆமை அப்படியல்லவே'**

